
# அச்சு மத்திய தீபம்

2009

சுடர் 1

## யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி



## நோக்கு

சமூகப் பொருத்தப்பாடும், தேசிய சர்வதேசிய தரத்திலான கல்வி அறிவும், வினைத்திறனுமுடைய நற்பிரசைகளை உருவாக்கல்.

## பணி

* கலைத்திட்ட செயற்பாடுகள் மூலம் சகல துறைகளிலும் கல்லூரியை மிளிரச் செய்தல்.

* விளையாட்டுத் துறையால் வரும் பயன்களை மாணவர்கள் நுகர வழி செய்தல்.

* மாணவர்களிடையே தன்னம்பிக்கை விடாமுயற்சி ஆகிய பண்புகள் வளரக் கூடிய நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.

* கணணி ஆங்கில அறிவை மேம்படுவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுத்தல்.

## VISION

Raising worthy citizens with skills that make them capable of meeting both national and international requirements successfully.

## MISSION

* Putting our school on the map in all curricular activities.

* Making students enjoy the pleasures derived from active participations in sports.

* Undertaking programmes that contribute to self - confidence and hard working of the students.

* Undertaking programmes to enhance knowledge of computer and English.

கு. கந்தசாமி

# யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி
## அச்சுவேலி

EVER SHINING LIGHT

1892

ATCHUVELY CENTRAL COLLEGE

# அச்சு மத்திய தீபம்

## சுடர் – 1

## நூல் தரவுகள்


நூலின் பெயர் :- "அச்சு மத்திய தீபம்"

நூலாசியர் :- செல்வி யோ. செல்லமுத்து


பதிப்புரிமை :- மலர்க் குழு

தாள் :- B5, 70g, வெள்ளைத் தாள்

பக்கங்கள் :- XXXXX - 78

முதல் பதிப்பு :- 2009, ஐப்பசி 23.

அச்சுப் பதிப்பு :- ஷாம்பவி பதிப்பகம்.
நீர்வேலி & யாழ்ப்பாணம்.
021 2224143

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் மறிந்து
வளர் மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# கல்லூரிக் கீதம்

அச்சுவேலி மத்திய கல்லூரி அன்னையே வாழி
இச்செகத்தில் கல்விகலை இன்பமுடன் ஊட்டும் எங்கள்
(அச்சுவேலி)

மெச்சு தமிழ் பண்புடனே பண்பாடும் நல்கியே
அச்சமின்றி வாழ்ந்திடவே அறிவொளியை ஊட்டும் எங்கள்
(அச்சுவேலி)

எழுத்தறி வித்திடும் இறைவனைப் பணிகுவோம்
வழுத்தியே வாத்துவோம் வாழும் கல்வி ஊட்டுவாள்
பழுத்திடும் செந்தமிழ் பழச்சுவை மாந்துவோம்
செழித்திடும் மெஞ்ஞானம், விஞ்ஞானம் நல்குவாள்
(அச்சுவேலி)

ஒன்று எட்டு ஒன்பதிரண்டு ஒருங்கிணைந்த ஆண்டிலே
அன்றொளிர்ந்த தீபமே அறிவுதரும் நிலையமே
அதிபர் ஆசிரியரை அனுதினம் பணிகுவோம்
துதி செய்தே என்றும் நாங்கள் இனிய  கீதம் பாடுவோம்.
(அச்சுவேலி)

# மலரின் உள்ளே...


☞ பு. வை. சிவஸ்ரீ விருத்தகிரீசக் குருக்களின் ஆசிச்செய்தி - I
☞ தென்னிந்தியத் திருச்சபை அச்சுவேலி வண. போதகர் T. கிருபைநாதன் அடிகளாரின் ஆசிச்செய்தி - II
☞ கௌரவ சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் K. N. டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வாழ்த்துச்செய்தி - III
☞ அரச அதிபரின் வாழ்த்துச்செய்தி - V
☞ மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி - VI
☞ வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி - V
☞ கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி - VIII
☞ கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி - IX
☞ பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் வாழ்த்துச்செய்தி - X
☞ பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச்செய்தி - XI
☞ கனடா பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துச்செய்தி - XII
☞ பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி - XIII
☞ இதழாசிரியரின் பேனாவில் இருந்து - XXXXIX
☞ ஒளிரட்டும் கல்வித் தீபம் - XXXXX
☞ ஆசிரியர்கள் செயலாற்றங்களைஉயர் மட்டத்தில் முகாமை செய்தல் - 01
☞ பாரதிதாசனின் அழகின் சிரிப்பு - 07
☞ சம்பந்தர் தேவாரம் காட்டும் பண்பாட்டுக் கோலங்கள் - 17
☞ குடியைக் கெடுக்கும் குடி - 24
☞ நிசா உனக்கு விசா தந்தவர் யார் - 26
☞ வளர்ச்சிப் பாதையில் - 27
☞ கற்றிடுவோம் கல்வியை - 28
☞ பெண்ணாய் பிறந்து விட்டால் - 29
☞ சமூகத்தில் போதை வஸ்துப் பாவனை - 31
☞ குழந்தை இலக்கியம் - 34
☞ பெண் - 36
☞ சங்ககால அகத்திணை மரபு - 37
☞ உள்ளங்கையில் உலகம் - 40

☞ ஆங்கிலக் கல்வியின் முக்கியத்துவம் - 42

☞ 21ஆம் நூற்றாண்டில் கம்பியூட்டர் யுகம் - 44

☞ நினைவுகள் (சிறுகதை) - 46

☞ நான் ஒரு எழுத்தாளரானால் - 48

☞ வண்ணமயில் வாகனன் - 50
பள்ளி போகும் பாலகரே

☞ வேடிக்கை மனிதனுக்கு - 51
மரங்கள் வளர்ப்போம்

☞ முதுமையின் முகவரி - 52
கல்வி நமது செல்வம்

☞ நான் சென்ற கல்விச் சுற்றுலா - 53
கல்வியினால் உயர்வோம்

☞ எமது பாடசாலை - 54
நான் ஒரு ஆசிரியரானால்
நான் ஒரு பறவையானால்

☞ அறிந்து கொள்வோம் - 55
மகாத்மா காந்தி

☞ அறிந்து கொள்ள சில - 56
பொது அறிவுத் துணுக்குகள்

☞ சுத்தம் சுகம் தரும் - 57
Water

☞ The Subject I Like Most - 58
My Sister
My best friend


☞ Gardening - 59
Mother

☞ My Self - 60
My Village
The use of trees

☞ Mother Teresa - 61
Boy scouts Association

☞ அச்சுவேலி மத்திய கல்லூரியின் விளையாட்டுத் துறை பற்றிய - 63
தகவல்களும் வளர்ச்சிப்படிகளும்

☞ ஆணிவேர் (நாடகம்) - 69





# அச்சுவேலி உலவிற்குளம் சித்திவிநாயகர் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ கு. வை. விருத்தகிரீசக் குருக்கள் அவர்களின் வாழ்த்துச்செய்தி.

"கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான்" - ஸ்ரீராமகிருஸ்ணர்

கற்க நினைப்பர்களுக்கு மறுக்காது நிறைவான கல்வியைத் தரும் அச்சுவேலி மத்திய கல்லூரி "மத்தியதீபம் என்னும் கன்னிச் சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அதற்கு ஆசிச்செய்தி வழங்குவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றியைத் தெரவித்துக் கொள்கிறேன்.

1892ல் அமெரிக்க மிஷினினால் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பித்த இக்கல்லூரி இன்று 1000 மாணவர்கள் வரை உள்ளடக்கி மத்திய கல்லூரியாகத் திகழ்கிறது. பாடசாலை எனும்போது வெறுமனேகல்வியோடு மட்டும் நின்றுவிடாது ஒழுக்கம், கலை, விளையாட்டு, ஆன்மீகம், சமூகசேவை என எல்லாவற்றையும் போதிப்பது கடமையாகும். அந்தவகையில் சிறந்து விளங்கும் இக்கல்லூரியானது மேலும் வளர்ச்சியடையவும், இவர்கள் வெளியிடும் சஞ்சிகையானது சிறப்பாக வெளிவரவும் என் ஆசிகள். இக்கன்னி முயற்சியானது மேலும் பலநூல்கள் வெளிவர நல்லஒரு அடித்தளமாக இருக்க எல்லாம் வல்ல விநாயப்பெருமானை வேண்டுகின்றேன்.

**சிவஸ்ரீ. கு. வை. விருத்தகிரீசக் குருக்கள்,**
**குருக்கள் வளவு,**
**அச்சுவேலி.**



## யாழ்/அச்சுவேலி தென்னிந்திய திருச்சபை

## அருட்திரு. கிருபைநாதன் அடிகளாரின் ஆசியுரை

## 1892 - 2009

யாழ்/ அச்சுவேலி மத்தியகல்லூரியானது 2009ஆம் ஆண்டின் ஒரு புதிய முறையில் வளர்ச்சியின் பாதையை நோக்கி வீறுநடை போடுகிறது என்பதை நினைக்கும் போது கடந்த கால நினைவுகளை நினைவுகூறச் செய்கிறது என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி தருகிறது.

2009ஆம் ஆண்டில் மத்திய தீபம் என்னும் கன்னிச் சஞ்சிகை வெளியிடப்படுகிறது என்றால் அது எமது அச்சுவேலி மகாவித்தியாலய அதிபர் Mr. V. Balasubramaniam அவர்களுடைய தளராத முயற்சி என்பதும் அது வலுவடைய பக்கத்துணையாக இருந்து மெருகூட்டிய உபஅதிபர், மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு வெளிவரும் இச்சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து மாளாவிட்டால் (சாகாவிட்டால்) அதிக பலனைத்தராது.

இவ்விதமாய் 1892ஆம் ஆண்டு இத்தேவாலய வளைவினுள் அமெரிக்க மிஷனறிமாரின் அயராத உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் கல்வியெனும் பயிர் வளர வேண்டும் எனும் பெரிய முயற்சிகளால் ஆண்கள் ஆங்கிலப் பாடசாலையாக அச்சுவேலியில் ஆரம்பிக்கப்பட்டது. இது தென்னிந்திய திருச்சபை அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கிறிஸ்தவப் பாடசாலையானது காலப்போக்கில் யாழ்/ அச்சுவேலி மத்தியகல்லூரியானது எனப் பெயர் மாற்றப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆனால் எமது பாடசாலையானது வளர்ச்சியின் பாதையை நோக்குகிறது என்றால் அது ஆரம்பத்தில் மிஷனறிமார்கள் விதைத்த கல்வி எனும் விதையாகும். என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இற்றைக்கு117 ஆண்டுகள் கடந்தாலும் இவ்வரலாற்றைப் பலர் கூற முடிந்தாலும் அவ்வரலாற்றின் அடிப்படையில் மிஷனறிமாரோடு சேர்ந்து பாடுபட்ட வண. போதகர் C.D. வேலுப்பிள்ளையின் மகனும் முன்னாள் அச்சுவேலி ஆசிரியரும் தென்னிந்தியத்திருச்சபையின் அங்கத்தவருமாகிய திரு. வில்லியம் குடும்பத்தினரைச் சாரும் அத்தோடு இந்த

இரண்டாவது நூல் மத்தியதீபம் எனும் சஞ்சிகையானது எங்கள் தென்னிந்திய திருச்சபையின் அதி. வண. கலாநிதி Danial S. Thiyagarajah அத்தியட்சகரின் காலத்தில் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக ஒன்றாகும்.

கடந்த 1999ஆம் ஆண்டில் யா/ அச்சுவேலி மத்தியகல்லூரி என்னும் பெயருடன் அறிவாற்றல் நிறைந்த ஒரு நூற்றாண்டு மலர் வெளியாகி மகிழ்வித்தது, இத்தோடு இவ்வளர்ச்சி நின்றுவிடாமல் தொடர்ந்தும் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த பத்து வருட காலப்பகுதியில் அதாவது 2009ஆம் ஆண்டில் வெளியாகும் இம்மத்திய தீபம் எனும் கன்னிச் சஞ்சிகை நம் எல்லோருக்கும் ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது என்பதை நம்மால் மறக்க முடியாது.

*ஆடிவரும் நதிகளுக்கு கடல் உறவு*
*அசைந்து வரும் மத்தியதீப சஞ்சிகைக்கு அறிவுறவு*
*ஓடிவரும் இளம் சமூக அலைகளுக்கு மத்திய தீபம் கரையுறவு*
*யார் எமக்கு இவ்வுலகில் ஆதரவு என்போர்க்கு யாழ்/ அச்சுவேலி மத்திய கல்லூரி காட்டும் மத்திய தீபம் எனும் ஆதரவு எம்மவர்க்கு.*

யாழ்/ அச்சுவேலி மத்தியகல்லூரியானது மத்தியதீபம் எனும் வார்த்தை அமைந்திருப்பதை உற்றுநோக்கும் போது முக்கியமாக சமுதாய செயற்பாடுகளையும், கல்வி, கலாசாரம், தொடர்பாடல், பொருளாதார வளர்ச்சி போன்ற பலதுறையினர்களையும் வளர்க்கவும், தூய்மைமைப் படுத்தவும், கூர்மையாக்கவும் வளர்ச்சிப்படியை நோக்குகிறதாயும் இம்மத்திய தீபகன்னிச் சஞ்சிகை என்னும் வார்த்தை இக்காலத்தின் சாலப்பொருத்தமாய் அமைகின்றது. இது எல்லா வயதினரும் அதாவது சிறுவர் முதல் பெரியவர் வரை வாசித்து மறையறிவிலும் இறையறிவிலும் உயர்ந்திட வாழ்ந்திட ஆசித்து நிற்பதோடு தொடர்ந்தும் எமது பாடசாலை எதிர்வரும் காலங்களிலும் மத்தியதீபம் எனும் சஞ்சிகையைப் போன்று புதிய புதிய நூல்களும் சஞ்சிகைகளும் வெளிவரும் என முயற்சி செய்ததும் முயற்சி செய்யப் போகின்ற துமான அதிபர், ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் மாணவர்களையும் இறைவன் ஆசீர்வதித்து என்றும் நடத்துவார் என்று வாழ்த்துக் கூறி எனது ஆசியுரையை முடிக்கிறேன்.

நன்றி

**தென்னிந்தியத்திருச்சபை,**
**அச்சுவேலி,**
**வண. போதகர். T. கிருபைநாதன்**

කාර්යාලය / அலுவலகம் / Office: 2584374, 2584373

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2584375

කේ. එන්. ඩග්ලස් දේවානන්දා පා.ම.
கே. என். டக்ளஸ் தேவானந்தா பா.உ.
**K.N. DOUGLAS DEVANANDA M.P.**
සමාජ සේවා හා සමාජ සුභසාධන අමාත්‍ය
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
MINISTER OF SOCIAL SERVICES & SOCIAL WELFARE

නිවස / வதிவிடம் / Residence: 2503467

Mobile - 0777781891
Email - deva@slt.lk

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 2585255


ඔබේ අංකය/ உமது இல./Your No :    මගේ අංකය/ எனது இல./My No :    දිනය / திகதி /Date : 22.09.2009



# கௌரவ அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

யாழ் அச்சுவேலி மத்திய கல்லூரி தனது 117 வருடகால வரலாற்றில் முதற் தடவையாக "மத்தியதீபம்" எனும் பெயரில் இவ்வருடம் முதல் மலர் ஒன்றை வெளியிட முன் வந்திருப்பது குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சியடைவதுடன் அம்மலருக்கு வாழ்த்துச்செய்தி ஒன்றை வழங்குவதற்கான வாய்ப்பு எனக்குக் கிட்டியமை தொடர்பில் எனது நன்றியை இதன் ஆசிரியர் குழுவிற்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கல்லூரியின் வரலாற்றை நோக்கும் போது இன்றைய அதன் வளர்சச்சியின் ஒரு வெளிப்பாடகவே "மத்திய தீபம்" மலர் வெளியீட்டை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இக்கல்லூரியின் ஆக்கத்திறன் கொண்ட படைப்பாளிகளை வெளிக் கொண்டு வருவதற்கும் அவ்வாறான படைப்பாளிகளை உருவாக்கு வதற்கும் இதுபோன்ற மலர் வெளியிட்டு முயற்சிகள் பெரிதும் உறுதுணையாக அமைவதுடன் கல்லூரியின் வரலாற்றை மட்டுமல்லாது அக்கல்லூரி அமைந்துள்ள சூழல் மற்றும் பிரதேசம் பற்றிய தெளிவுகையும் எமது தேடல்கள் தொடர்பிலான ஆவணங் களுக்காக முன் வைக்கின்றன.

இந்த வகையில் கல்விசார்ந்த சமூகத்திலிருந்து இதுபோன்ற முயற்சிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் "மத்திய தீபம்" மலரும் தனக்கானதொரு தனித்துவத்தை வெளிப்படுத்தி ஆக்கபூர்வமான பணியை முன்னெடுக்க வாழ்த்துவதுடன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

அன்புடன்

டக்ளஸ் தேவானந்தா பா.உ
செயலாளர் நாயகம் ஈ.பி.டி.பி.
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
T.M.F/Dar


61 ඉසිපතන මාවත, කොළඹ 05.    61 இசிப்பத்தான மாவத்தை கொழும்பு 05.    61, Isipathana Mawatha, Colombo 05.

දිසාපති / දිස්ත්‍රික් ලේකම්
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
Government Agent / District Secretary

දුරකථනය
தொலைபேசி
Telephone: 021-222 2235

ෆැක්ස්
பக்ஸ்
Fax: 021-222 2355

E-mail: gajaffna@sltnet.lk

දුරකථනය පොදු
பொது தொலைபேசி
General Telephone: 021-222 2233, 021-222 2234

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, යාපනය.
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
District Secretariat, Jaffna.


මගේ අංකය / எனது எண் / My No.: Message from GA

ඔබේ අංකය / உமது எண் / Your No.:

දිනය / திகதி / Date: 31.08.2009



# அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி

கற்பித்தலைக் கசடறக் கற்பித்து, கற்றவழி நிற்கும் நல்லதொரு நாளைய சந்ததியை உருவாக்கும் உன்னத கைங்கரியத்தை மேற்கொள்ளும் பாடசாலைகளின் பணிக்கு நிகர் எதுவுமில்லை. இத்தகைய மேலான சேவையில் 117 ஆண்டுகள் தன்னை இணைத்து, இன்று யா/அச்சுவேலி மத்திய கல்லூரி எனும் பெயரில் இயங்கி வரும் இக் கல்லூரியின் வரலாற்று விழுமியதாகும் தென்னிந்தியத் திருச்சபையின் தெய்வீகத் திருப்பணியாக 1982ஆம் ஆண்டு ஆண்களுக் கெனவும், பெண்களுக்கெனவும் தனித்தனியே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் இரண்டும் 1960ஆம் ஆண்டில் ஒன்றிணைக்கப்பட்டு, அச்சுவேலி மகாவித்தியாலயமெனும் பெயரில் இயங்கி 2001ஆம் ஆண்டு யா/அச்சுவேலி மத்திய கல்லூரியாய் மலர்ந்துள்ளது.

கல்விசார் சகல துறைகளிலும், வசதி குறைந்த கிராமிய மாணவர்களின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டுழைத்து வரும் இக்கல்லூரி அச்சுவேலி மக்களின் அரியதொரு வரப்பிரசாதமாகும். இக்கல்லூரி மாணவர்களின் சிறந்த கல்விப் பெறுபேறுகளும், விளையாட்டுத்துறையில் கிடைத்த வெற்றிகளும் கல்லூரியின் மேலான வளர்ச்சிக்குச் சிறந்த சான்றுகளாய் திகழ்கின்றன. இவ்வாண்டு 17வது கரப்பந்தாட்ட அணியில் கலந்துகொண்ட இக்கல்லூரி மாணவர்கள் மாகாணப் போட்டியில் 2ஆம் இடத்தைப்பெற்று தேசியமட்டப்போட்டிக்குத் தெரிவானமை இக்கல்லூரிக்குக் கிடைத்த மிகச் சிறந்த பாராட்டெனலாம்.

தன் நீண்டகால வரலாற்றுப் பாதையில் உடல், உள நலமிக்க மாணவர்களை உருவாக்கி உலகிற்களித்து ஆயிரக்கணக்கான மாணவர்களோடு நிமிர்ந்து நிற்கும் இக்கல்லூரி தனது உயர்வினை உலகறியச் செய்யும் உன்னத நோக்கில் "மத்தியதீபம்" எனும் சஞ்சிகையை வெளியிடத் தீர்மானித்துள்ள இக்கன்னி முயற்சி புதிய தகவல்களை உள்வாங்கி, உயர்ந்த கருத்துக்களைப் பரிமாறி மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் சிறந்ததொரு தொடராய் நீடித்து நிலைக்க மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ் மாவட்டம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்
யாழ்ப்பாணம்.



# பாரம்பரிய விழுமியங்களை உள்வாங்கிய கலாலயம்

அச்சுவேலி மத்திய கல்லூரியினால் வெளியிடப்படும் அச்ச மத்திய தீபம் என்னும் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். நீண்டகால பாரம்பரியம் உள்ள சமூக விழுமியங்களை உள்வாங்கிக் கல்வித் தொண்டாற்றும் ஒரு பாடசாலையாக இது விளங்குகிறது. மிஷணறி மாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இப்பகுதி மாணவர்களின் அறிவுக்கண்களைத் திறந்து இச்சமூகத்தில் மேலோங்கிய நிலைக்கு உயர்த்தி விட்டது என்பது மிகையாகாது. காலத்திற்குக்காலம் அர்பணிப்புடன் செயற்பட்ட அதிபர்களின் வரிசையில் அதிபர் திரு. பாலசுப்பிரமணியமும் விளங்குகின்றார்.

இவருடைய நெறிப்படுத்தலுடனும் ஆசிரியப் பெருந்தகையில் ஒத்துழைப்புடன் சவால்களை வென்று சாதனைகளைப் படைக்கும் ஒரு கல்லூரியாக இது விளங்குகின்றது. இக்கல்லூரி சகல வளங்களையும் பெற்றுச் சிறப்பாக கல்வித்தொண்டாற்ற எனது வாழ்த்துக்கள்

**திரு. வே.தி. செல்வரத்தினம்,**

**மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்,**

**யாழ்ப்பாண மாவட்டம்.**




# யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

1892இலே அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி என்னும் பெயருடன் ஆரம்பித்த இப் பாடசாலை பின்னர் அச்சுவேலி மகாவித்தியாலயமாகி இன்று அச்சுவேலி மத்திய கல்லூரியாக வளர்ச்சி அடைந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைபவர்களின் நானும் ஒருவர். குறைந்த வளங்களுடன் நிறைந்த சேவையாற்றும் கல்லூரிகளில் முதன்மையான இடத்தில் வைத்து எண்ணக் கூடியது இக்கல்லூரி. இக்கல்லூரியின் முன்னேற்றத்தில் அதிபரின் சிறந்த தலைமைத்துவமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் எவ்வளவு தூரம் பங்களிப்புச் செய்கின்றன என்பதையும் நான் அறிவேன்.

கடந்த ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாணவர் ஒருவர் 3A பெறுபேறு பெற்றமை கல்வி முன்னேற்றத்தின் உச்ச அறுவடையை வெளிப்படுத்துகின்ற அதேவேளை மாகாணமட்ட விளையாட்டுப்போட்டியிற் பெற்ற இடங்கள் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

மத்தியதீபம் என்னும் இச்சஞ்சிகை மாணவர்களின் பல்துறை ஆற்றல்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தூண்டு கோலாக அமையும் என்பது எனது அசையாத நம்பிக்கை சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவர அனைவரும் உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திருமதி. அ. வேதநாயகம்,**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,**
**யாழ் வலயம்,**
**யாழ்ப்பாணம்.**



# கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி

**மத்தியதீபம் மங்காதொளிர்க!**


நூறாண்டுகளைக் கடந்து வந்திருக்கின்ற யா/அச்சுவேலி மத்திய கல்லூரி ஆரம்பத்தில் அச்சுவேலி கிறிஸ்தவக்கல்லூரி என்ற பெயரில் ஆண்களுக்கான ஆங்கில பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு அருகில் பெண்களுக்கென தனியான பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டு தென்னியந்தியத் திருச்சபையின் அரும்பெரும் பணியில் உருவாக்கப் பட்டதாகும் 1960 களில் இவ்விரு பாடசாலைகளும் இணைக்கப்பெற்று அச்சுவேலி மகாவித்தியாலயம் எனும் பெயர்கொண்டு இயங்கி பின்னர் 2001 இன்பின் இப்பாடசாலை அச்சுவேலி மத்தியகல்லூரி எனும் பெயர் மாற்றத் தோடு சிறப்பாக இயங்கி வருகின்றது.

கல்வித்துறையிலும், விளையாட்டுத்துறையிலும் பெருமை மிகு மாண வர்களை உருவாக்கி வருவதுடன் அச்சுவேலிப்பகுதியின் அறிவாலய மாகவும் திகழ்கிறது. இப்பாடசாலை. இவ்வாண்டு 17வயது கரப்பந்தாட்டப் பிரிவினர் மாகாணமட்டப்போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்டத்திற்குத் தெரிவானமை இக்கல்லூரியின் சிறப்பையே சுட்டிநிற்கிறது.

கல்லூரியின் உயர்ச்சியை உலகறியச் செய்யும் வகையில் இவ்வாண்டு முதன்முறையாக மத்தியதீபம் என்னும் மலர் வெளிவருகின்றது. மாணவர்தம் ஆற்றல்களை வெளிக்கொணரும் இம்மலர் அவர்தம் திறமைகளை மேன் மேலும் சிறப்பாக்குவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சி. ஏ. மோகன்ராஜ்,**
**பிரதேச செயலர்,**
**கோப்பாய்.**

**பிரதேசசெயலர்,**
**வலிகிழக்கு,**
**கோப்பாய்.**



## கோப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளரின்

## வாழ்த்துச்செய்தி

கல்லூரியில் சஞ்சிகை வெளியீடு என்பது அதன் உள்ளார்ந்த அம்சங்களின் வெளிப்பாடுகளாக அமைவது வரவேற்றக்கத்தக்கது. 1892ல் அமெரிக்கன் மிஷனறிமாரால் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது இன்று இக்கல்லூரி அச்சுவேலி மத்திய கல்லூரியாக விளங்குவதுடன் அச்சுவேலி அணியப் பாடசாலைகளின் மையமாகவும் திகழ்கிறது. இக்கல்லூரியில் ஏறத்தாழ 1000 மாணவச்செல்வங்கள் கல்வி கற்கின்ற போதும் இதுஒரு 1C தரப் பாடசாலையாகவே காணப்படுகிறது. க.பொ.த. (உ/த) பிரிவில் கலை, வர்த்தக பிரிவுகளை மட்டுமே கொண்டுள்ள இப்பாடசாலை எதிர்காலத்தில் உயர்ந்த தரத்திற்கு செல்லவேண்டும் என வாழ்த்துவதுடன் இப்பாடசாலையின் எதிர்காலம் இங்கு கல்வி கற்பிப்பவர்கள் மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய சமூகத்தினரிலே தங்கியுள்ளது. இக் கல்லூரி மேன்மேலும் பல சிறப்புக்களைப் பெற்று மேலோங்க எனது வாழ்த்துக்கள் என்றும் உண்டு.

**திரு. இ. சித்தரவழவேல்,**
**கோட்டக் கல்விப்பணிப்பாளர்,**
**கோப்பாய்.**



# யா/அச்சுவேலி மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளரின் வாழ்த்துச்செய்தி


யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் "அச்சு மத்திய தீபம்" என்னும் மலர் வெளியீட்டின் கன்னி முயற்சி பாராட்டுக்குரியது, கல்லூரிச் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கக்கூடியது.

இம்மலர் வெளியீடானது மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியின் பிரதானதோர் அங்கமாகவே காண்கிறேன். மாணவர்களின் ஆற்றல், ஆர்வம் என்பவற்றிக்கேற்ப மொழித்திறன்களை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குவதாகவும் மாணவர் மையப்படுத்தப்பட்ட புதிய கல்விச்சீர்திருத்தத்திற்கு அமைவாக முயன்று தேடிக் கற்கும் மாணவ முயற்சிக்கு வழிசமைத்துக் கொடுக்கும் கைங்கரியமாகவும் இதனைக் காண்கிறேன்.

மத்திய தீபம் என்னும் புத்தம் புதுமலர் இதழானது மொட்டவிழ்ந்த புத்தம்புது மலராய் மணம் கமழ வழிசமைத்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பெரு முயற்சியை பாராட்டுவதுடன் வருடந்தோரும் புதுப்பொலிவுடன் புதிய மாற்றங் களையும் உள்வாங்கி மிளிர வேண்டுமென மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

"வாழ்க பாடசாலைச் சமூகம்
வளர்க அதன் பணிகள்"

திரு. பொ. வரதகுலசிங்கம்,
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



# பழைய மாணவர் மன்ற சங்க தலைவரின் உள்ளத்து வாழ்த்துச்செய்தி

யாழ் மாவட்டதில் கோப்பாய் கோட்டத்தில் தனித்துவமாக இயங்கி வீறு நடை போட்டுக்கொண்டிருக்கும் ஒரே மத்திய கல்லூரி அச்சுவேலி மத்தியகல்லூரியாகும்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியும் அப்பாடசாலை சமூகத்தில் பெற்ற நன்மதிப்பும் கல்வி கற்பிக்கின்ற , கல்வி கற்ற மாணவர், ஆசிரியர்களின் திறமையிலும் அவர்களை வழிப்படுத்துகின்ற அதிபரின் திறமையிலும் அப்பாடசாலை சமூதாயத்துடன் பொருந்தும் தன்மையிலும் அப்பாடசாலையில் இருந்து வெளிவருகின்ற ஆக்கங்களிலும் தங்கியுள்ளது. எமது பாடசாலை மேற்கூறிய யாவற்றையும் தனித்துவமாக கொண்டு அதன் கன்னி முயற்சியான “அச்சு மத்திய தீபம்” எனும் சஞ்சிகை வெளிவருகின்றது என்பதை அறியும் போது மட்டற்ற மகிழ்ச்சியும் அதற்கு வாழ்த்துரை வழங்குவதற்கு சந்தர்ப்பம் வழங்கிய கல்லூரி சமூகத்திற்கும் இறைவனுக்கும் நன்றி தெரிவிப்பதோடு மேலும் தொடர்ந்து “அச்சு மத்திய தீபம்” வெளிவர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இ. துஷ்யந்தன்,
தலைவர்,
பழைய மாணவர் சங்கம்,
அச்சுவேலி மத்திய கல்லூரி.

அச்சுவேலி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
ATCHUVELY CENTRAL COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

செம்ரெம்பர் 25, 2009

கல்லூரி அதிபரின் ஆக்கபூர்வமான சிந்தனையின் விளைவாக எடுத்துக்கொண்ட சிறப்புமலர் வெளியீட்டுச் செய்திகேட்டு கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளை மிகவும் மகிழ்ச்சி கொண்டது. பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளை அன்றிலிருந்து இன்றுவரை அளப்பரிய சேவைகளைச் செய்யும் எண்ணத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில் அதிபரின் இந்த முயற்சி மதிப்பளிக்கத்தக்கது.

எமது சங்கம் தொடங்கிய காலத்திலிருந்து யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் அவசிய அபிவிருத்தித் தேவைகளான மாணவர்களுக்கான குடிநீர் வழங்கும் திட்டம், பாடசாலை விளையாட்டு மைதான விஸ்தரிப்பிற்கான காணி வாங்குவதற்கான திட்டம் கல்லூரியின் அத்தியாவசிய தேவைகளுக்கு அதிபரினால் எமது சங்கத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள், சிறுவர் பாடசாலையின் மேல்மாடிக்கட்டடம் நிர்மாணிப்பு பூர்த்தியாவதற்கான திட்டம் என்பவற்றிற்கு பாடசாலை அதிபரினாலும் பழைய மாணவர் சங்கத்தினாலும் விடுக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கு நிதியுதவிகள் பங்களிப்புகளும் வழங்கியிருக்கின்றோம்.

இந்தவேளையில் கல்லூரி மாணவர்களின் கல்வித் தகைமைகளையும் ஊக்குவிக்கப்பட்ட ஆக்கத்திறன்களையும் பல்கலைச் சிறப்பு வாய்ந்த பாராட்டுமிக்க ஆற்றல்களையும் ஒரு சிறப்புமலர் தாங்கி உலக உலா வர எடுத்துக் கொண்ட சிந்தனை ஒரு சிற்பியின் சிந்தனைச் செதுக்கல்.

பட்டை தீட்டப்படவேண்டிய மாணவ ரத்தினங்களை இனங்காட்டு வதற்கான ஒரு அரங்கேற்ற சிறப்புமலரை மலரவைப்பதற்கான திட்டத்தை தீட்டிய கல்லூரியின் அதிபரையும், ஆசிரியர்களையும் மற்றும் பழைய மாணவர் சங்கம் (அச்சுவேலி), பாடசாலை அபிவிருத்திச்சங்கம் (அச்சுவேலி), பெற்றோர் ஆசிரியர் சங்கம் (அச்சுவேலி) மற்றும் எல்லாவழிகளிலும் இந்த மலர் வெளியீட்டில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்புமலரை மலரவைத்த அன்பு மனங்களுக்கு கனடாக்கிளை மத்தியகல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் சார்பிலும் நன்றி கலந்த விஷேச வாழ்த்துக்களை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
| சத்தீஸ்வரன் | ந. யோகநாதன் | நடராஜ பிறைவன் |

138 Sophia Rd, Markham, ON. L3S 3Y9 Tel : 416-265-2216, 416-265-3596, 905-201-9949

## பிரதி அதிபர் வாழ்த்துச் செய்தி



நீண்ட வரலாற்றைக் கொண்ட எமது கல்லூரியின் முதலாவது மலராக "அச்சு மத்திய தீபம்" எனும் சஞ்சிகை வெளிவருகின்றது. அச்சுவேலிக் கிராமத்தினதும், அயற் கிராமங்களினதும் மாணவர்களைத் தன்னகத்தே கொண்ட எமது கல்லூரி கற்றல் செயற்பாடுளிலும் ஏனைய இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முழுமையாகச் செயற்படுகின்றது. மாணவர்கள் சமூகத்தில் இசைவுடையவர்களாக வாழ்வதற்கான ஒழுக்கம், பணிவு, கட்டுப்பாடு என்பனவற்றை எம் கல்லூரி வழங்குவதில் முன்னிற்கின்றது.

கற்றல் பேறுகளை உயர்த்துவதையே முதன்மைப் படுத்தி நிற்கும் எமது கல்லூரியின் செயற்பாடுகளிற்கு ஆசிரியர்கள், கல்விசாரா சேவையாளர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பழையமாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கனடாப் பழைய மாணவர் சங்கம் போன்றவற்றின் ஈடுபாடு வியக்கதக்கது பாராட்டுதலுக்குரியது. எமது கல்லூரியின் பௌதீக மேம்பாடுகளிற்கும். இந் நிறுவனங்கள் பேருதவி புரிகின்றன.

இம் மலர் வெளியிட வேண்டும் என்ற முன்னெடுப்பை எமது அதிபர் தலைமையில் கல்லூரிச் சமூகம் முனைப்பாக இருந்தமை குறிப்பிடதக்கது. மாணவர்களது ஆக்கங்களை, கல்விப் புலவளவாளர்களது ஆக்கங்களை இம்மலர் தாங்கி வெளிவந்துள்ளது. இம் மலரின் முழுமைக்கு மலர் வெளியீட்டுக் குழுவின் அயராத உழைப்பே காரணம் எனலாம். தொடர்ந்தும் அடுத்த மலரை மலரச் செய்வதற்கு எமது கல்லூரிச் சமூகம் ஆவலாக உள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் வரவேற்கத்தக்கது. பிரதி அதிபர் என்ற வகையில் இதையிட்டு நான் பெருமையும், மகிழ்வும் அடைகின்றேன். மேன்மேலும் இது போன்ற கல்லூரி மலர் சிறப்பாக தொடர்ந்தும் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

**பிரதி அதிபர்**
**திருமதி. யோகேஸ்வரி சந்திரகுமார்**

# அதிபரின் பரிசில் நாள் அறிக்கை

இக் கல்லூரியின் இவ்வாண்டுப் பரிசில் நாளில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய கௌரவ சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் திரு. **K.N.** டக்ளஸ்தேவானந்தா அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய யாழ் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.யோ.ரவீந்திரன் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் இக்கல்லூரியின் நலன்விரும்பியும் இளைப்பாறிய அதிபருமான லயன் சி.யோகசிங்கம் அவர்களே, பெற்றோர்களே, ஆசிரியர்களே, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்சங்க உறுப்பினர்களே, நலன் விரும்பிகளே, அயற் பாடசாலை அதிபர்களே, மாணவர்களே, கல்வி சாரா சேவையாளர்களே உங்கள் அனைவரையும் அன்பாக வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நடுவூரில் நல்மரம் பழுத்தாற் போல் இவ்வூரில் மத்தியில் நாயகமாக விளங்கும் யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் இவ்வாண்டிற்கான பரிசில் நாள் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன். "என்றும் ஒளிரும் தீபம்" என்பது எமது கல்லூரியின் மகுட வாசகம். **(EVER SHINING LIGHT)**

1892ல் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி இன்று தனது 117வது ஆண்டை நிறைவு செய்து வீறுநடை போடுகின்றது. வசதி படைத்தோர், செல்வந்தர்கள் நகர்புறம் நாடிச் செல்ல வறிய மக்களினதும், இலட்சியப்பற்றுள்ள மக்களினதும் புகலிடமாக விளங்குவதும் எமது கல்லூரியே.

கல்விப் பெறுபேறுகளிலும் இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் தமது திறனை வெளிக்காட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் இவ்வாண்டுக்கான இன்றைய பரிசில் நாளுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கும் பெருமதிப்பிற்குரிய கௌரவ சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சர் திரு.**K.N.** டக்ளஸ்தேவானந்தா அவர்கள் மிகவும் இக்கட்டான கால கட்டத்தில் எமது சமூகத்துக்காகப் பலசேவைகளை ஆற்றி வழி நடாத்தி வருவது பாராட்டுக்குரியது. மீகாமன் இல்லாத மரக்கலம் போன்ற நிலையில் தவித்துக் கொண்டிருக்கும் எம் தமிழினத்திற்கு ஓர் மீகாமனாகச் செயற்படுகின்றார் என்பதில் சந்தேகமில்லை. இன்று குடா நாட்டிலும் சரி வேறு தமிழ் பேசும் இடங்களாயினும் சரி தமது குறைகளை நிவர்த்திக்க அணுகப்படும் ஒரு நிவாரணியாக விளங்குகிறார் எமது கௌரவ அமைச்சர் அவர்கள் என்றால் மிகையாகாது. யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவனான இவர், அரசியலில் ஒரு தனித்துவமான வழியைத் தேர்வு செய்து அதன்படி செயற்பட்டு வருபவர். இவர் எமது சமூகத்தைக் கட்டியெழுப்பும் உன்னத பணியில் பெரு வெற்றி பெற இறைவன் ஆசிர்வதிப்பாராக.

இன்றைய பரிசில் நாளில் சிறப்புவிருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ் கல்வி வலய முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளராக விளங்கும் திரு.யோ.ரவீந்திரன் அவர்கள். அடி நிலையிலிருந்து உயர் நிலையை எட்டிப் பிடித்த ஒரு சாதனையாளர். ஆசிரியராக ஆரம்பித்த அவரது பணி இன்று பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்ற நிலைவரை வளர்ந்துள்ளது. சிரித்த முகம் சிந்தனை தூண்டும் உரையாடல் அடுத்தவர் மனம் நோகமால் செயலாற்றும் திறன் இரக்க சுபாவம் இத்தனையும் சேர்ந்த ஒரு உருவமே இன்றைய எமது விழாவின் சிறப்பு விருந்தினர் திரு.யோ.ரவீந்திரன் அவர்கள். கல்வித் தராதரத்தில் MEd வரை நிறைவு செய்திருக்கும் இவர் கல்வி நிர்வாக சேவையிலும் சிறப்பான இடத்தை வகிக்கிறார். இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பிப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு வேறு பல பதவிகளை அடைய வாழ்த்துகிறேன்.

# OUR PRINCIPAL




**MR. V. Balasubramaniam**

BA(Hons), Dip in Ed, PGDEM, M.Ed, SLPS - I

எமது இன்றைய விழாவின் சிறப்பு விருந்தினர்களில் ஒருவரன. லயன்.சி.யோகசிங்கம் அவர்கள் இவ்வூரில் கௌரவமான ஒரு பிரமுகர். ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். இவரது பிள்ளைகள் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள். இக்கால்லூரியின் வளர்ச்சிக்காக பெரிதும் உழைத்தவர்கள். அவரின் மூத்த மகன் அமரர். யோ. சத்தியேந்திரா இக் கல்லூரியின் வளர்ச்சிக்காக கண்ட கனவை தந்தை திரு.யோகசிங்கமவர்கள் தொடரந்தும் முன்னெடுத்து வருவது இங்கு குறிப்பிடதக்கது. இக் கல்லூரியின் வளர்ச்சியில் தீவிர அக்கறை கொண்டவர். அவர் இன்றைய விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டமை எமக்கு மட்டில்லா மகிழ்ச்சியைத் தருவதோடு அவரது பொதுப் பணி மேலும் வளர வாழ்த்துகிறேன்.

## அறிமுகம்

ஒரு ஊருக்கு பெருமை சேர்க்கும் உன்னத நிறுவனமாக விளங்குவது பாடசாலை- கல்லூரி. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. “கல்விச் சாலையில்லாவூர் கட்டாந் தரையே. வீடுகள் தோறும் கலைகளின் விளக்கம் வீதிகள் தோறும் இரண்டொரு பள்ளி ....” என்று மகாகவி பாரதி கூறுவான். அதேபோல எமது கல்லூரியும் இக்கிராமத்திற்குப் பெருமை சேர்க்கும் நிறுவனமாகும்.

## மாணவர்கள்

1C தரப் பாடசாலையான கல்லூரியில் ஏறத்தாழ ஆயிரம் மாணவர்கள் வரை கற்கின்றனர். இப்பிரதேச அடி நிலை மக்களின் ஆதார சுருதியாக விளங்கும் இக்கல்லூரியின் மாணவப் பரம்பல் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| தரம் - | 1- 5 | - 354 |
| தரம் - | 6-11 | - 556 |
| தரம் - | 12,13 | - 93 |
| **மொத்தமாக** | **1003** | |

## ஆசிரியர் ஆளணி

எமது கல்லூரியின் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரிய ஆளணி 46 ஆகும். ஆயினும் 32 நிரந்தர ஆசிரியர்களும் 3இணைக்கப்பட்ட ஆசிரியர்களும் கடமையாற்றுகிறார்கள். ஆசிரிய பற்றாக் குறையை நிவர்த்திக்க ஆரம்ப பிரிவில் திரு.சி.சஞ்சயகரன், செல்விகள் பா.பிரதீபா, த.றெஜிதா பா.விஜிதா, தே.கீர்த்திகா, தே.லஜனி, திரு.த.விமல்ராஜ், ஆகியோரும். இடைநிலைப் பிரிவில் திரு.இ.லவசியாமளன், செல்விகள் சி.மேரிதர்மினி, த.மயூரினி ஆகியோரும் தொண்டராசிரியர்களாக கடமையாற்றுகின்றனர். அலுவலகத் தட்டச்சு வேலைகளுக்கு தொண்டராக செல்வி.ஜெ.ஜெகாளினி கடமையாற்றி வருகிறார். ஆரம்பப் பிரிவு இடைநிலைப் பிரிவு தமிழ், ஆங்கில, சமூகவியல் பாடங்கள் (வரலாறு, அரசியல்) போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்காக ஆசிரியர்கள் இல்லாமலிருப்பது கவலைக்குரியதாகும். நகர்புறப் பாடசாலைகளில் மேலதிகமாக இருக்கும் போது கிராமப் புறப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக் குறை நிலவுவது மாணவர்களை மிக மோசமாகப் பாதிக்கும் என்பதைக் கூறத்தேவையில்லை.

## கல்வி சாரா சேவையாளர்கள்

முகாமை உதவியாளர் செல்வி.உ.சிங்கையாரியரத்தினம் அவர்கள் அலுவலக செயற்பாடுகளுக்குப் பெரிதும் உறுதுணையாகச் சிறப்புடனும்,அர்ப்பணிப்புடனும் பணியாற்றி வருகின்றார். நூலகப் பாவனையைச் சிறப்பாக முன்னெடுக்கும் நிவாரணப் பணியாளர் திருமதி.ச.கலையரசி, ஆய்வு கூடப் பணியாளராகக் கடமையாற்றும் திரு.கு.கணேசலிங்கம், பாடசாலைத் தொழிலாளியாகக் கடமையாற்றும் திரு.செ.நெடுஞ்செழியன், காவலாளியாகக் கடமையாற்றும் திரு.த.சுப்பிரமணியம் சுகாதாரப் பணியாளராகக் கடமையாற்றும் திரு.வு.சண்முகநாதன், நிவாரணக் காவலாளியாகக் கடமையாற்றும் திரு.கி.ஜீவகுமாரும் தத்தம் கடமைகளைச் செவ்வனவே ஆற்றி வருகின்றனர். அவர்கள் யாவரினதும் சேவையைப் பாராட்டுவதுடன் அவர்கள் வாழ்வும் பணியும் சிறக்க வாழ்த்துகிறேன்.

## முகாமைத்துவக் குழு

எமது கல்லூரியில் முகாமைத்துவக் குழுவில் அதிபர், பிரதியதிபர் திருமதி.யோ.சந்திரகுமார், பகுதித் தலைவர்கள் செல்வி.யோ.செல்லமுத்து, திரு.பொ.சகலகலாநிதி, திருமதி.வ.அருளானந்தம், திருமதி.சி.தங்கராஜா, முகாமை உதவியாளர் செல்வி.உ.சிங்கையாரியரத்தினம் அவர்களும் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர். கல்லூரியின் நோக்கு **(VISION)** பணி **(MISSION)** அடிப்படையில் சிறப்பாகச் செயலாற்றி வரும் இவ்வுறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

## வாழ்த்துக்கள்

எமது கல்லூரியில் ஆசிரியராகவும் பிரதியதிபராகவும் 22 வருடங்கள் கடமையாற்றிய திரு.க.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் இடைக்காடு மகாவித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ளார். ஆசிரியை திருமதி.சி.அருள்ராஜா அவர்கள் கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்திற்கும்., திருமதி.மு.வேல்சிலோஜினி அவர்கள் பயிற்சிக் கலாசாலைக்கும் சென்றுள்ளனர். இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் திருமதி.ர.பாலேந்திரன்,திருமதி. கே.டோசி ஆகியோர் இடமாற்றம் பெற்று சென்றுள்ளனர். அவர்கள் சென்ற இடத்தில் சிறப்புடன் சேவையாற்றி நல்ல எதிர்காலத்தைப் பெற வாழ்த்துகிறேன்.

## வரவேற்கிறேன்.

திருமதி.சு.செல்வரத்தினம் ஆசிரியை அவர்கள் இட மாற்றலாகி எமது ஆசிரியர் ஆளணியுடன் இணைந்துள்ளார். திருமதி.ரட்ணஸ்ரீ ரவி ஆசிரியை அவர்கள் பகுதி நாள் ஆசிரியராக எமது ஆசிரியர் ஆளணியில் இணைந்துள்ளார். இணைப்புப் பெற்ற ஆசிரியர்கள் திருமதி.கே.டோசி, திரு.த.சுதன், திரு.பா.இளங்கோ, திருமதி. ப.விஜயலட்சுமி, திருமதி.க.சின்னராஜா, செல்வி.பொ.சிவாஜினி, செல்வி. சி.பிரேமானந்தி, திரு.தெ.விஷ்ணுதாஸ், ஆகிய ஆசிரியர்கள் எமது ஆளணியில் சேர்ந்து கொண்டனர். அவர்களை அன்புடன் வரவேற்கிறேன். மேலும் இவ்வாராம் எம்முடன் இணைந்து கொண்ட திரு. செ. சிவநேசன், திரு. வீ. விஜயகுமார், திரு. பா. கிருபாகிருஸ்ணன் ஆகியோரையும் அன்புடன் வரவேற்கின்றேன்.

## துயர் பகிர்கிறோம்

எமது கல்லூரியின் சித்திர ஆசிரியராக கடமையாற்றி இக்காலப்பகுதியில் ஓய்வு பெற்ற சித்திர ஆசிரியர் திரு.க.தவதாசன் அவர்கள் திடீரெனக் காலமாகிவிட்டார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உறவினர்களின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

## கல்விப் பெறுபேறுகள்

எமது கல்லூரி மூன்று நிலைகளில் பொதுப் பரீட்சையைச் சந்திக்கின்றது.

1. **தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை**
2. **க.பொ.த (சா.த) பரீட்சை**
3. **க.பொ.த (உ.த) பரீட்சை**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஆண்டு தோறும் சிறந்த பெறுபெற்றைப் பெற்று வருகிறோம். 2008 ம் ஆண்டு நான்கு மாணவர்கள் சித்தி பெற்றனர். 2009ல் பத்து மாணவர்கள் சித்தியடைவார்கள் என எதிர்பார்த்திருந்தோம் ஆயினும் ஒன்பது மாணவர்கள் சித்திபெற்றிருப்பது பெருமைக்கும் பாராட்டுக்குரியது. அத்துடன் 17 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருப்பதும் பாராட்டுக்குரியது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் சித்திக்கு உழைத்த அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள். சிறப்பாக இவ்வாண்டு அம் மாணவர்களை வழிநடத்திய திருமதி.உ.பாலசுப்பிரமணியம் செல்வி.த.றெஜிதா, செல்வி.தே.கீர்த்திகா ஆகிய ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்கள்.

க.பொ.த (சா.தர) பரீட்சையின் சித்தி வீதம் ஆண்டு தோறும் படிப்படியாகப் அதிகரிப்பதைக் காணக் கூடியதாக உள்ளது. 2008ல் 30 மாணவர்கள் உயர்தரத்திற்கு தகுதி பெற்றனர். இவ்வாண்டு இவ்வீதம் அதிகரிப்பதற்கு ஆசிரியர்கள் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

க.பொ.த உயர்தரத்தில் கலை வர்த்தகப் பிரிவுகளில் எமது மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றினர். கலைப் பிரிவில் 72.5வீதம் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றனர். வர்த்தகப் பிரிவில் 83வீதம் மான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றனர்கள். மாணவர்களின் பெறுபேறுகளை உயர்த்துவதற்கு ஆர்வமுடன் கற்பித்து வரும் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். ஆண்டு தோறும் பல்கலைக் கழகத்திற்கும் கல்வியல் கல்லூரிக்கும் மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளமை மகிழ்ச்சியூட்டுவதாகும். அம்மாணவர்களைக் கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்

மாணவர்கள் தமது சுய ஆற்றல்களையும் ஆளுமைகளையும் வளர்க்க உதவுவது இணை பாடவிதானச் செயற்பாடுகளாகும். பாட விதானச் செயற்பாடுகளுக்குச் சமாந்தரமாக இணை பாடவிதானச் செயற்பாடுகளும் எமது கல்லூரியில் முன்னெடுக்கப்படுவது சுட்டிக்காட்டக் கூடியதொன்றாகும்.

## விளையாட்டுக்கள்

உடல் உள ஆரோக்கியத்திற்கும், நற்பண்புகள், சுயகட்டுப்பாடு, போட்டி மனப்பாங்கு, விட்டுக்கொடுக்கும் இயல்பு, தோல்வியை ஏற்றல் போன்ற பண்புகளை மாணவர்களிடையே வளர்ப்பது விளையாட்டாகும். பெருவிளையாட்டுக்களைப்

பெறுத்தவரையில் 19 வயதின் கீழ் ஆண்கள் கரப்பந்தாட்ட அணியினர் மாகாண மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுத் தேசியளவிலான போட்டிகளிலும் பங்குபற்றினர். 15,17 வயது ஆண்கள் அணியினர் வலய மட்ட போட்டிகள் வரை முன்னேறினர்கள். 15வயது 19வயது பெண்கள் கரப்பந்தாட்ட அணி மாவட்ட நிலைப் போட்டிகள் வரை முன்னேறிச் சென்றது பாராட்டுக்குரியது. இவ்வாண்டு நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில்

**கோட்டமட்டத்தில்** **1ம் இடம் 05**
**2ம் இடம் 07**
**3ம் இடம் 06**

இடங்களை பெற்றனர் வலய மட்டப் போட்டிகளில் இடம் கிடைக்கவில்லை எனினும் எமது மாணவர்கள் சிறப்பாக விளையாடினர்கள். விளையாட்டுக்குப் பொறுப்பாசிரியருக்கும், பயிற்றுனர்களும் பாராட்டுக்குரியவர்கள். துடுப்பாட்டத்தில் எமது கல்லூரி கோட்டமட்டத்தில் முதலாமிடம் பெற்றமை இங்கு குறிப்பிடத்க்கது.

## தமிழ் மொழித்திறன் போட்டிகள்

மாணவர்களின் மொழியாற்றலை மேம்படுத்தும் முக்கியமான ஒரு போட்டி நிகழ்வு தமிழ் மொழித் திறன் போட்டிகளாகும். எமது கல்லூரி மாணவர்கள் இப் போட்டிகளில் கலந்து கொண்டு கோட்ட மட்டத்தில்

**1ம் இடம் 04**
**2ம் இடம் 04**
**3ம் இடம் 02**

இடங்களைப் பெற்றதோடு வலயமட்டத்திலும் இடங்களைப் பெற்றமை பாராட்டுக்குரியது. மாணவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கு எமது பாராட்டுக்கள்.

## ஆங்கில தினம்

சர்வதே மொழியாம் ஆங்கில அறிவைப் மேம்டுத்தும் நோக்குடன் நடாத்தப்படும் மற்றொரு போட்டி ஆங்கில தினப் போட்டியாகும். இதிலும் எமது கல்லூரி மாணவர்கள் பல வெற்றிகளைப் பெற்றமை குறிப்பிடதக்கது.
கோட்டமட்டத்தில்.

**1ம் இடம் 03**
**2ம் இடம் 04**
**3ம் இடம் 02**

வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் பெற்றனர். வலயமட்டப் போட்டியிலும் எமது மாணவர்கள் வெற்றியீட்டியமை பாராட்டுக்குரியது. வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகளில் கோப்பாய்க் கோட்டத்தைப் பொறுத்தவரையில் வெற்றி பெறுவதென்பது முயற் கொம்பாகவே காணப்படுகின்றது. கிடைக்கபெற்ற மிகச் சில இடங்களில் எமது கல்லூரியும் ஒரு இடத்தைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இம் மாணவர்களுக்கு எமது பாராட்டுக்கள். இம்மாணவர்களை நாடகம், பேச்சு, எழுத்து எனப் பல துறைகளில் பங்கு பற்றவும், வெற்றிகளைப் பெறவும் வழிகாட்டிய ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்கள்.

## ஏனைய போட்டிகள்

வெற்றியை மட்டும் கருத்திற் கொள்ளாது பங்குபற்றும் ஆற்றலைக் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு போட்டிகளிலும் எமது மாணவர்களைப் பங்குபற்ற வைப்பதில் ஆசிரியர்கள் மிகச் சிறப்பாகச் செயற்பட்டனர். சித்திரம் சமயம் மொழிகள் சார் போட்டிகளில் எமது மாணவர்கள் பங்கேற்றனர் அவற்றில் பல வெற்றிகளையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

**கோட்டமட்டத்தில் ஆழகியற் போட்டி 1ம் இடம்**
**சைவவிழுமியப் போட்டி 1ம் இடம் – 2**
**2ம் இடம் –1**
**3ம் இடம் –1**

**சமூகவிஞ்ஞானப் போட்டி 1ம் இடம் – 3**
**கணிதவிஞ்ஞானப் போட்டி 1ம் இடம் –2**
**வணிக அறிவுப் போட்டி 3ம் இடம் – 1**

## மன்றங்கள் கழகங்கள்

இணைபாட விதானச் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிப்பவை மன்றங்களும், கழகங்களுமாகும். மாணவர்களுக்குப் பொறுப்புக்களை வழங்குவதில் இவற்றின் பங்கு மிக முக்கியமானதாகும். தலைமைத்துவப் பாங்கும் கூடிமுயல்தல் என்ற சீரிய பண்புகளை இம்மன்றங்கள், கழகங்கள் செய்து வருகின்றன.

## மாணவர் மன்றம்

மாணவர்களின் சுய திறன்களை உருவாக்க உதவும் வகையில் ஆரம்பித்தலும் இடைநிலைப் பிரிவில் கனிஷ்ட சிரேஷ்ட உயர்தர என்ற வகுதியிலும் ஆண், பெண் என்ற வகுதியிலும் இம் மன்றம் செயற்பட்டு வருகிறது. இம்மன்றச் செயற்பாட்டை முன்னெடுக்கும் மன்றத் தலைவர்கள், செயலாளர்கள், மாணவர்களுக்கும் அவர்களை வழிகாட்டும் ஆசிரியர்களுக்கும் எனது நன்றியையும் பாராட்டுக்களும்.

## கணித விஞ்ஞான மன்றம்

கணித விஞ்ஞான அறிவைப் மேம்படுத்தும் நோக்குடன் இயக்கப்படும் இம்மன்றம் மாதம் ஒரு முறை தனது நிகழ்வுகளை நடாத்தி வருகிறது. வயது தரங்களுக்கேற்ப நடாத்தப்படும் இம் மன்றத்தினை மாணவர்களின் தலைவர் கு.நேருஜன், செயலாளர் ந.தனுஷன் ஆகிய மாணர்களும் கணித விஞ்ஞான ஆசிரியர்கள் திருமதி.யோ.சந்திரகுமார், திரு.செ.முரளீதரன், திரு.க.சுதாஸ்குமார், திரு.வ.நவலோகநாதன், திரு.ய.கிருஸ்ணராஜன், திருமதி.ரோ.யோகநாதன் ஆகியோரும் வழி நடாத்தி வருகின்றனர்.

## இந்து மன்றம்

சமய உணர்வையும், ஆன்மிக உணர்வையும் வலுவூட்டக் கூடிய வகையில் ஆசிரியர்களின் வழிகாட்டலில் இம் மன்றம் இயங்குகின்றது. தலைவராக திரு.பொ.சகலகலாநிதி ஆசிரியர் அவர்களும் செயலாளராக திரு.சி.ஸ்ரீதரன் ஆசிரியர் அவர்களும் செயற்படுகின்றனர். பொறுப்பாசிரியர்களுக்கும் மாணவர் களுக்கும் எமது நன்றியும் பாராட்டுக்களும்.

## சேவைக் கழகம்

தன்னார்வத்துடன் முன்வந்து பொதுச் சேவையாற்றும் உணர்வோடும் மாணவர்களில் விருப்பதிற்கமைய ஆசிரியர்களால் வழிநடத்தப்படுவது சேவைக்கழகமாகும். இது கல்லூரிக்கு பயனுள்ள பல நற்பண்புகளை ஆற்றி வருகின்றது. அதன் பொறுப்பாசிரியர் திருமதி.த.சிபாலலிங்கம் அவர்களும் தலைவர் செல்வன்.ஞா.மயூரதாஸ் செயலாளர் செல்வி.இ.விதுஷா ஆகிய மாணவர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## சாரணர்கள்

மாணவர்களின் ஆளுமையை மேம்படுத்தும் சேவை மனப்பாங்கை ஊட்டவும் சாரணர் அமைப்பு சிறப்பாகச் செயற்பாட்டு வருகின்றது. இவ்வாண்டு நடைபெற்ற தேசிய சாரணர் ஜம்போறியில் எமது மாணவர்கள் கலந்து கொண்டதோடு பல விருதுகளையும் பெற்றுள்ளனர். அவர்களை வழி நடாத்தும் திரு.ந.ஸ்ரீமுருகதாஸ்காந்தன் அவர்கள், திரு. இ. லவசியமாளன், திரு.த.விமல்ராஜ் ஆகிய ஆசிரியர்களும் அணித்தலைவர் சபைத்தலைவர் செல்வன்.இ.கஸ்தூரிராஜன், அணித்தலைவர் சபைச் செயலாளர் செல்வன்.ஞா.தர்மசீலன் ஆகிய மாணவர்களுக்கும் ஏணைய சாரணர்களுக்கும் எனது நன்றியும் பாராட்டுக்களும்.

## குருளைச் சாரணர்கள்

சாரணியத்தை சிறுவயதிலேயே அறிமுகப்படுத்தும் நோக்குடன் குருளைச் சாரணியம் இயங்குகின்றது. இதற்குப் பொறுப்பாசிரியை திருமதி.கௌரி.சுபீஸ்கரன் அவர்கள், திருமதி.சுவர்ணா சிவனேசராஜா ஆகியோர் இருக்கின்றனர். பொறுப்பாசிரியர்களுக்கும் குருளைச் சாரணர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

## நாவன்மைக் கழகம்

எண்ணியதை எண்ணியாங்கு எடுத்துக் கூறும் ஆற்றல் பேச்சு வன்மை மூலமாக ஏற்படுகின்றது. மாணவர்களிடையே பேச்சு வன்மையை வளர்க்கும் பொருட்டு நாவன்மைக் கழகம் செயற்படுகின்றது. அதன் தலைவராக செல்வன்.செ.நிவேஜனும் செயலாளராக செல்வன் கு.நேருஜன் ஆகியோரும் செயற்படுகின்றனர். அதன் பொறுப்பாசிரியராக பா.இளங்கோ செயற்படுகின்றார். இவர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

## கணனி மூலவள நிலையமும் கணனிக் கல்வியும்

இன்று கணனி அறிவற்றவர்கள் வேலையுலகிற்கு பொருத்தமற்றவர்களே. எமது கல்லூரியில் SEMP ஊடாக கிடைக்க பெற்ற கணனிகள் எமது மாணவர்களின் கணனிக் கல்வியில் பெரிதும் உறுதுணையாக இருக்கின்றன. தரம் 1 முதல் 13 வரையான மாணவர்களுக்கு அவரவர் தேவைக்கு ஏற்ற வகையில் கணனிக் கல்வி வழக்கப்படுகிறது. மென் பொருளாக்கப் போட்டியில் 50க்கு மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றினர். கணனி வள நிலையத்துக்குப் பொறுப்பாக உள்ள திரு.க.சுதாஸ்குமார் அவர்கள் உதவியாக இருக்கும் செல்வி.இ.சுகந்தினி ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள்.

கணனி கற்பிப்பதில் தரம் 1 முதல் தரம் 13வரை விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. அது எமது **Vision Mission** அடிப்படையாகக் கொண்டது.

## நூலகம்

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது ஆன்றோர் வாக்கு. எமது கல்லூரியில் புனரமைக்கப்பட்ட நூலகம் இல்லையாயினும் நூலகப் பணி வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. நூலக ஆசிரியர் திருமதி.ந.ஜெகநாதன் நூலகஉதவியாளர் திருமதி.க.தவேந்திரன்ஆகியோர் பாராட்டுக்குரியவர்கள்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

கல்லூரியின் வளர்ச்சியில் பக்க துணையாக நிற்பவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கமாகும். எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. செயலாளராக திரு.பொ.வரதகுலசிங்கம் செயற்படு கின்றார். இது பல்வேறு அபிவிருத்திப் பணிகளில் அதிபருடன் கைகோர்த்து செயற்படுவது பாராட்டுக்குரியது.

## பழைய மாணவர் சங்கம்

தாம் கற்ற கல்லூரியை என்றும் மறக்காமல் இருப்பவர்கள் பழைய மாணவர்கள். தம்மைக் கைதூக்கி விட்ட கல்லூரிக்காய் உழைக்கத் தயங்காதவர்கள் எமது கல்லூரியும் சிறந்ததொரு பழைய மாணவர் சங்கத்தைக் கொண்டிருப்பது பாராட்டதக்கது. பல அபிவிருத்தி பணிகளில் முன்னின்று உழைத்துவரும் பழைய மாணவர் சங்கத்தையும் அதன் தலைவர் திரு.இ.துஷ்யந்தன் அவர்களும் பாராட்டுக்குரியவர்கள். மேலும் ஆண்டுதோறும் பரிசுத்தினத்தை முன்னிட்டு வீதியோட்டம் ஒன்றை நடத்துவதோடு அதற்கான பரிசில்களை சாயி வீடியோ தாபனத்தார் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. பழைய மாணவர்சங்கத்தினருக்கு எனது பாராட்டுக்களும் நன்றிகளும்.

## வெளிநாட்டுப் பழைய மாணவர் சங்கம்

புலம் பெயர் நாடுகளில் எமது மாணவர்கள் பலர் சங்கமமைத்து கல்லூரி வளர்ச்சிக்கு உதவப் பழைய மாணவர்கள் முயற்சித்து வருகின்றனர். இத்தகைய முயற்சியில் கனடா வாழ் பழைய மாணவர்கள் பணி மெச்சுதற்குரியது. கனடாப் பழைய மாணவர் சங்கம் நன்கு திட்டமிட்டு செயற்படுவது பாராட்டுக்குரியது.

கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் நிதியுதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் ஆரம்பப் பிரிவு மேல் மாடிக் கட்டடம் இவ்வாண்டு முடிவதற்குள் திறப்பு விழாவை நடாத்தி மாணவர்கள் பாவனைக்கு விடப்பட உள்ளமையை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

## அறக் கொடை உதவிகள்

எமது கல்லூரி கிராமப் புறத்தைச் சேர்ந்தது. இதில் கல்வி கற்பவர்கள் அனைவரும் வசதி படைத்தவர்கள் அல்லர். வறுமை கல்விக்கு தடையானதல்ல ஆயினும் அத்தகையோர்க்கு வசதி படைத்தோர், அறம் செய்ய விரும்புவோர் உதவுவதன் மூலம் அவர்களும் கல்வி கற்க உதவ முடியும். ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள். எமது மாணவர்களும் சிறப்பாக உடை உடுத்திக் கல்லூரிக்கு வருவது கண்கொள்ளக் காட்சியாக இருக்கும். இதற்குச் சப்பாத்து கொப்பிகள் போன்றவற்றை வாங்குவதற்கு சமூகப் பெரியோர்கள் உதவினால் சிறப்பாக இருக்கும்.

இத்தகைய பணிகளைப் பலர் எமது கல்லூரிக்கு ஆற்றி வருகின்றனர். அதன் மூலம் பாதணிகள் பெறப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இத்தகைய உதவிகள் செய்யவிரும்பும் அறக் கொடையாளர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

## பரிசளிப்பு நிதியம்

கல்லூரியில் நடைபெறும் நிகழ்வுகளில் பரிசளிப்பு நிகழ்வு மிக முக்கியமானது. வெற்றி பெற்றவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வு, அதுமட்டுமல்ல பரிசில் பெற ஆர்வம் காட்டுபவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும் வகையில் பரிசில் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்துகிறோம். 75க்கு மேல் புள்ளி பெறும் மாணவர் பாராட்டப்படுகின்றார். இணைபாட விதானச் செயற்பாடுகளுக்கும் ஊக்கம் தரப்படுகின்றது.

இத்தகைய பரிசளிப்பு விழாவை நடாத்துவதற்கு நிதி தேவைப்படுகிறது. அதற்காக அவ்வப்போது சமூகத்தையே நாடுகின்றோம். எனினும் பரிசில் வழங்கவதற்கு பரிசளிப்பு நிதி வைப்புக்கள் உண்டு மேலும் பலர் இத்தகைய வைப்புக்களைச் செய்ய முன் வரவேண்டுமென வேண்டுகின்றோம்.

இது வரை 365000 ரூபா வைப்பிலிடப் பட்டுள்ளது. கடந்த ஆண்டில் திருமதி.தே.முத்துலிங்கம் அமரர் வே.முத்துலிங்கம் ஞாபகார்த்தமாக தந்த 10000'|= 'அன்பளிப்பு தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. இது வரை இப் பரிசில் நிதியத்திற்கு உதவியோர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிதி

கல்வியோடு விளையாட்டும் சமாந்தரமாகப் பயணிப்பது. எனவே விளையாட்டுத் துறை மீதும் பெரும் கரிசனை செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம். விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய பெருந்தொகை நிதி தேவைப்படுகின்றது. அதற்கென ஒரு நிதியத்தை ஆரம்பிப்பதும் சாலச் சிறந்தது. விளையாட்டுத் துறை ஆர்வலர்களிடமிருந்து இத்தகைய நிதி அன்பளிப்புக்களை எதிர் பார்க்கின்றோம்.

## உதவிகள்

தேவைகள் ஏற்படும் போதெல்லாம் நாம் சமூகத்தை நாடுகின்றோம். எமது கோரிக்கையை ஏற்றுப் பற்பல உதவிகள் எமக்குக் கிடைத்துள்ளன. அனைவருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும்.

## தேவைகள்

- கனடா பழைய மாணவர் சங்கத்தினரால் வாங்கப்பட்ட காணிக்குச் செல்வதற்கு ஒருபாதையை பெற்றுத்தர கௌரவ அமைச்சரவர்கள் உதவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.
- எமது விளையாட்டு மைதானம் பாதுகாப்பு அற்றதாக உள்ளது அதற்கு ஒரு கூடாரம் (Pavilan) சுற்றுமதிலும் கட்டித்தர கௌரவ அமைச்சரவர்கள் உதவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

எமது மாணவர்கள் தொகை ஏறத்தாழ ஆயிரம் இருந்த போதும் பல பௌதிக வளத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ளது.

- எமது நீர்தாங்கி மிகப் பழையது அது செப்பனிடப்பட வேண்டும். நீர்குழாய்களும் திருத்தி அமைக்கப்பட வேண்டியுள்ளது.
- வகுப்பறைத் தட்டுப்பாடு நிலவுகின்றது தளபாடங்கள் போதியளவு இல்லை.
- எமது மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு சிறிய விழாவை மேலும் முன்னெடுக்க கூடிய மண்டபம் ஒன்றில்லை இதனை அமைத்து உதவுமாறு கோருகின்றேன்.
- எமது கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் பாடசாலையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள காணிக்கு போவதற்கு ஒரு பாதை தேவையாக இருக்கின்றது. இதனைப் பெற்றுத் தர ஆவன செய்யுமாறு பிரதம விருந்தினரிடம் வினயமாக வேண்டுகிறோம்.
- நூலகப் புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடுகளைக் கல்வித் திணைக்களத்திலிருந்து எதிர்பார்க்கின்றோம்.
- எமது விளையாட்டு மைதானத்திலும் கூடாரமும் மதிலும் அமைக்க வேண்டியுள்ளது.
- இத்தேவைகள் எமக்கு மிக அத்தியாவசியமாக உள்ளன. இவற்றை நிவர்த்தி செய்ய சமூகம், திணைக்களம், அமைச்சு என அனைவரிடமும் கோருகிறோம்.

## நன்றிகள்

கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் சமூகத்திற்கு, பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தினரகள். எமக்கு பல வழிகளிலும் உதவும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள், வருடந்தோறும் பந்தல் உதவிகளைச் செய்து வரும் வீடியோ கலாமினி, நிக்சன் பல்பொருள் வாணிப உரிமையாளர்களுக்கும் சாயி வீடியோ, விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தினர், திரைச்சீலை - மேடை வர்ணம் பூசும் உதவிகள் புரிந்த லாலா ஸ்தாபனத்தினருக்கும் இவ்விழாவைச் சிறப்பிக்க வந்திருக்கும் பிரதம விருந்தினர்கள், ஏனைய விருந்தினர்களுக்கும், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்விசார் சாரா ஆளணியினர், மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு.வே.பாலசுப்பிரமணியம்**

**அதிபர்.**

# பரிசில்நாள் ஞாபகார்த்த நிதி வைப்பிலிட்டோர் விபரம்

| | நிதி வழங்கியோர் | ஞாபகார்த்தம் | உறவுமுறை | தொகை |
|---|---|---|---|---|
| 1 | பாடசாலை நிர்வாகம் | அமரர் திரு.துரைசிங்கம் | இளைப்பாறிய அதிபர் | 100000/= |
| 2 | திரு.மு.இராசா குடும்பத்தினர் | அமரர் இராசா | முன்னாள் ஆசிரியர் | 5000/= |
| 3 | திரு.S. M T.குடும்பத்தினர் | அமரர் திரு.துரைராசா | தந்தை | 10000/= |
| 4 | திருமதி.வயலட் | அமரர் திரு.ஜோசப் | கணவர் | 15000/= |
| 5 | திரு.ச.இரத்தினசிங்கம் | அமரர் சபாபதி | தந்தை | 5000/= |
| 6 | திரு.இ.கணேசலிங்கம் | அமரர் திரு.இராசா | தந்தை | 5000/= |
| 7 | திரு.க.கந்தையா | அமரர் திரு.ப.ரூபவதி | மகன் | 5000/= |
| 8 | திரு.கு.சிங்கையாரிய ரத்தினம் அவர்கள் | அமரர் திருமதி.மா. சிங்கையாரியரத்தினம் | மனைவி | 5000/= |
| 9 | திருவளர்செல்வி. க.இராசையா | அமரர் திரு.இராசையா | தந்தை | 5000/= |
| 10 | திரு+திருமதி இராசரத்தினம் | அமரர் திரு,திருமதி சங்கரப்பிள்ளை | பெற்றோர் | 10000/= |
| 11 | திரு.திருமதி தாமேதரம்பிள்ளை | அமரர் இரத்தினராசா | தந்தை | 10000/= |
| 12 | பாடசாலை நிர்வாகம் | பரிசளிப்பு நிதி | | 50000/= |
| 13 | திரு+திருமதி கனகராசா | பரிசளிப்பு நிதி நன்கொடை | இளைப்பாறிய அதிபர் | 10000/= |
| 14 | திரு.சிங்கரட்ணம் குடும்பம் | திரு.சிங்கரட்ணம் | தந்தை | 50000/= |
| 15 | திரு.சி.மீரகுமார் | பரிசளிப்பு நன்கொடை | பழைய மாணவர் | 30000/= |
| 16 | திரு.சி.யோகசிங்கம் | அமரர் யோ.சத்தியேந்திரா | மகன் | 50000/= |
| 17 | திருமதி.தே.முத்திலிங்கம் | அமரர் வே.முத்துலிங்கம் | கணவன் | 10000/= |
| 18 | திரு.வரதராஜன் | அமரர் தயாவதி சுமன் | | 10000/= |

# முகாமைத்துவக் குழு



(இடமிருந்து வலம்)

செல்வி.யோ.செல்லமுத்து (பகு.த), செல்வி.உ.சிங்கையாரியரத்தினம் (முகாமை உதவியாளர்), திருமதி.யே.சந்திரகுமார் (பிரதி அதிபர்), திரு.வே.பாலசுப்பிரமணியம் (அதிபர்), திரு.பொ.சகலகலாநிதி (பகு.த), திருமதி.வ.அருளானந்தம் (பகு.த), திருமதி.சி.தங்கராஜா (பகு.த)

# ஆசிரியர்கள்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
திருமதி.க.இராஜரஞ்சன், திருமதி.ந.ஜெகநாதன், திருமதி.உ.பாலசுப்பிரமணியம், திருமதி.சி.தங்கராஜா (பகுதி தலைவர்), செல்வி.யோ.செல்லமுத்து (பகுதி தலைவர்), திருமதி.வ.அருளானந்தம் (பகுதி தலைவர்) திருமதி.யோ.சந்திரகுமார் (பிரதி அதிபர்), திரு.வே.பாலசுப்பிரமணியம் (அதிபர்), திரு.பொ.சகலகலாநிதி (பகுதி தலைவர்), திரு.இ.இராசதுரை, திரு.மா.ஞானலிங்கம், திரு.சி.சிறீதரன், திரு.மு.கணேசானந்தன்

மத்தியில் நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
செல்வி.ல.தேவராசா, செல்வி.சி.பொன்னையா, திருமதி.த.சிவபாலலிங்கம், திருமதி.ய.கிருஷ்ணராஜன், செல்வி.த.முத்துராஜா, செல்வி.சி.இளையதம்பி, செல்வி.றெ.தங்கராசா, செல்வி.வி.பாலசுப்பிரமணியம் செல்வி.கீ.தேவராசா, திருமதி.க.செல்வரட்ணம், அருட்சகோதரி மேரி டிலக்சி, திருமதி.பி.இரத்தினகாந்தன், திருமதி.க.சின்னராசா, திருமதி.சு.சிவனேசராஜன், திருமதி.கௌ.சுபீஸ்கரன், திருமதி.ஜ.விஜயரட்ணம் திருமதி.ரோ.யோகநாதன், செல்வி.பி.சின்னத்துரை

நிற்பவர்கள் (பின்வரிசை இடமிருந்து வலம்)
திரு.வ.நவலோகநாதன், திரு.க.சுதாஸ்குமார், திரு.செ.முரளீதரன், திரு.சி.சுடகோபன், திரு.ந.ஸ்ரீமுருகதாஸ்காந்தன், திரு.த.சுதன், திரு.பா.இளங்கோ, திரு.தெ.விஷ்ணுதாஸ், திரு.இ.லவசியாமளன் திரு.த.சுபேஸ்சன், திரு.த.நிமல்ராஜ், சமூகமணிக்காதோர், திருமதி.வி.பங்கிதரன், திருமதி.அ.சரவணபவன், திரு.து.இராஜரஞ்சன்.

## 2009 NAME OF TEACHERS

| | NAME | Grade |
|---|---|---|
| 01 | Mr.V.Balasubramaniam | SLPS – 1 |
| 02 | Mrs.Y.Santhirakumar | SLTS -1 |
| 03 | Miss.Y.Sellamuthu | SLTS -1 |
| 04 | Mr.P.Sakalakalanithy | SLTS -1 |
| 05 | Mrs.V.Arulanantham | SLTS -1 |
| 06 | Mrs.S.Thangarasa | SLTS – 2-1 |
| 07 | Mrs.U. Balasubramaniam | SLTS – 2-1 |
| 08 | Mr.M.Gnanalingam | SLTS -1 |
| 09 | Mrs.T.Jeganathan | SLTS -1 |
| 10 | Mrs.T.Sivapalalingam | SLTS 2 -11 |
| 11 | Mrs.I.Vijayaratnam | SLTS 2 -11 |
| 12 | Mrs.G.Subeeskaran | SLTS 3 -1 |
| 13 | Mr.S.Sadagoban | SLTS -3 -1 |
| 14 | Mr.N.Srimurukathaskanthan | SLTS -2-11 |
| 15 | Mr.S.Muralitharan | SLTS -3-1 |
| 16 | Mrs.J.Kirushnarajah | SLTS -2-11 |
| 17 | Mrs.S.Langeswaran | SLTS -2-11 |
| 18 | Mrs.R.Yoganathan | SLTS -2-11 |
| 19 | Mrs.K.Rajaranjan | SLTS -2-1 |
| 20 | Mrs.S.Sivanesarasa | SLTS -2-11 |
| 21 | Mr.S.Sritharan | SLTS -2-11 |
| 22 | Mr.V.Navaloganathan | SLTS -2-1 |
| 23 | Mr.T.Rajaranjan | SLTS -2-11 |
| 24 | Mr.K.Suthaskumar | SLTS -2-11 |
| 25 | Mr.R.Rajathurai | SLTS -1 |
| 26 | Mrs.M.Velsuloyeny | SLTS -3-11 |
| 27 | Miss.M.Dharshini | SLTS -3-1 |
| 28 | Mrs.A.Saravanabavan | SLTS -3-1 |
| 29 | R.Ilayathamby | SLTS -3-1 |
| 30 | Mr.M.Kanesananthan | SLTS -3-1 |
| 31 | Mrs.P.Ratnakanthan | SLTS -3-1 |
| 32 | Mrs.R.Ratnasri | SLTS -3-1 |
| 33 | Mr.T.Kabesan | SLTS -3-1 |
| 34 | Mrs.K.Sinnaraja | SLTS -3-1 |
| 35 | Mrs.V.Pakeetharan | SLTS -3-1 |
| 36 | Mr.T.Suthan | SLTS -3-1 |
| 37 | Mr.T.Visnuthas | SLTS -3-1 |
| 38 | Miss.P.Sivajiny | SLTS -3-1 |
| 39 | Mr.P.Illanko | SLTS -3-1 |
| 40 | Sister.Mery.Dilukshi | |
| 41 | Mrs.S.Selvaratnam | SLTS -2-11 |
| 42 | Mrs.U.Balachandiran | SLTS -3-1 |

# NON ACADEMIC STAFF

| | NAME | DESIGNATION |
|---|---|---|
| 1 | Miss.U.Singaiariyaratnam | Management Assistant |
| 2 | Mr.K.Kanesalingam | Lab Attendant |
| 3 | Mr.R.Naduṇceliyan | School Labourer |
| 4 | Mr.T.Subramaniam | School Labourer |
| 5 | Mr.V.Sanmuganathan | Sanitori Labourer |
| 6 | Mrs.T.Kalaiyarasi | Laibrary Assistant |
| 7 | Mr.K.Jeevakumar | Re.Watcher |
| 8 | Miss.J.Jeyasanthirabose | Computer Typist |

## Volunteer TEACHERS

1. miss. V.Balasubramaniam
2. miss. P.Balasinkam
3. miss. R.Thangaraja
4. miss. L.Thevarasa
5. miss. K. Thevaraja
6. Mr. T.Vimalraj
7. Mr. R.Lavasiyamalan
8. Miss. M . Thangaraja
9. Miss . S. Radnam

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

தலைவர்:- திரு. வே. பாலசுப்பிரமணியம் (அதிபர்)

உபதலைவர்:- திருமதி. யோ. சந்திரகுமார்

செயலாளர்:- திரு. பொ. வரதகுலசிங்கம்

உபசெயலாளர்:- திரு. சி. சுரேசன்

பொருளாளர்:- திருமதி. த. சிவபாலலிங்கம்

## செயற்குழு உறுப்பினர்

திரு. சி. சந்திரலிங்கம்

திரு. அ. குணபாலசிகங்கம்

திருமதி. ரா. ஜெயந்தி

திருமதி. ந.இ ரத்தினேஸ்வரி

திருமதி. கு. றஜனி

திருமதி. பா. சாந்தா

திருமதி. சி. மங்களேஸ்வரி

திரு. சு. விஜயமோகனதாசன் (கணக்கு பரிசோதகர்)

திருமதி. சு. செல்வரத்தினம்

திருமதி. வ. அருளானந்தம்

திரு. செ. முரளீதரன்

## பழைய மாணவர் சங்கம்

போசகர்:- திரு. V. பாலசுப்பிரமணியம் (அதிபர்)

திரு. S. சந்திரலிங்கம் (J.P)

திரு. K. செல்வரட்ணம் (J.P)

தலைவர்:- திரு. இ. துஷியந்தன்

செயலாளர்:- Dr. K. தங்கத்தாமரைச்செல்வன்

பொருளாளர்:- திரு. N. மகேந்திரராசா

உபதலைவர்:- திருமதி. P. கணபதிப்பிள்ளை

உபசெயலாளர்:- திரு. R. கிருஷ்ணர்

கணக்காய்வாளர்:- திரு. சு. விஜயமோகணராஜா

## செயற்குழு உறுப்பினர்கள்

01. திரு. R. ஜெயக்காந்தன்
02. திரு. R. யோகராசா
03. திரு. R. யோகராசா
04. திரு. T. வித்தியானந்தம்
05. திரு. R. பாலமுரளி
06. திரு. P. நவரூபன்
07. திரு. R. T. கிருபானந்
08. திரு. B. ரமேஸ்குமரன்

## தரம் 01 2008

## அதிவிசேட சித்தியடைந்தோர்

01. வி. லக்சிகன்
02. வே. சதுஜன்
03. ப. ஜெயராஜ்
04. சி. தர்ஷாந்
05. இ. அங்குசன்
06. சி. லக்சன்
07. அ. அஜந்தன்
08. டு. டுவின்சன்
09. ஜெ. தில்ஷான்
10. சி. ஏகதர்ஷன்
11. யோ. பிரசன்னா
12. சி. மதுஜன்
13. ம. சேந்தன்
14. ச. இளங்கீதன்
15. ச. யதுசன்
16. வி. ரஜீக்கா
17. ரா. ஹம்சிகா
18. ப. இந்துஷா
19. மோ. ரதீஸ்வரி
20. கி. கிருசாந்தி
21. வ. கிருஷிகா
22. அ. பகீர்ஷனா
23. இ. கிருசாந்தன்
24. கி. பிரவீன்
25. ச. சாருஜன்
26. ந. ஜருசா
27. கு. அபிராமி

## விசேட சித்தியடைந்தோர்

01. சி. பானுசன்
02. உ. லக்சியன்
03. ஜெ. சிந்துஜன்
04. யோ. நிதுசன்
05. த. திலக்சிகா
06. த. மிருசிகா
07. பூமிகா
08. ஆ. தனரூபி
09. ச. றொபினா
10. க. மதுசன்
11. கு. ஜெதூசன்
12. சி. நிலூஜன்
13. சு. டிலக்சன்
14. சி. சிந்துஜன்
15. இ. டிலக்ஷன்
16. கி. நீரஜன்
17. ம. திவ்வியன்
18. இ. மயூரதி
19. சி. மஜுசா
20. பு. சியானுகா
21. க. விஸ்ணுதர்மிகா
22. அ. குலேந்தினி
23. ச. லோஜினி
24. ப. அனுசியா

## சாதாரண சித்தியடைந்தோர் விபரம்

01. ந. யதுசன்
02. சு. கணேஸ்
03. பா. யதுசன்
04. சி. சிவதர்சன்
05. ம. டனிஸ்வரன்
06. யூ. கோகுலன்
07. ர. ரஜீபன்
08. இ. பிரணவன்
09. சு. டிலக்சனா
10. டெ. மதுசா
11. சி. தர்மி
12. அ. அருள்பிரதாஸ்
13. ஜெ. யதுசன்
14. ர. ரஞ்சித்
15. சி. ரக்சன்
16. ம. தருசீகன்
17. ப. கஜானா
18. ம. நிசாளினி
19. ம. டனிஸ்ரன்

# பரிசளிப்பு

## தரம் 02 - 2008

## அதிவிசேடம்

01. க. நிதர்சன்
02. இ. துஜிந்தன்
03. சு. பிருர்தாதரன்
04. நா. கவியரசன்
05. ஒ. நிசாந்தன்
06. சீ. சிவஜெனனி
07. கு. அம்ஷனா
08. ப. சுரேகா
09. த. சாகித்தியா
10. ஜெ. வைஷ்ணவி
11. த. சுகன்யா
12. த. சுகன்யா
13. ஜெ. அபிசாளினி

01. மு. கோகுலன்
02. ப. கோகுல்ராஜ்
03. தை. பிரசன்னா
04. ந. சைலரூபன்
05. த. அஜர்தன்
06. ஜெ. ஜக்சன்
07. சி. தேனுகா
08. பா. சிந்துரா
09. அ. திவ்வியா
10. ம. சஞ்சஜா
11. சி. நிவேதிகா
12. சி. வைஷ்ணவி
13. த. யதுஷா

## விசேட சித்தி

01. சோ. லஜீபன்
02. சு. சுஸார்
03. ந. சிபிர்தன்

02. ச. கணாளன்
02. த. சேந்தன்
03. ப. சஜீபன்

| | |
|---|---|
| 04. த. தனுஸ்வரன் | 04. த. தனுசன் |
| 05. வி. பிந்துஜன் | 05. தி. கிரீசன் |
| 06. சி. ரூபனா | 06. வி. சஞ்சீவன் |
| 07. தே. சங்கீதா | 07. ஜெ. சுதாஜினி |
| 08. தே. நிலாஜினி | 08. இ. வைஷ்ணவி |
| 09. த. யசிகா | 09. வ. டிலக்சிகா |
| | 10. இ. வைஷ்ணவி |

## சாதாரண சித்தி

| | |
|---|---|
| 01. யோ. சன்னா | 01. க. விஷ்னுகோபன் |
| 02. க. கவின்ரூபன் | 02. த. ரேனுஜன் |
| 03. வி. அபிசாஜ் | 03. ம. அனுயன் |
| 04. ஜெ. விதுசன் | 04. எ. அனுசியா |
| 05. ம. சுகன்யா | 05. சி. கிருத்திகா |
| | 06. ம. சதுர்ந்தினா |
| | 07. ம. நிசாயினி |

## தரம்: 03 - 2008
## பரிசு பெறும் மாணவர்கள்

01. **தி. விதுஜனன்**
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், பொதுஅறிவு, ஆக்கம்

02. **ச. பிரவீனன்**
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுஅறிவு, அழகியல்

03. **ம. டென்சிகா**
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், ஆக்கம். பொதுஅறிவு

04. **செ. ஆரபி**
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், சிங்களம், ஆங்கிலம், பொதுஅறிவு, ஆக்கம்.

05. **நீ. பிரணவி**
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுஅறிவு, சிங்களம்,அழகியல்

06. **சு. சுலக்சன்**
தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், ஆங்கிலம், பொதுஅறிவு, ஆக்கம்.

07. தே. லக்ஷனா
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், பொதுஅறிவு, அழகியல்.

08. ச. கிருசன்
சமயம், தமிழ், சுற்றாடல், பொதுஅறிவு, அழகியல்.

09. ச. சர்பிலராஜ்
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், பொதுஅறிவு, ஆக்கம்.

10. எஸ். சோபிதன்
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆக்கம், அழகியல், ஆங்கிலம்

11. பி. நேருஜன்
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், ஆக்கம், அழகியல்.

12. சோ. சுவஸ்திகா
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், ஆக்கம், அழகியல்

13. ஜெ. பிரியதர்சன்
சுற்றாடல்,

14. இ. றுக்சலன்
சமயம், தமிழ், சுற்றாடல், சிங்களம்.

15. சு. டிலக்சன்
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல்.

16. ஜெ. தனோஜன்
சமயம், தமிழ், சுற்றாடல்,

17. ச. விதுர்சன்
தமிழ், சுற்றாடல், ஆக்கம்.

18. பு, சாருஜன்
சுற்றாடல், ஆக்கம்

19. அ. மதுசன்
சமயம், தமிழ், கணிதம், சுற்றாடல்,

20. க. திவ்வியா
சமயம், தமிழ், சுற்றாடல், அழகியல்

21. அ. நிலக்சிகா
சமயம், தமிழ், சுற்றாடல், அழகியல்.

22. ந. பானுசன்
சமயம், தமிழ், சுற்றாடல், ஆக்கம், அழகியல்

23. சி. மயூரன்
சமயம்

24. சே. பிரணவன்
சுற்றாடல்

25. வி. கேதாஜினி

தமிழ், சுற்றாடல்

26. த. கிருஷிகா

சமயம், தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்

27. ந. வினோதினி

சுற்றாடல்

28. வி. துசிந்தா

ஆக்கம்

## தரம் 04

01. இ. ஶ்ரீராம்

சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், பொதுஅறிவு, சிங்களம் ஆக்கம், அழகியல்

02. ம. ஜனகன்

சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், பொதுஅறிவு, சிங்களம் ஆக்கம், அழகியல்

03. த. சரண்யா

சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், பொதுஅறிவு, சிங்களம் ஆக்கம், அழகியல், சித்திரம்

04. தி. யதுசன்

சமயம், தமிழ், ஆங்கிலம், பொதுஅறிவு, சிங்களம், ஆக்கம், அழகியல்

05. சி. கோகுலராஸ்

சமயம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், சிங்களம், ஆக்கம், அழகியல்

06. ஜெ. மதுராங்கள்

சமயம், ஆக்கம், அழகியல்

07. ஒ. கிஷோகரன்

அழகியல்

08. இ. பிறேமலதா

ஆக்கம்

09. த. சோபிதா

ஆக்கம், அழகியல்

10. ஜெ. ஜெனூசன்

சமயம், தமிழ், ஆங்கிலம்

11. தே. லக்சனா

சமயம், ஆக்கம், அழகியல்

12. ஜெ. ஜானுஷன்

ஆக்கம், அழகியல்

13. த. ஜசோதினி
ஆக்கம்

14. யோ. துவாகர்
ஆக்கம்

15. பா. கோனிசா
ஆக்கம், அழகியல்

16. வே. தயன்
ஆக்கம்

17. கு. திலக்சன்
தமிழ், அழகியல்

18. தி. கிருசாந்
சமயம், ஆக்கம்

19. ச. கபில்ராஜ்
சமயம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், பொதுஅறிவு, அழகியல் ஆக்கம்,

20. சி. லதுசன்
சமயம், தமிழ், ஆங்கிலம், பொதுஅறிவு, ஆக்கம், அழகியல்

21. கி. கிரிசாந்தன்
சமயம், தமிழ், கணிதம், ஆங்கிலம், சிங்களம், ஆக்கம், அழகியல்

22. க. தேவிசூரியா
சமயம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், ஆக்கம், அழகியல்

23. பொ. சானுசன்
சமயம், தமிழ், ஆங்கிலம், சுற்றாடல், ஆக்கம், அழகியல்

24. சு. திவியா
சமயம், தமிழ், ஆங்கிலம், ஆக்கம், அழகியல்

25. த. நிறோஜன்
சமயம், தமிழ், , பொதுஅறிவு, சிங்களம் , அழகியல்

26. க. விஷ்ணுப்பிரியா
சமயம், தமிழ், சுற்றாடல், ஆக்கம், அழகியல்

## தரம் – 05

**சி. சிவலோஜி**

தமிழ் - 1ஆம் இடம்
சமயம் - 2ஆம் இடம்
சுற்றாடல் - 2ஆம் இடம்
ஆங்கிலம் - 1ஆம் இடம்
பொதுஅறிவு - 1ஆம் இடம்
சிங்களம் - 3ஆம் இடம்

**க. நிலக்சனா**

தமிழ் - 2ஆம் இடம்
சமயம் - 1ஆம் இடம்

**சி. லவண்சிகா**

தமிழ் - 3ஆம் இடம்
கணிதம் - 2ஆம் இடம்
சுற்றாடல் - 1ஆம் இடம்
பொதுஅறிவு 2ஆம் இடம்
ஆக்கம் - 1ஆம் இடம்

**தி. திஜிதரன்**

சமயம் - 3ஆம் இடம்
சித்திரம் - 1ஆம் இடம்
ஆக்கம் - 2ஆம் இடம்

**மோ. சாருகா**

கணிதம் - 1ஆம் இடம்
சுற்றாடல் - 3ஆம் இடம்
ஆங்கிலம் - 2ஆம் இடம்
சித்திரம் - 3ஆம் இடம்

**தே. சோபனா**

கணிதம் - 3ஆம் இடம்
சித்திரம் - 2ஆம் இடம்

**க. அனுசன்**

ஆங்கிலம் - 3ஆம் இடம்

**சி. ரேணுகா**

பொதுஅறிவு - 3ஆம் இடம்
ஆக்கம் - 2ஆம் இடம்

**ஜெ. அஜந்தன்**

கி. சமயம் - 1ஆம் இடம்

**இ. பற்றிக்ஜோன்சன்**

கி. சமயம் - 2ஆம் இடம்

**சு. ஸ்ரீபன்ராஜ்**

கி. சமயம் - 3ஆம் இடம்

**இ. ஜீவிதா**

சிங்களம் - 2ஆம் இடம்

**அ. வினிசா**

சிங்களம் - 1ஆம்இடம்

## புலமைப்பரிசில் சித்தி

01. மோ. சாருஜா
02. தி. திஜிதரன்
03. த. நிரோஜன்
04. சி. கௌதமன்

## 100 புள்ளிகளுக்கு மேற்பெற்றோர் விபரம்

01. கி. மகிந்தராஜ்
02. க. அனுசன்
03. ஆ. கஸ்லின்

04 ச. சிந்தூரன்

05. கு. கஜலக்சன்

06. தி. பவித்திரா

07. க. நிலக்சனா

08. சி. லவன்சிகா

09. சி. சிவலோஜி

## தரம் 06

**01. சி. சிவலக்ஷனன்**
தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், புவியியல், குடியுரிமை, சுகாதாரம்

**02. செ. செல்வப்பிரசாத்**
சமயம்

**03. கே. சிந்துஜன்**
தமிழ், சமயம், கணிதம், புவியியல்

**04. கு. தனுசாந்**
சமயம், சுகாதாரம்

**05. க. சுலக்ஷன்**
குடியுரிமை
சுகாதாரம்

**06. ஓம் கார்த்திகா**
தமிழ், சமயம், குடியுரிமை, சுகாதாரம்

**07. அ. ஜதிலா**
தமிழ், சமயம், புவியியல், சுகாதாரம்

**08. சி. மேனகா**
சமயம்

**09. க. சங்கமி**
சமயம்

## தரம் 07

**01. பொன்மாறன்**
தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை

**02. ப. சரவணன்**
தமிழ், சமயம், கணிதம்

**03. ப. அருண்ராஜ்**
தமிழ், சமயம், கணிதம், புவியியல்

**04. சி. புவிராஜ்**
சமயம், குடியுரிமை

05. கு. யதுர்சன்
சமயம்
06. ஜெ. பார்த்தீபன்
சமயம்
07 தி. ரஜிதரன்
தமிழ், சமயம்
08. கு. துஷாந்
சமயம்
09. க. கண்மணி
தமிழ்
10. கு. தமிழ்க்குமார்
சமயம்
12. வே. தாருகா
சமயம்
11. ஓம் கிருத்திகா
தமிழ், சமயம், குடியுரிமை
13. தி. மதிலக்ஷனா
சமயம்
14. ந. கலிஸ்ரா
சமயம்
15. ர. மிதுசனா
சமயம்
16. அ. மேனகா
சமயம்
17. அ. அஜந்தினி
தமிழ், சமயம், கணிதம்
18. சா. மாதங்கி
சமயம
19. ஞா. ஜெமிலா
சமயம்

## தரம் 08

01. சி. ரவிசங்கர்
தமிழ், சமயம், வரலாறு, அழகியல்
02. பூ. துசாந்
தமிழ், சமயம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, சுகாதாரம்
03. ஸ்ரீ. இந்துசன்
சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், சுகாதாரம்

04. **சு. மகிதனன்**

கணிதம்

05. **தி. திலக்ஷன்**

சுகாதாரம்

06. **ச. மதியுகன்**

சுகாதாரம்

07. **சு. அனுசியா**

தமிழ், சமயம்

08. **சி. நிறோஜி**

தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், அழகியல்

09. **ச. பாமினா**

தமிழ், சமயம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், அழகியல்.

10. **அ. கபிலவேணி**

தமிழ், சமயம், சுகாதாரம்.

11. **ஶ்ரீ. சிந்துஜா**

தமிழ், சமயம், விஞ்ஞானம், சுகாதாரம்.

12. **வை. சோபனா**

தமிழ், சமயம், வரலாறு, சுகாதாரம்

13. **த. அபிராமி**

தமிழ், சமயம், வரலாறு, சுகாதாரம்.

14. **இ. கார்த்திகா**

தமிழ், சமயம், சுகாதாரம், அழகியல்,

15. **வ. மனோஜா**

தமிழ், சமயம்.

16. **க. கஜேந்தினி**

சமயம், சுகாதாரம்

17. **செ. சஞ்சிகா**

சமயம், சுகாதாரம்.

18. **சி. தாட்சாயனி**

சமயம், வரலாறு, சுகாதாரம்.

19. **சி. சகானா**

சமயம், சுகாதாரம்.

தரம் – 09B

01. செ. விமல்ராஜ்

சுகாதாரம்

02. நி. சார்மினி

சுகாதாரம்

தரம் 09C

01. இ. கஸ்தூரிராஜன்

சமயம், தமிழ், ஆங்கிம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சித்திரம், சுகாதாரம், குடியுரிமை.

02. நா. மயூரதாசன்

சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சுகாதாரம், குடியுரிமை.

03. செ. தனுஷன்

சமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல், சித்திரம், சுகாதாரம், குடியுரிமை.

04. பே. கஜமுகன்

சமயம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, புவியியல், சுகாதாரம், குடியுரிமை.

05. ச. துஷாந்

சமயம், தமிழ், விஞ்ஞானம், புவியியல், சுகாதாரம்

06. சி. சுதர்சன்

விஞ்ஞானம்

07. கு. ராகுலன்

விஞ்ஞானம்

08. ச. ரவிவர்மன்

வரலாறு, புவியியல், சுகாதாரம்

09. க. தமிழ்செல்வன்

சுகாதாரம்

10. செ. ஜெயநிதி

சுகாதாரம்

11. த. பவீந்திரன்

சுகாதாரம்

12. **கா. கீர்த்தனா**
சமயம், தமிழ், கணிதம், வரலாறு, புவியியல், சுகாதாரம்

13. **சி. கீர்த்தனா**
தமிழ், கணிதம்

14. **யோ. சூரபி**
சுகாதாரம்

15. **நா. விதுர்ஷா**
சமயம், தமிழ், வரலாறு, சுகாதாரம்

16. **அ. நிவேதிகா**
சமயம், சங்கீதம், சுகாதாரம்

17. **ச. நிரேசிகா**
சமயம், தமிழ், புவியியல், சுகாதாரம்

18. **சி. மேரிதர்மஶ்ரீ**
சமயம், வரலாறு, புவியியல், சுகாதாரம், குடியுரிமை.

19. **இ. விதுஷா**
சமயம், சுகாதாரம்

20. **சி. சிவமெரினா**
சமயம்

21. **வி. கம்சாயினி**
சுகாதாரம்

**தரம் – 10C**

01. **தி. நிதிபன்**
சமயம், கணிதம்

02. **சி. அனுதரன்**
சமயம், கணிதம், வரலாறு, சுகாதாரம்

03. **க. பிரணவன்**
வரலாறு

04. **ச. தனுஷன்**
சுகாதாரம்

05. **கு. நேருஜன்**
சுகாதாரம்

06. **இ. லக்சகாந்**
சமயம்

07. **சி. மயூரன்**
சமயம், வரலாறு, சுகாதாரம்

08. **செ. ஜனார்த்தனன்**
சமயம், தமிழ், வர்த்தகம், தகவல தொழிநுட்பத்திறன்

09. தி. பிரியங்கா
கணிதம், சுகாதாரம்

10. யோ. லவிஜெனா
கணிதம், வரலாறு, சுகாதாரம்

11. தி. ஜெயந்தி
சுகாதாரம்

12. சி. வர்சனா
சமயம், விஞ்ஞானம்

13. த. பதுமினா
சுகாதாரம்

14. செ. மேனகா
சுகாதாரம்

15. சி. தேனுகா
சமயம், வரலாறு, வர்த்தகம், சுகாதாரம்

16. ந. ஸ்ரீதர்சனா
சமயம்

17. சி. கௌதமி
சுகாதாரம்

18. ச. சுரேகா
சங்கீதம், சுகாதாரம்

19. து. பிரசாந்தினி
சமயம், தமிழ், கணிதம், வரலாறு, வர்த்தகம், சங்கீதம், சுகாதாரம்

தரம் 11C

01. செ. தவநிதி
சமயம்

02. கு. மஞ்சுகான்
சமயம், சுகாதாரம்

03. சி. முரளிபரதம்
சமயம்

04. சி. சிவாகரன்
சமயம், கணிதம், விஞ்ஞானம்

05. சி. கோகுலராஜ்
சமயம்

06. **சு. தற்பரன்**
சமயம், கணிதம், சுகாதாரம்

07. **செ. கரிஸ்நாத்**
சமயம்

08. **பி. விஜதரன்**
சமயம், சுகாதாரம்

09. **ஜெ. இந்திரபோஸ்**
சமயம்

10. **க. அரவிந்தன்**
சமயம்

11. **சு. நிறோஜன்**
சமயம்

12. **க. தாட்சாஜினி**
சமயம்

13. **ச. சுஜற்சயந்திகா**
சமயம்

14. **ச. கயானா**
சமயம், தமிழ், கணிதம், வரலாறு, வர்த்தகம்

15. **ஸ்ரீ. தரண்யா**
சமயம்

16. **கு. நிசாந்தி**
சமயம்

17. **ந. கஜரக்ஷி**
சமயம், தமிழ், ஆங்கிலம், சித்திரம்

18. **சி. விசறெஜினா**
சமயம்

19. **ச. தசாயினி**
சமயம்

20. **சி. மேரிதர்சனா**
வரலாறு

21. **உ. கஜிதா**
சமயம், வரலாறு, சங்கீதம்

22. **நா. கஜனி**
சமயம், வரலாறு

# பரிசுப்பட்டியல் - 2008

## 2008 - கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 01. | சி. ஜெயதீபன் | :- | இந்துநாகரிகம் |
| 02. | க. கேதாரன் | :- | இந்துநாகரிகம் |
| 03. | நா. கயரூபன் | :- | இந்துநாகரிகம் |
| 04 | க. பிரவீனா | :- | இந்துநாகரிகம்<br>அளவையியல் |
| 05 | நா. அனோஜா | :- | இந்துநாகரிகம்,<br>தமிழ்,<br>அளவையியல் |
| 06. | வே. கஜீனா | :- | இந்துநாகரிகம்,<br>அளவையியல் |
| 07. | கோ. வெண்ணிலா | :- | இந்துநாகரிகம் |
| 08. | ம. அபிராமி | :- | இந்துநாகரிகம்,<br>தமிழ்,<br>அளவையியல் |
| 09. | யோ.தனுர்சனா | :- | இந்துநாகரிகம் |
| 10. | ச. கயூபனா | :- | தமிழ்,<br>அளவையியல் |
| 11. | சி. மேரிதர்மினி | :- | தமிழ்,<br>கிறிஸ்தவம்,<br>அளவையியல் |

## 2008 - வர்த்தகப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 01. | கு. ராஜ்குமார் | :- | கணக்கீடு,<br>பொருளியல்,<br>வணிகக்கல்வி |
| 02. | இ. செந்தூரன் | :- | கணக்கீடு, பொருளியல், வணிகக்கல்வி |
| 03. | த. மதன்ராஜ் | :- | பொருளியல், வணிகக்கல்வி |

## 2009 - கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| 01. | சி. சிவப்பிரியா | :- | இந்துநாகரிகம்,<br>தமிழ்,<br>அளவையியல் |
| 02. | இ. கவிதா | :- | இந்துநாகரிகம்,<br>தமிழ்,<br>புவியியல் |
| 03. | பா. முகூர்த்தனா | :- | இந்துநாகரிகம்,<br>தமிழ்,<br>அளவையியல் |

04. சி. பிந்துஜா :- தமிழ்,
புவியியல்,
05. செ. பிரதீபா :- தமிழ்
புவியியல்
06. ப. கார்த்திகா :- தமிழ்
அளவையியல்
07. சி. டயதரன் :- புவியியல்
08. த. சுதாஜினி :- அளவையியல்
09. க. சாலினி :- அளவையியல்
10. சி. சுபாஜினி :- அளவையியல்
11. பா. கலைவாணி :- புவியியல்

## 2010 – கலைப்பிரிவு

01. க. கஜயந்தன் :- தமிழ்
அளவையில்
02. சி. அர்ஜிகா :- தமிழ்
இந்துநாகரிகம்
புவியியல்
03. கு. கிருசாந்தி :- தமிழ்
அளவையியல்
04. கு. அபர்ணா :- தமிழ்
அளவையியல்
05. அ. லக்சனா :- தமிழ்
சங்கீதம்
06. உ. ரயிலா :- தமிழ்
07. ஜெ. மதிஜாஜினி :- சங்கீதம்
08. அ. ரூபாட் பிராங்கிளின் :- அளவையியல்
09. பு. சுகிர்தா :- அளவையியல்
10. சி. சாரங்கி :- அளவையியல்

## சிறப்புப்பரிசு பெறுவோர் விபரம்

**தரம் – 06**

சி. சிவலக்ஷனன்

**தரம் – 07**

ச. பொன்மாறன்

**தரம் – 08**

சி. ரவிசங்கர், சி. நிறோஜி, ச. பாமினா

தரம் – 09

இ. கஸ்தூரிராஜன், செ. தனுஷன், பே. கஜமுகன்

தரம், ந. கஜலக்சி, ச. கஜானா.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

## யாழ் மாவட்ட விஞ்ஞான புத்தகக் கண்காட்சி (2008)

| பெயர் | பொருள் | இடம் |
|---|---|---|
| கு. ருஷாந் | Hot plate (மண்ணால்) | |
| த. கமலதீபன் | Hot plate (மண்ணால்) | 1 |
| ரவிமர்மன் | | |
| தவநிதி செல்வநாதன் | தன்னியக்க நீர்த்தாங்கி | 1 |

## கோப்பாய் கோட்டம் – சித்திரப்போட்டி (2008)

| | |
|---|---|
| ந. கஜலக்சி | 1 |
| சி. சிறெஜீனா | 2 |

## கோப்பாய் கோட்டம் விளையாட்டுப் போட்டி (2008)

| பெயர் | விளையாட்டு | வயது/பிரிவு | இடம் |
|---|---|---|---|
| J. ஜெனிஸ்ரன் | உயரம் பாய்தல் | 11 | 2 |
| S. இந்துஜன் | உயரம் பாய்தல் | 15 | 2 |
| B. கபில்லாஜ் | உயரம் பாய்தல் | 17 | 2 |
| T. டினொக்ஸ் | ஈட்டி எறிதல் | 17 | 3 |
| P. சுபேந்திரன் | குண்டு எறிதல் | 19 | 1 |
| P. சுபேந்திரன் | தட்டு எறிதல் | 19 | 3 |
| B. சிந்துஜா | 400அ | 19 | 1 |
| K. பார்த்தீபன் | நீளம் பாய்தல் | 21 | 3 |
| B. நிதி | ஈட்டி எறிதல் | 19 | 3 |
| S. திவியா | நீளம் பாய்தல் | 11 | 3 |
| S. கஜந்தினி | உயரம் பாய்தல் | 11 | 2 |

| பெயர் | விளையாட்டு | பிரிவு | இடம் |
|---|---|---|---|
| ஆண் | கரப்பந்து | 19 | 3 |
| பெண் | கரப்பந்து | 17 | 1 |
| ஆண் | துடுப்பாட்டம் | 19 | 1 |
| சி. சிலோஜி | சதுரங்கம் | 11 | 1 |
| தே. சோபனா | சதுரங்கம் | 11 | 1 |
| த. நிறோஜன் | சதுரங்கம் | 11 | 1 |
| க. பவிதன் | சதுரங்கம் | 11 | 1 |
| இ. ஸ்ரீராம் | சதுரங்கம் | 10 | 1 |
| ம. ஜனகன் | சதுரங்கம் | 10 | 1 |
| ஆண் | சதுரங்கம் | 13 | 1 |
| ஆண் | சதுரங்கம் | 13 | 3 |

## தமிழ்மொழித்தினம் 2008

| பெயர் | நிகழ்ச்சி | பிரிவு | இடம் |
|---|---|---|---|
| ச. பொன்மாறன் | கட்டுரை வரைதல் | II | 1 |
| சு. கஜானி | கவிதை ஆக்கம் | V | |
| ச. கஜானா | சிறுகதை ஆக்கம் | IV | 1 |
| ப. அருள்ராஜ் | பேச்சு | II | 3 |
| ச. சுரேக்கா | தனி இசை | IV | 2 |
| இ. கோபிகா | தனிநடனம் | II | 2 |
| க. தேவிசூரியா | தனிநடனம் | I | 1 |
| இ. விதுர்ஜனா | தனி நடனம் | III | 2 |
| | குழு இசை | II | 2 |
| க. பொ. த. (சா/த) 10 | அழகியற்போட்டி | | 1 |
| விவாதம் | | | |
| | (திறந்த போட்டி) விவாதம் | | 2 |
| சி. நிரோஜி | திருக்குறள் | III | 3 |
| சி. மேரிதர்சினி | திருக்குறள் | V | 4 |

## சைவ விழுமியம் பேணல் போட்டி (2008)

| பெயர் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| பா. சிந்துரா | நீதி நூல் மனனம் | 3 |
| இ. ஸ்ரீராம் | பண்ணிசை | 1 |
| இ. அனுஷாந் | பண்ணிசை | 2 |
| நீ. பிரணவி | பண்ணிசை | 1 |

## கணித விஞ்ஞான வினாடி வினாப்போட்டி (2008)

| பெயர் | இடம் |
|---|---|
| இ. ரவிவர்மன் | 1 |
| செ. தவநிதி | 1 |

## சமூக விஞ்ஞானப் போட்டி (2008)

| பெயர் | நிலை |
|---|---|
| பொ. பொன்மாறன் | 1 |
| இ. கஸ்தூரிராஜன் | 1 |
| அ. கபிலவேணி | 5 |
| ச. கஜானா | 1 |
| உ. கஜிதா | 5 |

## வணிக அறிவுப் போட்டி (2008)

| பெயர் | இடம் |
|---|---|
| ச. கஜானா | 3 |

## English Day Compatitions (2008)

| *Name* | *Position* | |
|---|---|---|
| A. Nivethika | 1 | Copy Writing |
| S. Ponmaran | 1 | Dictation |
| S. Ponmaran | 1 | Creative Writing |
| O. Kiruththika | 1 | Copy Writing |
| S. Niraji | 1 | Dictation |

## சமூக விஞ்ஞானப் போட்டி (2008)

| பெயர் | இடம் |
|---|---|
| த. டிலக்ஷனா | 2 |
| பொ. பொன்மாறன் | 1 |
| இ. கஸ்தூரிராஜன் | 1 |
| ச. கஜானா | 2 |

## மாணவர் வரவு

### தரம் 6

01. சி. சிவலக்ஷன்
02. கே. சிந்துஜன்
03. தி. நிருஷன்
04. அ. சாள்ஸ்
05. ஞா மாதுரன்
06. ஓம் கார்த்திகா
07. அ. ஜதிலா
08. பா. பவிதா
09. சு. கிரிஜலா

### தரம்: 07

01. ச. பொன்மாறன்
02. ஜெ. பார்த்தீபன்
03. தி. நாஜிதரன்
04. வே. தாருகா

### தரம்: 08

01. சி. ரவிசங்கர்
02. ஸ்ரீ. இந்துசன்
03. வி. சேதுபன்
04. சி. கிருஷாந்

05. சு. அனுசியா
06. சி. நிரோஜி
07. க. பாபினா
08. அ. கபிலவேணி

**தரம் 9**

01. ஞா. மயூரதாசன்
02. இ. கஸ்தூரிராஜன்
03. ப. கபில்ராஜ்
04. செ. தனுசன்
05. ச. துசாந்
06. பே. கஜமுகன்
07. கு. ராகுலன்
08. பூ. சாருஜன்
09. சி. கீர்த்தனா
10. ஞா. விதுர்சா
11. வி. கம்சாஜினி
12. அ. நிவேதிகா
13. யோ. ஆரபி

**தரம்: 10**

01. தி. நித்பன
02. சி. மயூரன்

**தரம்: 11**

01. சி. சிவாகரன்
02. ஜெ. இந்திரபோல்
03. ஸ்ரீ. கோகுலராஜ்
04. சு. தற்பரன்
05. ச. கஜானா
06. ந. கஜலக்சி
07. ச. தசாயினி
08. சி. மேரிதர்சனா
09. உ. கஜிதா
10. ஞா. கஜனி

## சாதனையாளர்கள்

### க. பொ. த. (உயர்தரம்)



சி. மேரிதர்மினி

(கலைப்பிரிவு - 2008) 3A


### க. பொ. த. (சாதாரணதரம்)



ச. கஜானா

(5A, 1B, 2C, 1S)


## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் (2008)




த. நிறோஜன்



மோ. சாருகா



தி. திஜிதரன்



சி. கௌதமன்

## இதழாசிரியரின் பேனாவிலிருந்து...



கல்விக் கடலின் கலங்கரை விளக்காய் விளங்கும் யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் இதழ்விடும் மலரான "அச்சு மத்தியதீபத்தை உங்கள் கரங்களில் தவழ விடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

புலமை கொண்ட விரிவுரையாளர்களும் எதிர்கால சிப்பிகளாகத் திகழ விருக்கும் மாணவர்களினதும் சிந்தனைத் துளிகளைத் தாங்கி தொகுப்பு இலக்கியமாக அச்சு மத்தியின் தீபம் விளங்கிறது. இத்தகைய சஞ்சிகை வெளியீடானது மாணவரின் பல்துறை அறிவை விருத்தி செய்ய உதவுகிறது. இந்நூலில் கட்டுரை, கவிதை, சிறுகதை என்பவனவும் இடம் பெறுகின்றன. இம் முயற்சிகள் மாணவரின் வாசிப்புத்திறனையும் ஆக்கத்திறனையும் வளர்க்க உதவுவதுடன் எதிர் காலத்தில் இலக்கியத் துறையில் மாணவர்களை ஈடுபட ஊக்குவிப்பதுடன் ஆக்கத்திறன் கொண்ட மாணவர்களை உருவாக்கவும் உதவுகின்றது.

மத்தியின் தீபம் திறம்பட ஒளிர ஒத்துழைப்பு நல்கிய இதயங்கள் பல, இந்நூலை வெளியிட கல்லூரி அதிபரின் ஊக்குவிப்பு மூலகாரணமாக அமைந்தது. கல்லூரி முன்னேற்றத்தில் கண்ணும்கருத்துமாய் இருக்கும் அதிபர் சஞ்சிகையாக் கத்திற்கு பேருதவி புரிந்தார். அவருக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இத்தீபம் ஒளிவீச உதவிய ஆசிரியர்கள், மாணவர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் ஆசிச்செய்தி வாழ்த்துச்செய்தி வழங்கியோர் அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதுடன் தொடர்ந்து வரும் காலங்களிலிலும் இத்தகையோரின் மனப்பூர்வமான ஆதரவு மத்தியின் தீபம் தொடர்ந்து ஒளிவீச உறுதுணையாக இருக்கும் என நம்புவதோடு இவ்விதழ் கல்விக்கடலில் ஒளிவீசப் பவனிவர நல்லாதரவும் ஆசியும் வேண்டி நிற்கின்றேன்.

இதழாசிரியர்,
செல்வி. யோ. செல்லமுத்து

# ஒளிரட்டும் கல்வித் தீபம்

ஈழவளத் திருநாட்டின்
வடபாலாம் அச்சுவேலியிலே!
ஆழம்மிக்க அறிவையெல்லாம்
அள்ளி இறைக்கும் ஒரு வைரம்
வாழவைக்கும் பேறுடைய பெருங்கோயில்
ஏற்றமுடன் வீற்றிருக்கும்
சீலத்துடன் ஞானத்தையும் சீர்கூட்டிச்
செழிப்பாக்கும் மத்திய கல்லூரி!

வேராக வேதத்தைப் போதிக்கும்
மேன்மைமிகு சாண்டேஸ் போதகரால்
சீராக ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று இரண்டினிலே
விதையாகி இன்று விருட்சமென ஓங்கிநின்று
நீராகத் தனையீந்து அச்சுவேலிப் பதிவளர்க்கும்
ஏழைக்கு முன்னுரிமைதரும் பண்பதனால்
ஊராகத்தேடி வந்துவக்கின்ற மாண்புமிகும்
வாண்மையுள்ள ஒளித்தீபம்!

வையமே புகழும் சுவாமி ஞானப்பிரகாசரை
முதல் மாணவனாய் தந்துள்ள கல்லூரி
மையம் கொண்டும் மாண்புறவும் விளக்கியுமே
தலைமை ஏற்றிருக்கும் கல்லூரி
ஐயம் இல்லை இங்கு கற்றோர் ஆளுமையும்
செயற்றினுமொன்றாகப் பெற்ற நிலை
பையவே கல்வியிலே சத்தியமும் நேர்மைதனை
பாங்குடனே ஊட்டிவிடும் பண்புமிகு கலாசாலை!

கடல் கடந்து பிரிந்து சென்றோரும்
கணமுமுன்னை மறவாமல் மனத்திருத்தி
உடல் பொருள் ஆவியெல்லாம் உன்னாலே
வந்த கல்விச் செல்வமென வாழ்த்தியுமே
இடர்களைக! எம்கல்லூரி அன்னைக்கென
காத்து நிற்கும் திறமுமுள்ள மனத்தினராய்
மடைதிறந்த வெள்ளம் போல் வாழ்த்துகளும்
பாராட்டுகளும் வழங்கியுமே வணங்குகிறார்!

அச்சுவேலி பதிக்கோர் கலங்கரை விளக்கமென
ஒளிருகின்ற அச்சு மத்திய தீபம்!
மெச்சுகின்ற கல்வியிலே ஒழுக்கமும் அன்பும்
விதையுறு விளைநிலமாய் இலங்குதீபம்!
இச்சையுடன் கல்விதனைத் தேடியே நாடிவரும்
இடம்பெயர்ந்தோர் கற்பகதருவாகும் கல்வித்தீபம்!
உச்சநிலை கல்வியிலே பெற்றுப் பாரில்
ஓங்கியே ஒளிரட்டும் அச்சு மத்திய தீபம்!

**திருநிறை செல்வி உ. சிங்கையாரியரத்தினம்,**
**முகாமை உதவியாளர்,**
**யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.**

# ஆசிரியர்கள் செயலாற்றங்களை உயர்மட்டத்தில் முகாமை செய்தல்

**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**
**கல்வியியல் பேராசிரியர்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**

## அறிமுகம்

பாடசாலைகளில் பல்வேறு வளங்கள் உள்ளன. அவை பல்வேறு குறிக்கோள் களுடன் தொழிற்படுகின்றன. எனினும் பாடசாலைகள் எந்தளவுக்கு தமது குறிக்கோள்களை சிறப்பாக அடைய முடியும் என்பது அங்கு பணியாற்றும் ஆசிரியர்களின் செயலாற்றங் களிலேயே தங்கியுள்ளது. ஆசிரியர்கள் எந்தளவுக்கு மகிழ்ச்சியாவும், உற்சாகமாகவும் காணப்படுகின்றனரோ அந்தளவுக்கு அவர்களது வினைத்திறனும் அதிகரிக்கும். ஆசிரியர்கள் தமது பாடசாலையின் முகாமைத்துவம் பற்றி சாதகமான மற்றும் நேர்முறையான எண்ணங்களைக் கொண்டிருந்தால் அவர்களது பங்களிப்பும் சிறப்பானதாக அமைய வாய்ப்புக்கள் உள்ளது. தமது பாடசாலை முகாமைத்துவம் திருப்தியற்றது என்று பெரும்பாலான ஆசிரியர்கள் எண்ணும் போது அவர்களது பங்களிப்பும் உற்சாகமும் குறைவாயுள்ளது என்ற ஒரு உண்மையையும் உணர்ந்து கொள்ளமுடியும்.

பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள் எவ்வாறு முகாமை செய்யப்படுகின்றனர் என்பது மிகவும் முக்கியமான விடயமாக வற்புறுத்தப்படுகின்றது.

பாடசாலை அதிபர்களது பிரதானமான பணி அவர்களை நன்கு ஊக்குவிப்பதும், அவர்களது தேர்ச்சிகளை மேம்படுத்துவதும், அவர்களது செயலாற்றங்களை அதிகரிப்பதும் ஆகும். இதற்கும் மேலாக ஒவ்வொரு ஆசிரியரும் தமது இயளலுமைகளையும் பல்வகைத்திறன்களையும் அறியுமாறு செய்வதும் அதனடிப்படையில் உச்ச பங்களிப்பை ஒவ்வொரு ஆசிரியரும் வழங்குமாறு செய்வதும் மிகப் பெரிய அறைகூவலாக காணப்படுவதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அவர்களை உற்சாகமாக வைத்திருப்பதற்கான பாடசாலைச் சூழலைப் பேணுவதில் பல நெருக்கடிகளை அதிபர்கள் எதிர் கொள்கின்றனர்.

பாடசாலைகளில் நிலவும் பாடசாலைக்கலாசாரம் தனிப்பட்டமுறையில் ஒவ்வொருவரிடமும் காணப்படும் தொழில்சார் விசுவாசம் என்பனவும் முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது. நம்பகம், பரஸ்பரநல்லெண்ணம் என்பன எத்தகைய மட்டத்தில் காணப்படுகின்றன என்பதும் பாடசாலை நிர்வாகம் தொடர்பாக முக்கியமானவை.

இத்தகைய பலநிலைமைகளையும் விளங்கிக் கொண்டு பாடசாலை நிர்வாகம் ஆசிரியர்களின் செயலாற்றங்களை உச்சமட்டத்தில் பேணுவதற்கான பல்வேறு வழிமுறைகள் பற்றியே இக்கட்டுரை விளக்கமுயல்கின்றது.

## ஆசிரியர் செயலாற்ற முரண் உணர்வுகள்

பாடசாலைகளின் உள்ளார்ந்த தொழிற்படும் சூழ்நிலைகளும் அவற்றுக்கு வெளியே காணப்படும் சூழ்நிலைகளும் மிகவும் முக்கியமானவை. பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பெரும்பாலும் உரியமுறையில் வழிநடாத்தப் படுவதில்லை, கற்பித்தல் தொடர்பாக போதிய உதவிகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவதில்லை, சுயமதிப்பீடு தொடர்பாக வழிகாட்டலும் உதவிகளும் நன்கு ஒழுங்குபடுத்தப்படுவதுமில்லை. தமது சுதந்திரம் கௌரவிக்கப்படுவதில்லை யென்றும் தமது நிபுணத்துவத்தை பிரயோகிப் பதற்கான வாய்ப்புக்கள் மறுக்கப்படுவதாகவும் பல ஆசிரியர்கள் அடிக்கடி குறிப்பிடு கின்றனர். இப்போதெல்லாம் கற்பித்தல் பணி தொடர்பாக புதிய மாதிரிப்பணிக்கூறுகள் வலியுறுத்தப்படுவதாக குறை கூறுவதும் அதிகரிக்கின்றது. வகுப்பறையில் பிள்ளைகளுடன் செலவிடும் நேரத்தை விடவும் அதிகளவு நேரத்தையும், அதிகளவு முயற்சிகளையும் படிவங்களை நிரப்புவதிலேயே செலவிட வேண்டியிருப்பதாகவும் கூறுகின்றனர். பலநிலைமைகளில் கற்பித்தல் சாராத மாதிரிபணிகள் அளவுக் கதிகமாக தம்மீது திணிப்படுவதாகவும் சிறிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் கருது கின்றனர்.

பாடசாலை நவீனமயப்படுத்தும் செயற்திட்டங்களின்போது வேலைகள் தமக்கு பகிரப்படுமளவுக்கு தமக்குரிய வெகுமதிகள் உரிய வேளையில் நியாயமான முறையில் தரப்படுவதில்லை என்றும் அதிருப்தியடைகின்றனர். தமது உயர்கல்வி மற்றும் நவீன பயிற்சி தொடர்பான ஊக்குவிப்புக்களும் உதவியும் போதியளவில் கிடைப்பதில்லை என்றும் பலர் முரண்உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். இதன் காரணமாக தமது இயலளவு மட்டத்தில் தம்மால் பணியாற்ற முடிவதில்லை என்றும் பலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலைமைகளை மிகச்சரியாக விளங்கிக்கொள்வது பாடசாலை முகாமைத் துவத்தின் கடமையாகும். அதே போல் வினைத்திறன் மிக்க செயலாற்ற முகாமைத்துவம் தொடர்பாகவும் போதிய விளக்கத்தைப் பெற்று நடைமுறைப் படுத்துவது இன்றைய கால காட்டாயத் தேவையாகவுள்ளது.

## செயலாற்ற முகாமைத்துவம்

பாடசாலையின் குறிக்கோள்களையும் அவற்றை செயல்படுத்துவதில் ஈடுபடும் மனிதவளத்துக்குமான தொடர்புகளை ஒழுங்குபடுத்துகின்ற நுட்ப முறைகள் தான் செயலாற்ற முகாமைத்துவம் எனப்படுகின்றது. மைக்கல் ஆம்ஸ் ரோங் (2001) இதுபற்றிய பின்வருமாறு விளக்கமளிக்கிறார்.

> *“நிறுவன வினைதிறனை உயர்த்தும் நோக்குடன் பணியாற்றுகின்ற தனிநபர்கள் மற்றும் அணிகளின் இயலுமையை விருத்தி செய்வதற்கான ஒழுங்கிணைந்த அணுகு முறையும் உபாயமும் செயலாற்ற முகாமைத்துவம் ஆகும்”*

திருப்திகரமான முகாமைத்துவ நுட்பங்களை வடிவமைப்பதற்கு பாடசாலை முகாமைத்துவ அணியினர் புதியமாதிரியில் சிந்திப்பதும் செயல்படுவதும் அவசியம் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

- ❖ ஆசிரியர் சார்ந்த அணுகுமுறை
- ❖ கற்பித்தல், கற்றலுக்கு ஊக்கமளித்தல், இணைக்கலைத்திட்ட பணிசார் செயன்முறைகள்.
- ❖ குறிக்கோள் நோக்கிய முகாமைத்துவம்.
- ❖ ஆசிரியர் செயலாற்றம் பற்றிய மதிப்பீடுகள்.

என்பன தொடர்பாக முன்பிருந்த பழைய பாடசாலை அதிபர்களிலிருந்து வேறுபட்ட அணுமுறையைப்பயன்படுத்த வேண்டும். அதுவே இன்றைய கட்டாய தேவையாகும்.

கடந்த ஒன்றரைதசாப்த காலத்தில் செயலாற்ற முகாமைத்துவ அணுகு முறையில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. முன்பிருந்த அதிபர்களும் பாடசாலை முகாமைத்துவமும் மேலிருந்து கீழ் நோக்கிய கடுமையான ஒழுங்கமைப்பு அணுகு முறையையே வலியுறுத்தினர். இப்போதெல்லாம் அத்தகைய முறை வரவேற்கப் படுவதில்லை. மிகவும் நெகிழ்ச்சி மிக்க அணுகுமுறை வற்புறுத்தப்படுகின்றது.

தற்போதைய ஆசிரிய செயலாற்ற முகாமைத்துவ அணுமுறை பழைய அணுகுமுறையிலிருந்து சற்று நகர்ந்துவிட்டது. இந்த வேறுபாடுகளை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

| முன்னைய முறை | தற்போதைய அணுகுமுறை |
|---|---|
| ❖ செயலமைப்புகள் முக்கியம் | ❖ செயன்முறைகள் பிரதானம் |
| ❖ தனியாள் செயல் மதிப்பீடு | ❖ கூட்டுமுறை மீளாய்வு |
| ❖ வெளியீடு / பெறுபேறு | ❖ உள்ளீடுகளும் பெறுபேறுகளும் |
| ❖ தரமிடும் முறை | ❖ குறைவாக தரமிடல் |
| ❖ மேலிருந்து கீழ்நோக்கிய முறை | ❖ 360 பாகை பின்னூட்டல் எல்லோரும் பங்கேற்றல் |
| ❖ நெறிப்படுத்தல் | ❖ உதவி வழங்குதல் |
| ❖ ஒரே மாதிரியான அணுகுமுறை | ❖ நெகிழ்ச்சியுடைய முறைகள் |
| ❖ மனித வள உரிமை | ❖ நிரல் முகாமையாளரது உரிமை |
| ❖ குறித்த வேலைகள் | ❖ முழுமையான அபிவிருத்தி |

இப்புதிய அணுகுமுறை பற்றி அதிபர்களும், உபஅதிபர்களும், பகுதித் தலைவர்களும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.பின்வருவன பற்றிய பூரண விளக்கத்தைப் பெற்று அதற்கு சார்பான செயல் அணுகுமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

- ❖ தனிப்பட்ட ஆசிரியரது முழுமையான அபிவிருத்தி
- ❖ தொடர்ச்சியாக ஆசிரியர்களிடம் முன்னேற்றத்தை ஏற்படுத்தல்
- ❖ ஆசிரியர்களுடன் கலந்துரையாடுதல், உதவி வழங்குதல், இணக்கப்பாட்டை வளர்த்தல்
- ❖ ஆசிரியர்களைத் தனிநபர்களாகவும், பல்வேறு அணியாகவும் (கணிதபாட ஆசிரியர், விஞ்ஞானபாட ஆசிரியர், ஆரம்பக்கல்வி ஆசிரியர் என்றவாறு) மேம்படுத்துதல்.
- ❖ எப்போதாவது ஒரு தடவை மேற்கொள்வதற்கு பதிலாக வருடம் முழுவதும் செயலாற்றங்களை முகாமை செய்தல்.
- ❖ பாடசாலையையும் முழுமையாக முகாமை செய்தல்.

செயலாற்ற முகாமைத்துவ அணுகுமுறையானது தவறாக புரிந்து கொள்ளப்பட லாகாது. இது

- ❖ ஆசிரியரது சம்பளம் அல்லது வருமானம் பற்றிய தன்று.
- ❖ எந்நேரமும் ஆசிரியர்களை நெறிப்படுத்த வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும் என்பது முக்கியமானதன்று.
- ❖ தனிப்பட்டவர்களாக மாத்திரம் ஒவ்வொரு ஆசிரியரையும் நோக்குவதன்று.
- ❖ எல்லாவிடயங்களுக்கும் படிவங்கள் நிரப்புவதன்று
- ❖ எப்போதும் எதையாவது செய்து கொண்டிருப்பதன்று

பாடசாலை நிர்வாகமும் முகாமைத்துவமும் பின்வரும் விதிகள் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் கட்டாயமாகும்.

(i) பாடசாலையில் விளைதிறனை ஏற்படுத்துவதற்கு வினைதிறன் மிக்க செயலாற்ற முகாமைத்துவம் வேண்டும்.

(ii) பலவீனமான - ஊக்கம் குறைந்த ஆசிரியர் முதல் மிகவும் திறமையும் உற்சாகமும் கொண்ட ஆசிரியர் வரை கவனத்தில் கொள்ள வேண்டும்.

(iii) அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர்கள் செயலாற்ற முகாமைத்துவ உபாயம் பற்றி நன்கு தெரிந்து கொண்டு பாடசாலைக் குறிக்கோள்களுக்கு ஏற்றதாக செயற்படுவதற்கு அவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

(iv) கற்றல் ஊக்குவிப்பு, கற்பித்தல், இணைக்கலைத்திட்ட ஈடுபாடு, பாடசாலை மறைக்கலைத்திட்ட நடைமுறை தொடர்பாக தொடர்ந்து ஒழுங்கானமுறையில் எல்லா ஆசிரியர்களையும் மதிப்பீடு செய்து வருதல். தரமான பின்னூட்டல்களையும் பெற்று ஆசிரியர்கள் முன்னேறுவதற்கு உண்மையாக உதவுதல் சிறந்த தொழில் ஈடுபாடு மிக்கவர்களாக ஆசிரியர்களை மாற்றும் வகையில் மாற்றும் வரையில் மதிப்பிட செய்தல் வேண்டும்.

(v) பழைய முறையில் செயலமைப்பு சட்டங்களை ஆசிரியர்கள் மீது திணிக்காது இயல்பான முறையில் அவர்களை முகாமை செய்தல் வேண்டும். எவ்வாறு அதிபரும், உபஅதிபர்களும் ஆசிரியர்களை மதித்து உத்தமமான செயல்சார் அணுகு முறைகளைப் பின்பற்று கின்றனர் என்பது அவசியம். வேலைகளில் சரியாக ஈடுபட ஊக்கமளித்தல் வேண்டும். பாடசாலைகளில் சூழல், விழுமியம், பண்பாடு, பேருக்கம் என்பவற்றிலான மிகச்சிறந்த செயற்பாடுகளை முகாமைத்துவம் வலியுறுத்த வேண்டும்.

(vi) அதிபர்கள் தனியே நிர்வாக, முகாமைத்துவ செயல்முறைகளில் மாத்திரம் கவனம் செலுத்தல் போதுமானதன்று, படிவங்கள், கோவைகள் என்பவற்றை நிறைவான முறையில் பேணுதல் மாத்திரம் போதுமானதன்று. கற்பித்தல்

இல்லாத வகுப்பறை வேலை பற்றிய சிறந்த பாடக்குறிப்பினால் பயனில்லை. எப்போதும் ஒருவர்க்கொருவர் (ஆசிரியர்கள்) தமக்கிடையே தரநிலையில் போட்டியிடுவதை யில் முகாமைத்துவ ஆளணியும் செயற்படுத்தல் வேண்டும்.

(vii) போதிய வெகுமதியை சரியான முறையில் முகாமைத்துவம் வழங்க வேண்டும், பாராபட்சமற்ற முறையில் பாராட்டுதல்கள், வெகுமதிகள், வெகுமதிப்புள்ளிகள், பதவியுயர்வுகள், ஆசிரியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். அதற்கான ஏற்பாடுகளில் உண்மை விசுவாசத்துடன் ஒளிவு மறைவின்றி அதிபர்கள் செயற்படல் மிகவும் அவசியம்.

(viii) பிரச்சினைகள் வரும் போது பிரச்சினைகளில் கூடிய அக்கறை காட்ட வேண்டும். பிரச்சினைக் குட்பட்ட தனிப்பட்ட ஆசிரியர் சார்ந்து தீர்வுகளைத் தேடுவதும்நடை முறைப படுத்துவதும் மிகவும் அவசியமாகும். பிரச்சினை களைத் தாமதமின்றி தீர்ப்பதும் வெளிப்படை நடவடிக்கைகளைப் பின்பற்று வதும் கட்டாய மாகும்.

## முடிவுரை

பாடசாலை அதிபர்கள் புதிய முகாமைத்துவ அறிவைத் தேட வேண்டும். வெளியே அதிக சாதனை நிகழ்த்திவரும் கூட்டு நிறவனங்களில் நிகழும் முகாமைத்துவ மாற்றங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆசிரியர் தொடர்பாக சிறந்த ஆளுகை வெளிப்படையான நடவடிக்கைகள், பாரபட்சமற்ற முறையில் முன்னேற்றங்களைப்பகிர்ந்தளித்தல், வெகுமதிகளை அதி கரித்தல், தாமதமின்றி பிணக்குகளை நேர்முறையில் தீர்த்தல் போன்றவற்றில் அதிபர்கள் தீவிரகவனம் செலுத்த வேண்டும்.

அதிபர்கள் தம்மையும் மாற்றிக் கொண்டு, முகாமைத்துவ அறிவையும், அணுகுமுறைகளையும், உபாயங்களையும், நுட்பங்களையும் புதிய திசையில் முன்னெடுக்கும் போது நிச்சயமாக ஆசிரியர் செயலாற்றல்திறன்கள் உயர்ந்து செல்லும். பாடசாலைகளும் வளர்ச்சியடையும், பிள்ளைகளும். பெற்றோரும் மகிழ்ச்சியடைவர். கல்விச்சமூகமும் தேசமும் சிறப்புடன் செழுமை பெறும் என நம்ப முடியும்.

# கல்வி சாரா சேவையாளர்கள்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
திருமதி.க.தவேந்திரன், செல்வி.உ.சிங்கையாரியரட்ணம், திரு.வே.பாலசுப்பிரமணியம், திருமதி.யோ.சந்திரகுமார், திரு.த.சுப்பிரமணியம்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
திரு.வ.சண்முகநாதன், திரு.கி.ஜீவகுமார், திரு.இ.நெடுஞ்செழியன், திரு.கு.கணேசலிங்கம்

# பாரதிதாசனின் "அழகின் சிரிப்பு" – ஓர் ஆய்வு நோக்கு

ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 1. இயற்கையும் கவிதையும்

இயற்கை அழகைக் கவிப் பொருளாக்கும் மரபு மிகவும் நீண்டது. சங்கப் புலவர்களிலிருந்து தற்காலப் புதுக்கவிஞர்கள் வரை யாவரும் ஏதோ ஒரு வகையில் இயற்கையைக் கவிப்பொருளாக்க முனைந்துள்ளனர். இயற்கை தரும் அழகின் கவர்ச்சியும் மனதிற்கு அது தரும் இதமும் புதிய உணர்ச்சிகளைக் கவிஞர்களுக்கு ஏற்படுத்தி வந்தது. இங்ஙனம் இயற்கையை முழுக்க முழுக்கக் கவிப்பொருளாக்கிய படைப்புக்களில் பாரதிதாசனின் "அழகின் சிரிப்பு" என்னும் கவிதைத் தொகுதியும் ஒன்றாகும்.

## 2. அழகின் சிரிப்பு

இத்தொகுதியில் பதினாறு கவிதைகள் உள்ளன. அழகு, கடல், தென்றல், காடு, குன்றம், ஆறு, செந்தாமரை, ஞாயிறு, வான், ஆல், புறாக்கள், கிளி, இருள், சிற்றூர், பட்டணம், தமிழ் என்னும் தலைப்புக்களில் அக்கவிதைகள் அமைந்துள்ளன. இவற்றுள் பின்னைய இரண்டும் (பட்டணம், தமிழ்) தவிர்ந்த ஏனையவை யாவும் இயற்கை வர்ணனையோடு நேரடியான தொடர்பு கொண்டவை. 'பட்டணம்', 'தமிழ்' என்னும் இரு கவிதைகளும் இயற்கை வர்ணனை சாராதனவாக இருப்பினும் அவற்றைப் பாரதிதாசன் 'அழகின் சிரிப்பு' தொகுதியில் சேர்த்துள்ளார். இதற்கான காரணம் பற்றிப் பேராசிரியர். சோ.ந. கந்தசாமி பின்வருமாறு குறிப்பிடுவார்.

> 'One may raise a question about the validity of calling the poems on city and Tamil to poems on nature. It is sufficient if we say that these poems breathe a natural air.
>
> 'பட்டணம் தமிழ் என்னும் கவிதைகளை இயற்கை சார்ந்தவை எனக்கூறுதல் எந்தளவு தூரம் பெறுமதியான கூற்றாக அமையும் என்ற

கேள்வி எவருக்கும் எழலாம். எனினும் மேற்படி கவிதைகளில் இழையோடும் இயற்கை அநுபவம் ஒன்றே மேற்படி கவிதைகளை இத் தொகுதியில் அடக்கப் போதுமானதாகும் என்கிறார்.

## 3. புனைவியலும் புதுமையும்.

பாரதி தமிழ்க் கவிதையில் ஏற்படுத்திய புதிய மாற்றங்களையும் பரிசோதனைகளையும் தொடர்ந்து தமிழ்க் கவிதை புதிய தடத்திலே செல்லலாயிற்று. மரபுரீதியான சிந்தனைகள், கவிதைக் கொள்கைகள் முதலானவற்றில் நின்றும் விடுபடல், புதிய கருத்துக்கள், சிந்தனைகள் என்பனவற்றை விரும்பி ஏற்றல், தமிழ்க் கவிதைக்குப் புதிய வடிவம் ஒன்றைத் தர முயற்சித்தல் என்னும் விடயங்களில் புதிய படைப்பாளிகள் ஆர்வங்காட்டினர்.

பாரதிக்குப் பின்வந்த அவரது பரம்பரைக் கவிஞர்கள் எனக் கணிக்கப்படுகின்ற பாரதிதாசன், கலைவாணன், கம்பதாசன் முதலானோரிடமும் மேற்படி உணர்வுநிலை தொடர்ந்து வந்தது. இவர்கள் சமூகச் சார்பான கவிதைகளில் மட்டுமன்றி இயற்கையை வர்ணிக்கும் புனைவியற் பாங்கான கவிதைகளிலும் (Romatic poems) புதிய சிந்தனைகளை அறிமுகஞ் செய்தனர். இதனால் மரபுரீதியான வர்ணனைகளுடன் கூடிய கவிதைப் புனைவை விடுத்துப் புதிய சிந்தனையில், புதிய கவிதை மொழியில், புதிய அநுபவங்களைத் தரவல்ல கவிதைகளை இவர்கள் எழுத முயன்றனர். இத்தகைய புதுமையனுபவம் மிக்க இயற்கை வர்ணனை சார்ந்த கவிதைகள் வரிசையில் 'அழகின் சிரிப்பு'த் தொகுதியில் வரும் கவிதைகளையும் இணைத்து நோக்கமுடியும். புதிய முறையில் இயற்கை வர்ணனைக் கவிதைகளை அமைக்க வேண்டும் என்ற பாரதிதாசனின் உள்ளக்கிடக்கை அவர் 'அழகின் சிரிப்பு' தொகுதியின் முன்னுரையில் "பிறமொழி தமிழ்மொழி நூல்களிற் பார்த்தபடியே எழுதும்நிலை தீர வேண்டும்" எனக் கூறியதன் வாயிலாகப் புலனாகின்றது.

முன்னரே இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டு வந்த சொற்களை, சொற்றொடர்களை, அணிகளை அப்படியே மீண்டும், மீண்டும் பயன்படுத்துவதால் புதிய அநுபவங்களைக் கவிதைகளில் ஏற்படுத்த முடியாது. ஏனெனில், காலங்காலமாகப் பயன்படுத்தப்பட்டு வரும் சொற்களும் சொற்றொடர்களும் அணிகளும் தொடர்ச்சியான பயன்பாட்டின் காரணமாகத் தமது சக்தியினை இழந்துவிடுகின்றன. அவற்றுக்குப் புதிய

சக்தியைக் கொடுக்க வேண்டுமாயின் கருத்துப் புதுமை தோன்றப் புதிய சிந்தனைகளை உள்வாங்கிக் கவிதை புனைதல் வேண்டும். அத்தகைய கவிதைகளே புதிய அநுபவத்தையும் அதனால் வாசகனின் மனதில் இனம்புரியாத ஓர் ஆர்வத்தையும் ஏற்படுத்தும். இதனாலேதான் பழைய இலக்கியங்களில் காணப்படுவது போல எழுதும்நிலை தீரவேண்டும் எனப் பாரதிதாசன் எண்ணுகின்றார். பாரதிதாசனின் புதுமை நாடும் மனப்பான்மை, கவிதையில் பரிசோதனை செய்யவேண்டும் என்னும் ஆர்வம் என்பனவற்றின் ஒட்டுமொத்த வெளிப்பாடாகவே மேற்படி கூற்று அமைகின்றது.

ஆனால் பாரதிதாசன் இயற்கை வர்ணனை பற்றிய கவிதைகளில் முற்றுமுழுதாக மரபு ரீதியான வர்ணனைகளை, அணிகளைக் கைவிட்டார் எனக் கூறமுடியாது. அழகின் சிரிப்புத் தொகுதியில் வரும் கவிதைகளை அவர் அமைத்ததே 'அறுசீர் ஆசிரிய விருத்தம்' என்னும் மரபு யாப்பு வடிவத்தில். அன்றியும் இக் கவிதைகளில் ஆங்காங்கே மரபுரீதியான வர்ணனைகளும் இடம் பெறுவதை அவதானிக்கலாம். ஆக, மரபும் புதுமையுங் கலந்த ஒரு படைப்பாகவே இத்தொகுதியில் வருங் கவிதைகளைக் கொள்ளமுடியும்.

## 4. இயற்கையைக் கவிதையாக்கல்

இயற்கையைக் கவிதையாக்கம் செய்ய விழைவோருக்கு இரண்டு திறன்கள் இருத்தல் வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

i) **இயற்கையை இரசிக்கும் திறன் அல்லது மனநிலை.**
ii) **அங்ஙனம் இரசித்ததை எழுத்தில் கொண்டு வருந்திறன்.**

இவ்விரண்டும் ஒருங்கே அமையும் போதுதான் இயற்கை வர்ணனை பற்றிய கவிதைகளில் ஓர் உயிர்த்துடிப்பு உண்டாகும். இவ்விரு திறனும் பாரதிதாசனிடம் காணப்படுவதை அவரது 'அழகின் சிரிப்பு'த் தொகுதியில் உள்ள பாடல்கள் மிகத்தெளிவாகக் காட்டுகின்றன. இயற்கையின் ஒவ்வோர் அம்சத்தையும் அதில் நிகழும் மாற்றங்களையும் நுணுக்கமாக நோக்கிக் கவிசெய்கின்றார் பாரதிதாசன். இயல்பாகவே அவர் கவிதைகளில் அமைந்து வரும் காட்சிப் படிமங்கள் அவர் கண்டு இரசித்த இயற்கை அழகை, அவரின் அழகுணர்ச்சியை அப்படியே எம் மனக்கண் முன் நிறுத்துகின்றன.

"அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்
விளிம்பினில் அடி பொருந்தப்
புகுந்தலை நீர்வாய் மொண்டு
நிமிர்ந்திடும் பொன் இமைகள்
நகும்; மணிவிழி நாற்பாங்கும்
நாடிடும் கீழ் இறங்கி
மகிழ்ச்சியாய் உலவி வைய
மன்னர்க்கு நடை கற்பிக்கும்"

எனப் புறாக்கள் நீரருந்தி நடைபயிலுங் காட்சி படிமமாக மனதில் நிறைகின்றது.

## 5. கற்பனை வளம்

பாரதிதாசனின் உயர்ந்த கற்பனை வளம் 'அழகின் சிரிப்பில்' வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம். இயற்கையை இயற்கையாகக் காண்கின்ற நிலைக்கு அப்பால் அதனை ஓர் அபூர்வ சக்தியாக நோக்கும் பண்பைப் பாரதிதாசனிடம் காணமுடிகின்றது. இயற்கையின் அழகினில் தன்னை மறந்து 'கிறுகிறுத்து' நிற்கும் கவிஞன் ஒருவனின் உள்ள வெளிப்பாடாகவே மேற்படி கவிதைகள் அமைகின்றன. பாரதிதாசனின் தன்னுணர்ச்சி சார்ந்த இக் கவிதைகளில் கற்பனைவளம் பெரிதும் வெளிப்பட்டுநிற்கின்றது. ஒரு காட்டின் வர்ணனையைக் கற்பனை வளஞ்செறியப் பின்வருமாறு பாரதிதாசன் அமைத்துள்ளார்.

"இழந்த பெட்டையினைக் கண்டே
எழுந்தோடும் சேவல் வாலின்
கொழுந்துபட் டெழுந்த கூட்டக்
கொசுக்களை முகில்தான் என்று
தழைத்த தன் படம் விரிக்கும்
தனி மயிலால் அடைத்தேன்
வழிந்திடும் கரடி வந்து
மயிலுக்கு வாழ்த்துக் கூறும்."

கோழியைத் துரத்திய சேவல் தன் வாலை ஆட்டியதாம்; அதனால் கொசுக்கள் அடிபட்டு ஒரே கூட்டமாய் மேகம் போலவே மொய்த்தனவாம்; இதைக் கண்டு மேகமோ என்று அங்கிருந்த மயில்கள் தோகை விரிக்க, அதனால் தேனடையிலிருந்து தேன் வழிய, தேனைக் குடிக்க அங்கே வந்த கரடி மயிலை வாழ்த்தியதாம்; எனக் கற்பனையை

அமைத்துள்ளார். உயர்வு நவிற்சியான வர்ணனைப் பாங்கு இக்கவிதை வரிகளில் இழையோடுகின்றது.

சில கவிதைகளில் நடப்பியல் பாங்கான வர்ணனையையும் பாரதிதாசன் அமைத்துள்ளார் எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலை நோக்கலாம்.

"வெள்ளிய அன்னக் கூட்டம்
விளையாடி வீழ்வதைப் போல்
துள்ளியே அலைகள் மேன்மேல்
கரையினிற் சுழன்று வீழும்
வெள்ளலை, கரையைத் தொட்டு
மீண்டபின் சிறுகால் நண்டுப்
பிள்ளைகள் ஓடி ஆடிப்
பெரியதோர் வியப்பைச் செய்யும்"

என இயல்பான வர்ணனை பாடல்களில் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

## 6. ஓசை நயம்

பாடல்களில் இயல்பாகவே வந்து சேரும் ஓசை நயம் கவிதைகளுக்குத் தனிக் கவனிப்பைப் பெற்றுத் தருகின்றது. கவிதைகளில் முறைப்படி ஒழுங்கமைக்கப்பட்ட மோனைகளும் எதுகைகளும் ஓசைத் தொடர்ச்சியைக் கவிதை வரிகள் எங்ஙனும் பேணி நிற்கின்றன. ஆர்ப்பாட்டமில்லாத ஓர் அமைதியான ஓசை நடையே அனைத்துப் பாடல்களிலும் இளையோடுகின்றது.

அடிமரப் பதவி லெல்லாம்
அடங்கிடும் காட்டுப் பூனை
இடையிடை ஏற்பட் டுள்ள
பெருங்கிளைப் பொந்தி லெல்லாம்
படைப் பாம்பின் பெருமூச்சுக்கள்

எனும் பாடல்வரிகளை வகைமாதிரியாக எடுத்தாளலாம்.

## 7. புதிய உவமைகள்

புதிய அநுபவத்தைத் தரவல்ல உவமைகளையும் உருவகங்களையும் பாரதிதாசன் மிக இலாவகமாகக் கையாண்டுள்ளார். இப்புதிய உவமைகளும் உருவகங்களும் அவரின் கவிதா சாமர்த்தியத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நடைமுறை வாழ்க்கையில் நாம் கண்டு, கேட்டு அறிந்த விடயங்கள் அழகான உவமைகளாகக் கவிதைகளில் பொதியப்பட்டுள்ளன. 'கடல் பற்றிய தனது கவிதையிலே துள்ளிவிழும் கடலலையைக் கல்வி நிலையத்தின் இளைஞர்களுடன் ஒப்பிட்டு உவமை செய்துள்ளார் பாரதிதாசன்.

"நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி"

என்கிறார். அதேபோல சுதந்திரமாய் வானில் பறந்து விட்டுக் கூட்டில் அடைபடும் புறாக்களை

"கூட்டமாய்ப் பறந்து போகும்
சுழற்றிய கூர்வாள் போலே
கூட்டினில் அடையும் வந்தே
கொத்தடிமைகள் போலே
கூட்டினை வேலன் வந்து
சாத்தினான் குழைத்து வண்ணம்
தீட்டிய ஓவியத்தைத்
திரையிட்டு மறைத்தல் போலே"

என புதிய உவமைகள் சேர்த்துப் பாடுகின்றார்.

## 8. மொழி

கவிதைகளில் பாரதிதாசன் பயன்படுத்தும் மொழிநடை மிக எளிமையானது, சுவையானது, உயர் வீச்சுக் கொண்டது. அன்றாடம் நம் வழக்கில் பயின்று வரும் சொற்களையே மிக நயம்படக் கவிதைகளில் கையாண்டுள்ளார். கருத்து மயக்கத்துக்கோ அல்லது இருண்மைக்கோ இடந்தராத வகையில் அம்மொழிநடை கையாளப்பட்டுள்ளது. இதனால் எல்லோராலும் இலகுவில் படித்துப் புரிந்து கொள்ளத்தக்க கவிதைகளாக இவையுள்ளன. எனினும் கவிதைமொழி தளர்ச்சியின்றி தொகுதி முழுவதும் கட்டிறுக்கம் பொருந்தியதாகக் காட்சியளிப்பதைக் காணலாம்.

## 9. சமூக தரிசனம்

'அழகின் சிரிப்பு' இயற்கை வர்ணனை சார்ந்த படைப்பாக அமையினும் அதனூடாகப் பாரதிதாசன் தனது சமுதாய அக்கறையையும் வெளிப்படுத்தினார். சமகால சமுதாயத்தில் காணப்பட்ட சாதிக்கொடுமை, பெண்ணடிமைத்தனம், மூடநம்பிக்கை முதலானவற்றிற்கு எதிராக குரல் கொடுத்தவர் பாரதிதாசன். ஆரம்பத்தில் மனிதநேயத்தளத்திலும் பின்னர் திராவிடக் கழகத்தின் அரசியற் கொள்கையிலும் நின்று சமுதாயக் கொடுமைகளை அவர் சாட முற்பட்டார். அவரின் சமுதாய அக்கறை 'அழகின் சிரிப்பு'க் கவிதைத் தொகுப்பிலும் ஆங்காங்கே பதிவாகியுள்ளது. இத் தொகுதியில் குறிப்பிட்ட சில இடங்களில் 'புரட்சி' பற்றிப் பேசுகின்றார் பாரதிதாசன்.

“புரட்சிக்கப்பால் அமைதி
பொலியுமாம் அதுபோல் ஓரக்
கரையினில் அலைகள் மோதிக்
கலகங்கள் விளைக்கும்...”
“பொலிந்தது கோடையாட்சி
மாறிற்றுப் புரட்சி வெள்ளம்”

அதேபோலச் சமூகத்தில் காணப்பட்ட வர்க்க முரண்பாட்டை 'வான்' என்னும் கவிதையில் பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றார் பாரதிதாசன்.

“மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம்”

என்கிறார். பாரதிதாசனுக்குக் கிடைத்த மேற்படி வர்க்கப் பார்வையானது நேரடியான மார்க்சிஸ சார்பினால் கிடைத்ததொன்றல்ல. மாறாகப் பெரியாரின் சீர்திருத்தக் கோட்பாடுகளினூடாகக் கிடைத்ததொன்று என்பதை இவ்விடத்தில் அறிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். உலகில் தொடரும் சமூகப்பிரச்சினைகள், வறுமை, ஏற்றத்தாழ்வு, இவற்றுக்கெல்லாம் காரணம் வர்க்கரீதியான முரண்பாடே எனச் சுட்டிக்காட்டும் பாவேந்தர் 'இக்கொடுமை கண்டு பொறாது வானம் இரவில் நட்சத்திரங்களாகிய கொப்புளங்களை வெளித்தள்ளி வருந்துகின்றது' என மற்றோர் பாடலில் குறிப்பிடுகின்றார். புலவரின் கற்பனை, வர்ணனை, தற்குறிப்பேற்றம் எனுஞ் சிறப்புக்கள் ஒருங்கே பளிச்சிடும் பாடல் வரிகளாக இவை அமைகின்றன.

மற்றொரு பாடல் ஒன்றில் சமூகத்தை ஏமாற்றும் வஞ்சகர்களைச் சாடுகின்றார் பாரதிதாசன்.

'இளித்த வாயர்கள் மற்றும்
ஏமாற்றுக் காரர் கூடி
விளைத்திடும் தொல்லை வாழ்வில்
மேலோடு நடக்க எண்ணி
உளப்பாங் கறிந்து மக்கள்
உரைத்ததை உரைத்த வண்ணம்
கிளந்திடும் கிளியே என்சொல்
கேட்டுப்போ பறந்து வாராய்"

ஐந்தறிவுடைய உயிரினங்களுள் ஒன்று கிளி. அதற்கு விசேடமாகக் கிடைத்துள்ள ஓர் ஆற்றல் பழக்கினால் மனிதரைப் போல் பேசுந்திறனாகும். ஆனால் மனிதர்கள் மத்தியில் கிளி வாழ்ந்தால் அவர்களின் ஏமாற்றுத்தனமான கதைகளைக் கேட்டு தவறிழைக்கத் தொடங்கிவிடும். ஆதலால் கிளியைப் பறந்து செல்லும்படியும் மீண்டும் மனிதரிடையே திரும்பி வரவேண்டாம் என்றும் பாரதிதாசன் கூறுகின்றார்.

"கூட்டத்தில் கூடிநின்று கூடிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடி கிளியே அதை
நாளில் மறப்பாரடி"

எனவரும் பாரதியின் பாடல்வரிகளும் இவ்விடத்தில் பொருத்தி நோக்கத்தக்கன.

ஆடவர்கள் சிலரின் வரையறை கடந்த காம உணர்வால் குடும்பப் பெண்கள் படும் மனத்துயரையும் புறாக்கள் எனும் கவிதையில் கவிஞர் பதிவு செய்திருப்பதைக் காணமுடிகின்றது.

"அவள் தனி ஒப்பவில்லை
அவன் அவள் வருந்தும் வண்ணம்
தவறிழைக் கின்றா இந்தத்
தகாச் செயல் தன்னை அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில்
ஒருசில தறுதலைகள்
கவலைசேர் மக்களின் பால்
கற்றுக் கொண்டிருத்தல் கூடும்."

எனும் பாடல் வரிகளில் ஐந்தறிவுடைய புறாக்களுள் ஆண்புறா ஒரு பெடையுடனே கூடிவாழும் அப்பெடை இறந்தாலேயன்றி அது பிற பெடையை நாடவே நாடாது. ஆனால் ஆறறிவு கொண்ட மனிதருள் சிலர் சொந்த மனைவியர் இருக்கவும் பிற பெண்டிரை நாடிச்சென்று சீரழிகின்றார்கள். வெறும் ஐந்தறிவுடைய புறாக்களுக்குள்ள சிந்தனை, அறிவு, விவேகம், நாகரிகம் இவையாவும் மனிதராய்ப் பிறந்த சிலரிடம் இல்லையே? என அவர் அங்கலாய்ப்பதைக் காணலாம்.

## 10. தமிழ்ப்பற்று

பாரதிதாசன் தனது தமிழ்ப்பற்றை அழகின் சிரிப்புத் தொகுதியில் பலவிடங்களில் பொதிந்து வைத்திருப்பதைக் காணலாம். திராவிட இயக்கக் கோட்பாடுகள் கொடுத்த ஒளியில் தமிழ், தமிழர், தமிழ்நாடு பற்றி ஆழமாகச் சிந்தித்தவர் பாரதிதாசன். தமிழை அமுதாகவும் அதைத் தன் உயிராகவும் கருதி இவர் பாடிய பாடல்கள் தமிழர்கள் ஒவ்வொருவரினதும் நாடி நரம்புகளில் தமிழுணர்ச்சியைத் தட்டியெழுப்புவனவாகும். தனது தனிப்பாடல்களுள் மட்டுமன்றிக் காவியங்களிலும் பா நாடகங்களிலும் தமிழ் மீதான பற்றுணர்வைப் பலவாறாக அவர் வெளிக்காட்டி வந்திருப்பதைக் காணமுடிகின்றது. அழகின் சிரிப்புத் தொகுதியில் உள்ள 'தென்றல்' என்னும் கவிதையில் தனது தமிழ்ப்பற்றைப் பின்வருமாறு பாவேந்தர் வெளிப்படுத்துகின்றார்.

"கமுகொடு நெடிய தென்னை
கமழ்கின்ற சந்தனங்கள்
சமைகின்ற பொதிகை அன்னை
உனைத் தந்தாள் தமிழைத் தந்தாள்
தமிழ் எனக் ககத்தும் தக்க
தென்றலே நீ புறத்தும் இன்பம்
அமைவுறச் செய்வதை நான்
கனவிலும் மறவேன் அன்றோ"

பாரதிதாசனின் தமிழ் உணர்வு பளிச்சிடும் இத்தகைய பல சந்தர்ப்பங்களை அழகின் சிரிப்புத் தொகுதியில் காணமுடிகின்றது. தமிழ் மீது அவர் கொண்ட ஆராக் காதலே இயற்கை வர்ணனை பற்றிய இத்தொகுதியிலும் 'தமிழ்' என்னும் தனிக்கவிதையை அமைக்கத் தூண்டியிருக்கவேண்டும். இயற்கை தரும் இன்பத்துக்கு நிகரான இன்பத்தைத் தமிழ் தரும் எனப் பாரதிதாசன் சுட்டுகிறார். தமிழின் தோற்றம், அது தமிழர்க்கு உயிராயிருக்குந் திறன், தமிழின் சாகாத தன்மை, அதில் நிறைந்துள்ள கலை, இலக்கிய

வளம் இடைக்காலத்தில் வடமொழிக்கலப்பால் அது அடைந்த சீர்கேடு, அச்சீர்கேட்டுக்குள்ளாலும் தனது தனித்துவத்தைப் பேணிவந்த தமிழின் சிறப்பு, தமிழ் தமிழர்க்குத் தரும் மனோபலம், வெற்றி என்பன பற்றியெல்லாம் 'தமிழ்' என்னும் கவிதையில் உணர்ச்சி பொங்கப் பாடியுள்ளார் பாவேந்தர். கவிஞரின் உணர்ச்சி மிக்க கவிதை நடையின் வேகத்தையும் விறுவிறுப்பையும் மேற்படி பாடலில் கண்டு கொள்ள முடியும்.

## 11. முடிவுரை

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது, தமிழில் வெளிவந்த இயற்கை வர்ணனை சார்ந்த கவிதைத் தொகுதிகளில் அழகின் சிரிப்புக்கு ஒரு தனிக் கவனிப்புள்ளது. இயற்கையின் தோற்றப்பாடுகளில் தன்மனதைப் பறி கொடுத்த கவிஞன் ஒருவனின் உணர்ச்சி வெளிப்பாடுகளாகவே மேற்படி தொகுதியில் உள்ள கவிதைகள் விளங்குகின்றன. கவிஞர் இயற்கையைத் தனது கண்களால் பருகி கவித்துவமாக வெளிப்படுத்தும் ஆற்றல் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும். அவரின் கற்பனை, வர்ணனை, அணிகளை இலாகவமாகப் பயன்படுத்தும் திறன் என்பன கவிதைகளில் முனைப்புற்று நிற்பதைக் காணலாம். மேலைத்தேசத்தில் பதினெட்டாம் நூற்றாண்டு முதலாக எழுதப்பட்டு வந்த புனைவியல் சார்ந்த கவிதைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கக்கூடிய தரமும் நயமும் கொண்டவையாக இக்கவிதைகள் உள்ளன. புனைவியல் கவிஞனுக்கேயுரிய 'கற்பனையில் வாழும் திறன்' பாவேந்தருக்கும் சித்தித்துள்ளது.

எனினும் புனைவியல் சார்ந்த கற்பனை உலகுக்குள் மட்டும் பாரதிதாசன் சிறைப்பட்டிருக்கவில்லை. அவருள் ஊறிக்கிடந்த மனிதநேயமும் பெரியாரின் சீர்திருத்தக் கோட்பாடுகளும் அவரை அடிக்கடி யதார்த்த உலகுக்குள் அழைத்து வந்தன. இதனாலே தான் சமூகச் சீர்கேடுகளையும் சிக்கல்களையும் அவரால் ஆங்காங்கே சுட்டிக்காட்ட முடிந்தது. அன்றியும் தமிழ் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் புகழ்ந்து பாடக் கூடியதாகவும் இருந்தது. இச் சமூகச் சார்பும், தமிழுணர்ச்சியுமே அவரது கவிதைகளின் தனித்துவங்களாக விளங்குகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதிதாசனின் இடத்தினைத் தீர்மானிப்பதில் இத்தொகுதியில் உள்ள கவிதைகளுக்கும் மிக முக்கிய பங்குண்டு.

# மலர் வெளியீட்டுக் குழு



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)

திருமதி.வ.அருளானந்தம், திருமதி.ந.ஜெகநாதன், திருமதி.யோ.சந்திரகுமார் (பிரதி அதிபர்), திரு.வே.பாலசுப்பிரமணியம் (அதிபர்), திரு.பொ.சகலகலாநிதி.

நிற்போர் (இடமிருந்து வலம்)


திரு.இ.விஜயமோகனராஜா, திருமதி.சி.தங்கராஜா, செல்வி.யோ.செல்லமுத்து, திரு.பா.இளங்கோ, திரு.மு.கணேசானந்தன், திரு.செ.முரளீதரன்.



இந்து மாமன்றம்



உயர்தர மாணவர் மன்றம்



மாணவத் தலைவர்கள்



ஆங்கில மன்றம் ஆரம்பப்பிரிவு

# சம்பந்தர் தேவாரம் காட்டும் பண்பாட்டுக் கோலங்கள்

**பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன்**
**இந்துநாகரிகத்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

சங்க காலம் தமிழ் மொழியின் பொற்காலம் என்றால், பல்லவர்காலம் சைவநெறியின் பொற்காலம் என்று கூறலாம். அக்காலத்திலே தான் திருஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தமிழகத்திலே அவதாரம் செய்து

*"மேலொரு பொருளுமில்லா -மெய்ப்பொருள் வில்லும் தாங்கி*
*கால்தரைதேய நின்று கட்புலக் குற்றதம்மா"*

என்பதற்கேற்றவாறு தென்தமிழ் நாடெங்கிலும் கால்தரை தோயச் சென்று சுற்றித் திருவுலாபோந்து சைவமும் முத்தமிழும் தழைத்தோங்கும் வண்ணம் அரும் பெரும் தொண்டாற்றினார்கள். இவ்வாறு தமிழகத்திலே சைவநெறி தளர்ச்சியுற்ற காலத்திலே அதனைத் தடுத்து நிறுத்திய சான்றோர்கள் சைவசமய குரவர்கள் எனவும் தேவார முதலிகள் எனவும் போற்றப்பட்டனர்.

ஞானசம்பந்தர் பெருமான் அவதரிப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முதல் தமிழகம் சமணசமயத்தவர்கள் ஆதிக்கத்தில் இருந்தது. அவர்கள் தம் சமய கொள்கைகளை கடைப்பிடித்ததுடன் நில்லாது தமிழ் மக்கள் தொன்றுதொட்டு பின்பற்றி வந்த சைவ பண்பாட்டு முறைமைகளைக் கண்டித்தும். சைவத்தின் பரம் பொருளான சிவனை நிந்தித்தும் வந்தனர். நாவுக்கரசரும் இத்தகையதொரு சூழலில்தான் தோன்றினார். இக்காலகட்டத்தில் சைவத்தின் புண்ணியக் கண் இரண்டெனச் சேக்கிழார் போற்றும் சம்பந்தரும், அப்பரும் அக்காலத் தமிழ்மக்கட்குச் சைவத்தின் மேன்மையை உணர்த்தி சிவனின் அருட்பெருமையைத் தெளிவுபடுத்தவும், "பக்தி இயக்கம்" என்ற அன்பெனும் ஆயுதத்தை பயன்படுத்தி வெற்றிபெற்றவர்களாவர். சமய குரவர்களில் சம்பந்தர் தமது பாடல்களில் செந்தமிழால் சிவனது தடத்த லட்சணம் , சொரூப லட்சணம், சகள நிஷ்களத் திருமேனிகளையும் அவரை அடியவர்கள் வழிபாடு செய்து பெற்ற சிறப்புக்களையும், இறைவனை வழிபாடு செய்யும் வழிபாட்டு முறைகளையும் , பதிகங்கள் தோறு விரித்துக் கூறியுள்ளமை சைவப்பண்பாட்டுச் சிறப்பினை வெளிப்படுத்து வதாயுள்ளது.

தேவாரங்கள் காட்டும் பண்பாட்டு நெறி என்பது வாழ்வியலில் தெய்வ நம்பிக்கையினை மனதில் ஆணிவேராகப் பதியச் செய்வதுடன், பக்தி நெறியை வளர்க்கும் பண்பாடு உன்னத நிலை பெற்றமையாகும். பதிகங்கள் என்னும் வடிவிலே தெய்வத்திற்குரிய மாலைகளாகத் திருப்பதிகங்களைப் பாடுவதுடன் கேட்போர் மனதில் இறைபக்தியினைப் பதியச் செய்வதும் பதிகங்களுக்குரியதொரு

சிறப்பம்சமாகும். நாயன்மார்களின் பாடல் பெற்ற தலங்கள் சுமார் 275 ஆகும். மொத்தம் 400 திருக்கோயில்கள் அக்காலத்தில் இருந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அவை மண், மரம், செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்களாகவும் சில இருந்திருக்கலாம். கற்கோயில்கள், குகைக்கோயில்கள் என்பவை பல்லவர் காலத்தில்தான் பெருவழக்கிற்கு வந்தன. எனவே கோயிற் பண்பாட்டு நெறியானது சம்பந்தர் காலம் முதல் பெருவழக்கானது.

ஆன்மீக நாட்டத்திற் தேடலுக்கும், அமைதிக்குமான வழிமுறைகளில் "பக்தி" நெறியானது பரவலாகவும், எளிதாகவும், இலகுவாகவும் அமைகின்ற ஒன்றாகும். பக்தி செயற்திறனாகும் போது யோகம் ஆகின்றது. தியான முறையிலே பக்தி செய்யக் கஷ்டப்படுவோர்க்குப் பிரபக்திநெறி நேரான உபாயமாகின்றது. தன்னை முழுமை யாக இறைவனிடம் ஒப்படைத்தல் சரணடைதல் பிரபக்தியின் ஓர் அங்கமாகும். ஆன்மீக யோகப் பயிற்சிக்கு பிரபக்தி சிறந்த மார்க்கமென வைணவ நெறியும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனை பிரசாத யோகநெறி எனச் சைவசித்தாந்தமும் கூறும். சம்பந்தர் பதிகங்களில் தாயன்பும், வாத்சல்ய பாவனையும் மிக அதிகமாகக் காணமுடியும். பக்தி இரண்டு விதமாக ஏற்படுகின்றது எனச் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். அங்க அடையாளங்கள், சடங்குகள், பாடல்கள் மூலம் ஏற்படும் பக்தி, அன்புநெறி மூலம் மட்டும் உருவாகும். பக்தி, என அவற்றை சுவாமி அடையாளம் காட்டுவர். இவையிரண்டு நிலைகளையும் சம்பந்தர் திருப்பதிகங்களிற் காணலாம். முதலாவது நிலையினைத் "தோடுடைய செவியன் விடையேறியவன் தூவன்மதி சூடியவன் - காடுடைய சுடலைப் பொடியினைப் பூசியவன் - அவனே என் உள்ளம் கவர்ந்த கள்வன்....." என்று பாடிக்காட்டினார். இரண்டாவது நிலையான அன்பு நெறி பற்றி அறியும் போது, இறைவனுடன் எமது மனதைச் சேர்த்துக் கட்டும் கயிறு ஒன்று எம்மிடமுள்ளது. அதுவே அன்புக் கயிறு ஆகும்.

*"அன்புறு சிந்தையராகி அடியவர்*
*நன்புறு நல்லூர் பெருமணமேனின்று*
*இன்புறு எந்தை இணையடி ஏத்துவர்..."*

என்பதில் பக்தியின் உயர்வான அன்பு நெறி பேசப்படுகிறது. "பக்தி என்பது பெண்ணைப் போன்றது. அதனால் அந்தப்புறம் வரை போக முடிகிறது" என்றார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், பிற உணர்ச்சிகள் செல்லமுடியாத இடத்திற்கெல்லாம் செல்ல வல்லது பக்தி. அறிவும் , அதிகாரமும், செல்வமும் சாதிக்க முடியாத வற்றினைச் சாதிக்க கூடிய வல்லமை பக்தி நெறிக்குண்டு என்பதே இதன் பொருள் எனலாம். இவ்வழியிலேயே அப்பர் சுவாமிகளும் பக்திநெறியிற் பல சாதனைகள் நிகழ்த்தினார். இதன் விளைவாக தமிழகத்திலே மீண்டும் கோயில் வழிபாடு என்பன புனரமைப்பு செய்யப்பட்டன.

பௌத்த சமணர்களால் வெறுத்தொதுக்கப்பட்ட கலை வளர்ச்சிகளும் சமய குரவர்களால் புத்துயிர் பெற்றன. இறைவன் புகழ்பாடுதற்கு இசைக்கலையும்

உருவழிபாட்டிலே விக்கிரகக் கலையும் கிரியை வழிபாட்டிலே நாதோபாசனை, நிருத்திய உபாசனைகளும் பெரும் பங்குவகித்தன. இத்தகைய சமய சூழலில் பல்லவர் காலம் திருக்கோயில்கள் பல புதுப்பிக்கப்பட்டன. பல கோயில்கள் புதிதாக நிர்மாணம் பெற்றன. இவை யாவும் சிற்ப, ஓவிய கட்டடம் முதலிய அனைத்துக் கலைகளின் பண்பாட்டுக் கருவூலங்களாக அமைந்தன. பக்தியின் இரண்டாவது நிலையிலே சுந்தரரும், மாணிக்கவாசகரும், தம்மை நிலைபெறச் செய்ததுடன் யோக வழிபாட்டிலும் தியான, ஞான வழிபாட்டிலும் கூட சைவம் அக வளர்ச்சியிலும் ஆன்மீக நிலையிலும் தன்னை மிகவும் மேம்படுத்திக் கொண்டது. பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவ மறுமலர்ச்சியினைப் "பௌராணிக சமய எழுச்சி" எனவும் அறிஞர் சிலர் விளக்கிக் காட்டினர். இதிகாச புராணக் கதைகளைப் பயன்படுத்தி சமய குரவர்கள் சைவபக்தி இயக்கத்தை மேலும் பலமடையச் செய்தற்கும் அவையும் ஒரு காரணியாக விளங்கியமையை மறுப்பதற்கில்லை. திருவிளையாடற் புராணம் மதுரைமாநகரில் நடந்த சிவனது அற்புத நிலைகளையும் திருவிளையாடல்களாகக் கூற எழுந்தது. இத்தகைய கதைகள் பல அற்புத சம்பவங்களையும் இறைவனது ஆற்றல்களையும் வெளிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன.

சம்பந்தர் வாழ்விலும் சமணர்களையும், பௌத்தர்களையும் வாதில் வென்ற அற்புத நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. பௌராணிகம் எனப்படும் புராண காலக் கதைகள் முற்காலம் பலராலும் உண்மைச் சம்பவங்களாகக் கருதப்படவில்லை. ஞான மார்க்கத்தில் உயர்ந்த ஞானத்துறவிகள், சித்தர்கள் அவற்றிலே பரம் பொருளின் உட்பொருளைக் கண்டு வழிபட்டுப் போற்றிவந்தனர். திருமூர் திருமந்திரமானது "முப்புரமெரித்தல் மும்மலகாரியம்" எனக் கூறுவது இவ்விடயத்திற் சிந்திக்கத்தக்கது. எனினும் புராணக் கதைகளால் தமிழ்க் கோயில்களில் தல புராண இலக்கியங்களும், இறை அருள் வெளிப்பாடும் ஆற்றல்களும் உணர்த்தப்பட்டுச் சில இலக்கியங்களும் தோற்றம் பெற்றன. சிவ வழிபாடும் சைவமும் வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டவை என்பதனை எவரும் மறுப்பதில்லை. சங்க இலக்கியங்களிலும் சிந்து வெளி தொல்பொருட்களிலும் வேத இலக்கியங்களிலும் சிவவழிபாட்டின் தொன்மை ஆய்வாளர்களால் பேசப்பட்டு வருவதும் வரலாற்றுண்மையாகும்.

எனவே பல்லவர் கால தேவாரத் திருமுறைகளில் இறைவனின் சிவனின் தோற்றம் பொலிவு அற்புதச் செயல்கள் பற்றிய குறிப்புக்கள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. யசுர் வேதத்தில் திரிபுரம் எரித்தல் பற்றிய குறிப்பும் வாயு புராணத்திலே தக்கன் வேள்வி சிதைத்த கதையும் விரிவாக இடம் பெற்றுள்ளன. பல்லவர் காலத்தில் ஏற்பட்ட சைவசமய மறுமலர்ச்சியிலும் புராண இதிகாசக் குறிப்புக்கள் பலவற்றிலே சிவனது அட்டவீரட்டச் செயல்கள் சம்பந்தர் பெருமானால் அதிகம் சிறப்பிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். சாதுக்களும் அறவழி நிற்கும் சான்றோர் களும் வலிமைபடைத்தவர் முன்பும் தீயவர்கள் முன்பும், அதிகாரவர்க்கத்தினர் முன்பும் எளியோராகவும், கோளையாகவும் காட்டப்படுகின்றனர். இத்தகைய நல்மனம் படைத்தவர்கள் வாழ்க்கைப்போராட்டத்தில் ஆதிக்கப்போராட்டத்தில்

நலிவுறும் போது அத்தகைய எளிய சான்றோர்க்குப் பலம் வாய்ந்த உதவி தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட உளவியற் போராட்டங்களின் தேவையே இறைவனது அட்டவீரட்டச் செயல்களைச் சம்பந்தப் பெருமான் பயன்படுத்துவதற்கும் காரணமானது. சம்பந்தமூர்த்தியும் சமண, பௌத்த அரச ஆதிக்கத்தால் நாட்டில் நல்லோர் துன்புறுவது பொறுக்க முடியாது இறைவனது "கருணை" என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி அத்தகைய நலிவுற்றோதைக் காப்பாற்றிய பாங்கினை அவரது பாடல்களிற் காட்டியுள்ளார்.

V.S. செங்கல் விநாயகப்பிள்ளை தொகுத்த தேவார ஒலி நெறி கட்டுரைகளில் இத்தகைய குறிப்புக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அட்டவீரட்டச் செயல்கள் ஒவ்வொன்றும் சிவபராக்கிரமத்தின் சிறப்பான கருணையாகக் கொள்ளப் பட்டுள்ளன. இத்தகைய அற்புதச் செயல்களாவன அந்தகாசுர சம்காரம், காமதகனம், காலனைக் கடிந்தது, சலந்தரனைத் தண்டித்தல், தக்கன வேள்வி தகர்த்தல், திரிபுரம் எரித்தல், பிரமன், சிரச்சேதம், யானை உரி போத்தல், என்னும் எட்டு அருட்செயல்களும் அற்புத செயல்களாகத் தீயவரிடமிருந்து சான்றோர்களைக் கர்த்த கருணையினையும் எடுத்துக் கூறுவதாக இவற்றினைச் சம்பந்தர் பயன்படுத் தியுள்ளார். கருணையில் அறக்கருணை, மறக்கருணை என்ற பகுப்பிலே இவற்றினை மறக்கருணையாகக் காணலாம். அதாவது தண்டித்து வரமளித்தல் என்னும் அன்பு நெறியாகும். இறைவன் யாரையும் நிரந்தர துயரத்தில் தள்ளுவதில்லை என்ற பக்தியின் உயர்நிலை அனுபவமாக இவை இங்கு கூறப்படுகின்றன. இவ்வருட் செயல்கள் தமிழகத்தில் உள்ள திருவதிகை, திருப்பறியலூர், திருக்குறுக்கை, திருவழுவூர், திருவிற்குடி, திருக்கடவூர், திருக்கண்டியூர், திருக்கோவலூர், என்னும் வெவ்வேறு தலங்களில் நடைபெற்றதாகக் கருதப்படுகின்றன. இதனால் தமிழ்நாட்டினைப் புண்ணியமிக்க சைவப் பண்பாட்டு விளை நிலையமாக மாற்றியமையினைச் சம்பந்தர் பாடல்களினால் அறியமுடியும்.

பொதுவாகப் புராணக் கதை பேசும் யமசங்காரம், சூரசங்காரம், கஜமுகாசுர சம்காரம், மகிஷாசுரசம்காரம் யாவும் "துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்" என்னும் உயர் விழுமியத்தையே காட்டி நிற்கிறது. துயரத்தினால் உள்ளம் நொந்து தவித்து மனப் போராட்டங்கட்டு ஆளானோரை இறைவன் நிச்சயம் தடுத்தாட் கொண்டு கடைத்தேற்றுவான். என்னும் பரிணாமத்தையே இவை புலப்படுத்தி நிற்கின்றன. இத்தகைய ஆற்றுப்படுத்தலின் விளைவாகச் சம்பந்தர் மக்கள் மனத்துயரங்களை துடைக்கும் உபாயங்களாக்கிக் கதைகளைப் பயன்படுத்தினார் என்ற உண்மை வெளிப்பாடு காலத்தின் தேவையாகும். சம்பந்தர் சமணரைத் தண்டித்தார், கழுவேற்றச் செய்தார் என்றெல்லாம் பகுத்தளிவாளர் விமர்சனங்களும் எழுந்தன. ஆனால் பொறுமையே சாதனமாகப் கொண்ட தருமசேனரான அப்பரடிகளைச் சமணர்கள் துன்புறுத்திய போது அவர் அகிம்சையினையே சாதனமாகக் கொண்டு அரச ஆதிக்கத்தை வென்ற நிகழ்வையும், அதே சமயம் கண்டுகொள்ளலாம். அத்தகைய துயர நிகழ்வுகள் சம்பந்தப் பெருமானது குழந்தை உள்ளத்தில் இரக்கம், பரிவு, கருணையை ஏற்படுத்தியமையால் தான் "வைரத்தை வைரத்தால் வெட்டுவது போல" துயரத்தைத் துயரங்களைக் கொடுத்தே வெல்லும் உபாயத்தைக் கையாண் டிருக்க வேண்டும்.

அறமும், அகிம்சையுமே உயர் விழுமியமாகக் கொண்ட சமண மதத்தார் குழந்தையாகிய சம்பந்தமூர்த்திக்கும் பாண்டி நாட்டிலே மடத்திற்கு தீமூட்டி உயிருக்கு அச்சுறுத்தல் கொடுத்தார்கள் என்பது இங்கு வியப்பிற்பிற்குரியதே எனவே சம்பந்தர் தனது பக்தியின் வைராக்கியத்தையும் இறைவனிடம் முறையிட்டு நல்லோரைக் காப்பதையும் தனது கடமையாகவும் கருணையாகவும் கொண்டமை சைவ பண்பாட்டுப் பெருமையை உணர்த்துவதாகவே யுள்ளது. காலனை தண்டித்த முறைமையினைக் கூறும் போது

*"ஆலில் நல்லறம் உரைத்துஞானமோடிருப்ப*
*நலிந்திடிலுற்று வந்த அக்கருப்பு வில்லி"*

என்பதில் சனகாதி முனிவர்கட்டு நல்லறம் உணர்த்த நிலையில் மன்மதன் பாணங்களை எய்த்து விளக்கமுறுகிறது. மார்க்கண்டேயரை காப்பாற்றிய இடத்திலும்

*"ஓங்குயிர்மேல் கன்றி வரு காலன்"*
*சத் தழல் போல் விழியா வரு கூற்று*

என்னும் குறிப்பால் காலனின் கோபமும்

*"மாதவமுடைய மறையோன்*
*மலரவை கொடு வழிபடுகிறல் மறையவன்"*

எனவரும் குறிப்பிலே மார்க்கண்டேயரது தவச்சிறப்பும், பூசைச்சிறப்பும், பக்தி வைராக்கியமும், விளக்கப்படும் பாங்கு சிறப்புடையதாகும் எனவே சில வழிபாட்டையும் சிவனையும் இகழ்வோர் அக்கடவுளின் தண்டகைக்காளாவார் என்பது மட்டுமல்ல தேவரேயானாலும் நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்ற சைவ பண்பாட்டின் நீதி போதனைக்கமைய அறநெறிப்பட்ட வாழ்வும் சம்பந்தரால் இக் கதைகளூடாக விளக்கமுற்றுள்ளன. அத்துடன் பக்திப் பாடல்கள், கடவுளரின் பெருமைகட்கும் அவற்றினூடாக வளத்தெடுக்கப்பட்ட பண்பாட்டு விழுமியங்கட்கு ஓர் விளம்பரமாகவும் அமைந்தன. இத்தகைய பிரச்சார உத்திகளால் தமிழகத்தில் சைவ பண்பாடு மேலும் வேரூன்றுவது தவிர்க்க முடியாததாயிற்று.

சைவ பக்தி இயக்கத்தை வழிநடத்திச் சென்ற சம்பந்தரும் அப்பரும் தொண்டு நெறியினைச் சேவை மார்க்கத்தை தமது தேவாரங்களில் அறிமுகப்படுத்தினர். நால்வகை ஆன்மீக நெறிகள் நாயன்மார்களால் சைவத்தின் வாழ்வியல் மார்க்கமாக எடுத்துக் காட்டப்பட்டன. சரியை நெறியும், கிரியை நெறியும் சேவை மார்க்கத்தையும் பூசை மார்க்கத் தையும மக்களுக்கு விளக்கி நிற்பவையாகும். திருக்கோயிற் திருத்தொன்டு சமூகத் தொண் டாகப் பரிணமிக்கும் வண்ணம் மக்களின் பசி, பஞ்சம், போக்கப் படிக்காசு பெற்றும் நோய் தீர்த்தும் பல சேவைகளை ஆற்றியவர்கள் சமய குரவர்கள் ஆவார். அத்தகைய பண்பாடு செழிப்புறச் சம்பந்தர் திருநல்லூர் பெருமணம் திருக்கோயிலில் பாடிய

*"அன்புறு சிந்தையராகி அடியவர்........*
*துன்புறுவாரல்லர் தொண்டு செய்வார்"*

என்னும் பதிகத்திற் தொண்டு செய்வோர் துன்புறமாட்டார்கள் எனக் கூறினார். சம்பந்தர் திருமணக்கோலம் காணவந்த அடியாருடன் முத்தியெய்திய சிறப்புடையது இத்தலமாகும்.

சமய குருவர்கள் பாடிய ஏழு தேவாரத் திருமுறைகளும் " அடங்கன் முறை" எனப்படும் தேவாரங்கள் இசைக்கருவியின் துணையுடன் பாடப்பட்டன. "நல்லிசை ஞானசம்பந்தரும் நாவினுக்கரையனும் பாடிய நற்றமிழ்மாலை சொல்லியே" சைவமதம் பரப்பியே சைவநெறியினை வளர்த்தவர்கள். சிவநெறிப் பண்பாடு மீண்டும் தழைக்கவும் பக்தியினாலும் ஒழுக்கத்தினாலும் ஆன்மீக நெறியின் தேவாரம் அடிப்படையாக அமைந்தது. திருநீற்றுப் பதிகத்திலும், திருவைந் தெழுத்தின் மகிமையின் நமசிவாயப் பதிகத்திலும் விளக்கினார். அத்துடன் வழிபாட்டு கலையிலே பல வேறுபட்ட வழிபாட்டு நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. தலயாத்திரை, இசையுடன் பாடி வழிபடுதல் சிவலிங்க வழிபாடு, தொண்டுநெறி, சிவனடியார் வழிபாடு, அடியார்கள் தூண்டல், முதலிய பண்பாட்டுக் கோலங்கள் மனிதனின் வாழ்வின் மேம்பாடு மிக்க வாழ்வியலாக மிளிர்ந்தன. இயற்கையினை போற்றுவதில் சம்பந்தர் பாடல்களின் பொருளமைதி தனித்தன்மை பெற்றுள்ளது.

சம்பந்தர் தமது தேவாரப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் பெரும்பாலும் இரண்டு அடிகள் இயற்கை வர்ணனையாகவும் இரண்டு வரிகள் இறைவனின் திருவருட் சிறப்புக் கூறுவதாகவுள்ளன. இராவணன் பேரரசனாயிருந்தும் இறைவனை மதியாத காரணத்தினால் சிவனால் தண்டிக்கப்பட்டு பயனடைந்த வரலாறு பதிகம் ஒவ்வொன்றினதும் எட்டாம் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தீயவர் கூட சிவனை நினைத்து விட்டால் பெருவாழ்வு பெற முடியும் என்பது இதன் விளக்கமாக இருக்கலாம். சிவ பக்தியில் சிறந்தவன் இராவணன் என்பது பலரும் அறிந்த உண்மையாகும். பல்லவப் பேரரசனும், பாண்டியப் பேரரசனும், சைவத்தை மதிக்காத காரணத்தால் இராவணனைப் பயன்படுத்தி அவர்களை எச்சரிக்கை செய்வதற்காக இவ்வுத்தியை கையாண்டனர் என பேராசிரியர் கூறும் விளக்கம் பொருத்தமாகவேயுள்ளது. மேலும் சம்பந்தரின் தமிழ் மொழிப் பற்று பல இடங்களில் முத்திரை கவிகளாக இலக்கிய கலைக்கு அச்சாரமாகவுள்ளது. தமிழ் ஞானசம்பந்தன் நற்றமிழ் ஞான சம்பந்தர், சம்பந்தர் செய்த தமிழ்மாலை எனத் தம்முடன் தமிழையும் ஒன்றுபடுத்திக் கூறும் பண்பும் அவரிடம் காணப்படுகின்றது. எனவேதான் சமய குவரில் சம்பந்தர் முதல்வராக போற்றப்பட்டிருக்க வேண்டும்.

சம்பந்தரும் அப்பரும் பக்தி நெறிமூலம் சமூக சீர்திருத்தப் பண்பாட்டையும் வலியுறுத்திச் சென்றனர். கலப்பு மணம் சாதி வேறுபாடின்மை, அடியார்கள் எல்லோரும் ஒரே குலம் அந்தணரல்லாதாரையும் குருவாக ஏற்றல் எந்த நிலையில் எவ்வேடங்களிலும் இறைவனை வழிபடும் எளிய முறை சமபோசனம் என்பன இவர்களது தேவாரப்பாடல்களின் உட்பொருளாக விளங்கின. திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அ.ச. ஞானசம்பந்தர், ம. பாலசுப்பிரமணியம், போன்ற பேரறிஞர்களும் இச் சிந்தனைகளை தமது ஆய்வு நூல்களில் மதிப்பிட்டுள்ளனர். சம்பந்தர் திருநீலகண்ட யாழ்பாணர் நட்பு நெறியானது சமூகசீர்திருத்த உணர்வை வலுவடையச் செய்ததுடன் சேக்கிழார் பெருமானும் இவ்வுணர்வலைகளைச் செறிவடையச் செய்துள்ளார். சம்பந்தரும் யாழ்பாணரும் சேர்ந்து தேவாரம் பாடி யாழ்வாசித்ததுடன் யாழ்பாணரின் மனைவியார் மதங்கசூளாமணியும் உடன் சென்றமை கவனிக்கத் தக்கது. பாணருக்காக சம்பந்தப் பெருமான் காட்டிய பேரன்பு இதுவெனலாம். சம்பந்தர் பாணரை "ஐயரே" என்றே அழைத்தார்.

"ஐயரே உற்ற இசை அளவினால் நீர் ஆக்கிய இக்கருவி எனவும் "ஐய நீர் உள மகிழ இங்கணைத்த உறுதி உடையோம்" எனவும் வருமடிகள் இப்பண்பினை எடுத்துக்காட்டும். உண்மையான சிவபக்தி இல்லாதார் சடங்காசாரங்களை பின்பற்றுவதால் எந்தப் பலனுமில்லை என்பதையும் சமய குரவர்கள் உணர்த்தத்தவறவில்லை.

சம்பந்தர் தேவாரங்களிலே சைவ சித்தந்த கருவூலங்களையும் கண்டுகொள்ள முடியும் சித்தாந்தம் கூறும் முப்பொருள் சிந்தனையினை திருமுதுகுன்றம் பதிகத்தில்

*"விளயாததோர் பரிசில் வரு பசு பாச வேதனையொன்*
*தளையாயின தவிரல் வரும் தலைவன்"*

என குறிப்பிட்டுள்ளார். தலைவன் சிவன். பதி பிணிக்கப்பட்டது பசு பிணிப்பது. பாசம் ஒண்தளை ஆணவம், அது அனாதியானது, உருவாக்கப் படுவதில்லை, எனவே விளையாததோர் பரிசில் என்றார் இறைவனது இயல்பினை விவரிக்குமிடத்து

*"எண்ணிடை ஒன்றினர் இரண்டினர் உருவம்*
*எரியிடை மூன்றினர் நான் மறையாளர்*
*மண்ணிடை ஐந்தினை ஆறிண் அங்கம்*
*வகுத்தனர் எட்டிசை எட்டிரும் கலைசேர்*
*பண்ணிடை ஒன்பதும் உணர்ந்தவர்"*

என திருக்கழமலப் பதிகப்பாடலில் எடுத்தியம்பினார். ஞான நிலை என்பது அறிவே வடிவான அருவுரு கடந்த இறைவனை அன்பினால் வழிபாடு செய்தலாகும். சிவனை அன்புடன் வழிபடுவோர்க்கு ஞான நிலை கிட்டும் என்பதனை

*"சுருதிகள் பலநல முதல்கலை துகள் அது வகை பயில்வொடுமிகு...*
*புகழ்தர வழிஒழுகு .... திருவருள் சிவபுர நினைபவர்....."*

என்று திருச்சிவபுரம் பதிகப் பாடலில் விளக்கிச் சென்றார். சைவ சித்தாந்தம் "மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராம்" சிவனை முழுமையாக கொண்ட கலை ஞானம் என்பதனை சேக்கிழார் கூறும் போது

"சிவனையே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் உவமையில்லா கலை ஞானம் உணர்வரிய மெய்ஞானம்... தவமுதல்வர் சம்பந்தர் தானுணர்ந்தார் அந்நிலையில்" என சம்பந்தப் பெருமானின் கலை ஞானத்தையும் அங்கு சிறப்பித்தார். இவ்வாறு "வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" வந்த சம்பந்தப் பெருமான் பாதங்களைப் பணிந்து திருத்தொண்டினையும் சமூகத் தொண்டினையும் மேற்கொள்வதே சைவத்தின் உயர் வாழ்வியல் பண்பாடு என்பதனை தேவாரப் பதிகங்கள் வாயிலாக விளங்கிக் கொண்டு அதன் வாழ்வைச் செம்மையடையச் செய்வதே சைவப் பண்பாட்டின் உயர் குறிக்கோளாகும்.

# குடியைக் கெடுக்கும் குடி

நமது நாடான இலங்கையிலே கொலை, களவு கொள்ளை முதலிய பாதகச் செய்ல்கள் அதிகரித்து வருகின்றன. இவ்விழி நிலையை நாளிதழ்களில் வெளியாகுஞ் செய்திகளைக் கொண்டும் ஆண்டுதோறும் பொலிஸ்பகுதியினர் வெளியிடும் அறிக்கைகளைக் கொண்டும் தெளிவாக உணரலாம். நாட்டின் நற்பெயருக்கு மாசேற்படுத்தும் இந்நிலைக்கு காரணங்கள் பலவுளவேனும் அவற்றுள் சிறப்புடைக் காரணமாக அமைவது மதுபானமே ஆகும். போதையூட்டி மதியினைமயக்கி மக்களை மாக்களாக்கும் எப்பொளும் மதுவின் பாற்படும். கள், சாராயம், கஞ்சா, அபின் முதலியன பல்வேறு உருவங்களைக் கொண்ட மது வகைகளே.

மதுவானது அறிவினை மயக்குவது கொடிதிலும் கொடியது. இவ் உண்மைகளை நன்குணர்ந்தும் மக்கள் மதுவினை அருந்துகிறார்களே ஏன்? அதற்கு கூறப்படும் காரணங்கள் வெகு விசித்திரமானவை. துன்பம், மனம், அதிக கவலையினை அடைந்த பொழுதும் வாழ்விலேற்படும் பலவகை இன்னல்களாலும் மனம் அமைதியிழந்து காணப்படும் போது மனம் சாந்திஅடைவதற்கும் சிலர் மதுவை அருந்துகிறார்களாம். வாழ்க்கைப் போராட்டத்திலே சிக்கி இன்பமெங்கே? இன்பமெங்கே? என்று ஏங்கித் தவித்து அதைக்காணும் வழியறியாத சிலர் மயக்க நிலையில் ஒருவகை இன்பம் அனுபவிப்பதற்காக சிலர் குடிக்கிறார்களாம். முயற்சியின் பின் ஏற்படும் களைப்பையும், சோர்வையும் போக்கும் சமய சஞ்சீவி மதுவெனக் கருதிச்சிலர் அருந்துகின்றார்களாம். மேலைத்தேச நாகரிகத்திலே மூழ்கிய சிலர் மது அருந்துவதனை உயர்வெனக் கருதி அருந்துகிறார்கள். அறிவிற்குப் பொருந்தாத இவ்விந்தைக் காரணங்களைச் சொல்லிக் கொண்டு மது அருந்துபவர்கள் நாளடைவிலே பழக்கங்காரணமாக மதுவுக்கு மீளா அடிமையாகி வாழ் நாளினை வீன் நாளாக்குகின்றார்கள்.

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார் அத்தனைச் சிறப்புடையது மனிதப்பிறவி தக்கது இது தகாதது இது என உணரத்துணைபுரிவதான பகுத்தறிவு உடயமையினாலே மனிதப் பிறவி சிறப்புப் பெறுகிறது. அதனால் பகுத்துணரும் பண்பே மனிதப்பண்பு மனிதனிடத்திலுள்ள மதிப்புக்குரிய பெருநிதியம் இப்பெருநியதியமானது எவ்விதத்திலாயினும் இழக்கப்படுமானால் மக்கள் இழிநிலையடைந்து மாக்களாகி விடுவர். எனவே மனிதனை மனிதனாக்கிச் சிறப்புத் தருகின்ற அறிவை மயக்கி மிருக நிலைக்குத்தள்ளும் எப்பொருளாயினும் "அது விண்ணோரமிழ்தாயினும்" விலக்கப்பட வேண்டியதே. அதுவும் மனிதனது சிரீய அறிவினை மயக்கி அவனை விலங்கு நிலைக்குத் தாழ்த்தி விடுவதால்கண்டிப்பாக ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றாகிறது.

பொய், கொலை, கள், களவு, காமம் என்பவற்றை பஞ்சமா பாதங்களென அறிஞர் கருதுகின்றனர். காதல், களவாடல், கள்ளுண்ணல், பொய்மொழிதல், ஈதல் மறுத்தல் எனும் இவை மறுக்கப்பட வேண்டிய பாதகங்களென அறநூல்கள் கூறுகின்றன. இங்ஙனம் பாதங்களின் நடுநாயகமாக மது விளங்குவதோடு பாதகங்களனைத்தையும் பெற்ற தாயாகவும் விளங்குகிறது. மதுவுண்டோரினது அறிவு மயங்குவதனால் அவன் நன்மை தீமை உணராமல் குருதியோட்ட வேகங்கூடுவதனால் காமுகனாக மாறிப் பாதகஞ் செய்யத் துணிகிறான். அதனால்

உத்தமர்களால் கணிக்கப்படாத இழிந்தவனாகிறான். கைப்பொருளனைத்தையும் மதுவிலே கரைத்து பின்னர் மதுவுக்குந் தனக்குந் குடும்பத்துக்குமாகப் பொருளீட்ட குறுக்கு வழிகளிலே ஈடுபடுகின்றான்.

இதன் காரணமாகவே சூதாட்டத் துணிந்து கையிலுள்ள சிறிது பொருளையுமிழந்து நடைபிணமாகிறான். பொருளற்ற நிலையிற் பொய் பேசுதலும், கடன்படுதலும், பிறரை இரந்து பின்நிற்றலுமாகிய இழிகுணங்கள் அவனைப் பின் தொடருகின்றன. குடி போதையினால் அறிவுமயங்கிய நிலையிலே பிறரையும் பிறரது சொற்களையும் பகுத்துணர முடியாத பெருங்கலகக் காரணாகவும் சிலவேளை கொலை காரணமாகவும் மாறுகின் றான்.இவ்வித இழி நிலைகளினால் ஏற்படும் பயன்களை வள்ளுவப் பெருந்தகை இரத்தினச் சுருக்கமாக

*"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரால்*
*எண்ணப்பட வேண்டாதார்"*

என்று கூறுகிறார். எனவே மது விலக்கப்பட வேண்டியதொன்று மனிதனின் குடும்ப வாழ்வினைச் சீர்குலைத்து விடுகின்ற இழிகுணம் மவுக்குண்டு. மதுவருந்தும் குணமுடையோன் பாடுபட்டுச் சம்பாதித்த பொருளை மதுவுக்காகச் செலவிடுகிறான். அதனால் அவனது உழைப்பினை நம்பியிருக்கும் அவனது மனைவி, பிள்ளை பசிபசியென்று துடித்துப் புலம்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. தனது வருவாயை மதுவரக்கனுக்குப் பலியிட்டு போதாமற் போகவெ முன்னோர் தேடி வைத்த பொருள் பண்டங்களையும் நிலத்தையும் விற்றுவிடுகின்றான். மங்கையர் மங்கலமாக உயிராகப் போற்றும் தாலியையும் பறிக்கத் துணிகின்றான். எனில் மதுவின் கொடுமை எத்தகையது என்று வருணிக்க முடியுமா? இந்நிலையில் இன்பமும் அமைதியும் குலவ வேண்டிய குடும்ப வாழ்வு சகிக்க் முடியாத நகரத்துன்பமாக மாறிவிடுகின்றது. ஆகவே குடும்ப வாழ்க்கையைக் கெடுத்து அதனை நாசமாக்கும் குடி விலக்கப்பட வேண்டியதாகிறது. மது அருந்தியவனது குடும்பம் அழிவது மாத்திரமன்று அவனது வாழ்வும் அழிகிறது. மது அருந்தியவன் மதுவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருக்கும் வேளையிலே சோர்வு நீங்கிச் சுறுசுறுப்புடையவன் போலத் தோன்றுவது உண்மையே ஆயினும் அதன் ஆதிக்கந் தீர்ந்தபின் நீங்கிய சோர்வினும் பார்க்கப் பன்மடங்கு கூடிய சோர்வு உடையவனாகின்றான். இச்சோர்வு காலகதியில் எத்தொழிலுஞ் செய்ய இயலாத நரம்புத் தளர்ச்சியை உண்டாக்குகிறது.

மதுவானது அறிவை மயக்கி மனிதனை விலங்கு நிலைக்குத் தாழ்த்துகிறது. குடும்ப வாழ்வையும் தனிமனித வாழ்வையும் கெடுத்து நாட்டை சீரழிக்கிறது. இக்காரணங்களால் அது விலக்கப்பட வேண்டிய பொருட்களிலே முக்கிய இடம் வகிக்கின்றது. மதுவிலக்குச் சித்தி பெறுவதற்கு மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்போடு, மதுவிலக்குச் சட்டமும் நடைமுறைக்கு வருதல் வேண்டும் அவ்விதம் மது விலக்கப்படுமாயின் தனிமனிதன் நோயற்ற சிறப்பான வாழ்வு வாழ்வான். குடும்பங்கள் அமைதியும் பொருள் வளமும் பெற்றுச்சீர்பெறும் அதனால் நாடு நலமுறும்.

**ஆக்கம்: கிரிஷாந்தி . கு**

**A/ L (2011)**

# நிஷா உனக்கு விசா தந்தவர் யார்

தெற்கிருந்த வந்தால் தென்றல்
வடக்கிருந்து வந்தால் வாடை
சுற்றிச்சுழன்றால் சூறாவளி
விஸ்வரூபம் எடுத்தால் புயல்
நிஷா நீ எந்த வடிவம் சொல்
உனக்கு விசா தந்தவர் யார்?

எங்கிருந்து வந்தாய்
எதிலிருந்து பிறந்தாய்
இயற்கை மேலான அன்னையே
இடைக்கிடை மோதுவதேன் மண்ணோடு

மங்காத போரின் வடுக்கள்
மனம் விட்டு அகலுமுன்
பொங்கி எழுந்த சுனாமியின்
பேரவலம் மறையுமுன்னே

சங்கட சதிவலைகள் நீங்குமுன்னே
எங்கிருந்து நீ வந்தாய் நிஷா
எமது தேசம் அழிக்கவென்றோ
தெங்கு பனை பயன்தரமரங்கள்
தேடிவைத்த மனித செல்வங்கள்
ஒரு நொடியில் அழித்து விட்டாய்
இது நியாயம் தானா சொல் நிஷா
இயற்கை அன்னையே அம்மா
இனிமேலும் எம்மீது கோபம் வேண்டாம்
இனிதாக நாம் வாழ விடை கொடுப்பாயா?

S. மேரிதர்சனா
A/L (2011)

# ஆசிரியர் கழகம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
திரு.சி.சடகோபன், திருமதி.வ.அருளானந்தம், திரு.வே.பாலசுப்பிரமணியம், திருமதி.யோ.சந்திரகுமார், திருமதி.த.சிவபாலசிங்கம், திரு.ந.ஸ்ரீமுருகதாஸ்காந்தன்

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)
திருமதி.சி.தங்கராசா, திருமதி.கௌ.சுமீஸ்கரன், திருமதி.உ.பாலசுப்பிரமணியம், திரு.செ.முரளீதரன், திரு.க.சுதாஸ்குமார்

# வளர்ச்சிப் பாதையில் . . .

கரைந்தோடும் காலத்தில்
விரைந்தோடும் விஞ்ஞானத்தால்
விளைந்திடும் பல விந்தைகள்
விதைத்திடும் பல வித்தைகள்

போர் ஓய்ந்த நாடுகளில் பேயாகப் பணிபுரியும்
போரோய்ந்த சோலைகளியே தாயாகி மடி விளங்கும்
தோளோடு தோள் நின்று "ஹாயாகபோஷ்" கொடுக்கும் அந்த
றோபோவின் போதனையால் சோகங்கள் தீர்ந்துவிடும்

கண்ணியுத்தம் கன்னியுத்தம் எல்லாம் கனவாகும்
கல்வியுத்தம் கணனியுத்தம்எல்லாம் நனவாகும்
கடல்களிங்கு தரையாகும் தரைகளிங்கு சுவராகும்
உடல்கள் குளோனிங்கில் உருவாகும் உயிர்கள் உதிரா கருவாகும்.

ஆண்பெண் பேதங்கள் மறையும்
ஆடைகள் கூட அரைவாசி குறையும்
சாதிமத சந்ததி அற்றுப்போகும்
இரண்டற இயற்கை செயற்கை ஒன்றுசேரும்.

ஐயரில்லா கோவில்களெல்லாம்
கம்பியூட்டர்கள் பூசை செய்யும்
ஆழில்லா ஆழ்கடலிலும்
தானியங்கிகள் தூண்டில் போடும்.

தொழிலாளர்களின்றி தொழிற்கூடங்களியங்கும்
முதலாளியின்றி முதலீடு நடக்கும்
கணனிகளும் கூட கடையடைப்புச் செய்யும்
கனவிலும் அவை வந்து ஆர்ப்பாட்டம் செய்யும்

நாளெல்லாம் பௌர்ணமி ஊரெல்லாம் ஜொலிக்கும் - அது
பூமிக்கு இராத்துணை பலவென்று உரைக்கும்
கதிரவன் கதிர்வீசல் கட்டுப்பாட்டில் நடக்கும்
வையகப் பெண்ணை வருடவென்று அது தடுக்கும்.

**ஜெ. மதிலோஜினி**
**A/L (2010)**

# கற்றிடுவோம் கல்வியை

ஓ மாணவனே
ஓ மாணவனே

எதிர்காலம் உன்கையில்
தரப்படப் போகிறது

தரப்படப் போகிறது
பின்வாங்கில் இருந்து

பின்வாங்கிப் போகிறாயா
முன்வாங்கில் வந்து

முன்வாங்கப் பாரடா
எஞ்ஜினியர், டொக்டர்

அரச அதிபர், முகாமையர்
பேராசிரியர், துணைவேந்தர்

கல்விப்பணிப்பாளர், காசாளர்
அதிபர், தபாலதிபர்

போன்ற பதவியெல்லாம்
உன்னை பற்றப் போகிறது

எதிர்காலம் நீயறிந்து
இரவு பகல் பாராது

கடமை தவறாமல்
எழுந்து நீ கற்றிடுவாய்

புத்தகத்தைத் தலையணையாய்
போட்டு நி தூங்கி விட்டால்

எதிர்காலமும் தூங்கிவிடும்
இதை நிமறாதே

கற்றிடுவாய் கற்றிடுவாய்
சமகாலத்தை போற்றிடுவாய்

பிரதமர், மேஜர் என்ற
சம உரிமை கிடைத்தாலும்

குப்பி விளக்கிலே
குனிந்து நீ படித்தாலும்

நிலையான எதிர்காலம்
நிமிர்ந்தே நீ நிற்பாய்

நிம்மதியாயிருப்பாய்
கற்கை நன்றே

கற்றிடுவோம் கற்றிடுவோம்
காலமெல்லாம் கற்றிடுவோம்

கவலையே வேண்டாம்
கல்வியிலே முன்னேறி

கல்விதனை கற்று
கல்வி மானாய் மாறிடுவோம்.

**ஆக்கம் சி. சிவறெஜினா**
A/L Com,
**2011.**



கல்லூரிக் கூட்டுறவுச் செயற்குழு



வணிக மன்றம்



கணித விஞ்ஞான மன்றம்



முதலுதவிப் படை

# பெண்ணாய்ப்பிறந்துவிட்டால்

பெண்ணொருத்தி பிறந்துவிட்டால்
பெற்றவர்க்குத் தொல்லையென்பார்
பெண்பிறக்கவில்லை எனில்
தாய்க்குப் பெண் பொருத்தம் இல்லை என்பர்

ஊழ்வசத்தால் ஒருபாவை
ஊனஉடல் பெற்றுவிட்டால்
உதவாக்கரை யென்றே
ஒதுக்கி வைப்பர் வாழ்வெல்லாம்

பெண் கொஞ்சம் படித்துவிட்டால்
செருக்கேறி விட்டதென்பர்
படிக்காமல் இருந்திடிலோ
பட்டிக்காடு என்றிடுவர்.

பாதையினில் சென்றிடுங்கால்
பாவையவள் சிரித்துவிட்டால்
அடக்கமில்லாப் பெண்ணென்றே
அடுத்தவர்க்கு இயம்பிடுவர்.

ஆணோடு பெண் கொஞ்சம்
அண்டியே பழகிவிட்டால்
அடக்கமில்லாப் பெண்ணென்று
அடுத்தவர்க்கு இயம்பிடுவர்

பெண்கொஞ்சம் துடுக்காகப்
பேசிவிட்டால் போதும்
வாயாடி என்றவரை
வந்திடுமே அவளுக்கு

நாலுபேர் மத்தியிலே
பாவையவள் நாணங் கொண்டு விட்டால்
நாகரிகம் தெரியாத
நங்கையவள் என மொழிவர்

நெடுங்காலம் பெண்ணொருத்தி
மணமின்றி இருந்துவிட்டால்
பெரியதொரு சுமையென்றே
பெற்றவரும் கூறிடுவர்.

விபத்தொன்றில் கொண்டவனைப்
பறிகொடுக்க நேர்ந்துவிட்டால்
விதவை என்ற விருதொன்று
பாவைக்குக் கிடைத்துவிடும்

மணமாகிப் பலநாளாகியும்
பெண் தாய்மை வரம் இல்லையெனில்
மலடி என்றெ பட்டமிட்டு
அமலங்கலமாய் ஒதுக்கிடுவர்

பெண்ணாய்ப் பிறந்து விட்டால்
பேதை பெறும் வகையோ பலகோடி
ஏன் இந்த நிலையென்று
பெண்ணெனக்கெ தெரியவில்லை.

**K. அபர்னா**

## கற்றுக்கொள்

பூக்களைப்பார்
சிரிப்பைக் கற்றுக்கொள்
நாயைப் பார்
நன்றியைக் கற்றுக்கொள்
எறும்பைப்பார்
உழைப்பைக் கற்றுக்கொள்
காக்கையைப் பார்
ஒற்றுமையைக் கற்றுக்கொள்
அலைகளைப் பார்
முயற்சியைக் கற்றக்கொள்
கொக்கைப் பார்
பொறுமையைக் கற்றுக்கொள்
தேனீயைப் பார்
சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்
மரத்தைப் பார்
உதவும் குணங்களைக் கற்றுக்கொள்
மனிதனாகிய நீ
நற்குணங்களைக் கற்றுக்கொள்

**சு. சுலக்சன்**
**தரம் 4B**

# பழைய மாணவர் சங்கம் - கனடா





19 வயதின் கீழ் பெண்கள் கரப்பந்து அணியினர்



19 வயதின்கீழ் பெண்கள் சதுரங்க அணியினர்



15 வயதின் கீழ் பெண்கள் வலைப்பந்து அணியினர்



19 வயதின் கீழ் ஆண்கள் கிறிக்கற் அணியினர்

# சமூகத்தில் போதைவஸ்துப் பாவனை

சமகால மானிட சமூகம் குறிப்பாக மாணவ சமுதாயம் எதிர் நோக்கி கொணடிருக்கும் பிரச்சினைகளுள் " போதைவஸ்து உபயோகம்" மிகவும் தீவிரமான பிரச்சனையாக இனங்காணப்பட்டுள்ளது. வளங்குறைந்த நாடுகளில் மட்டுமல்லாது குறைவிருத்தி நாடுகளிலும் இதுவோர் அச்சுறுத்தும் பிரச்சனையாக தலையெடுத்துள்ளது. இது ஒரு தனியாள் சம்பந்தப்பட்ட விவகாரமாக ஆரம்பித்து நாளடைவில் சமுதாயத்திற்குரிய பிரச்சனையாக பரிமாணம் பெற்றவிடுகிறது.

போதைவஸ்து என்றால் என்ன? போதைவஸ்துக் குறித்து வரைவிலக்கணத்தை காணுதல் புதிர்நிறைந்த தொன்றாக அதாவது ஏமாற்றுத்தனத்தை கொண்டதாக அமைகின்றது. போதைவஸ்து என்றால் என்னவென ஒருமுகப்பாடாக சமூகவியலாளன், மருத்துவியலாளன், பொருளியலாளன், பொதுமகன், பொதுசன தொடர்பூடகங்கள் போன்றன கருதுவது மில்லை. வரையறை செய்து கொள்வது மில்லை. சமூகஉளவியல் போன்ற வற்றை முதன்மைப்படுத்தியவாறும் மருத்துவத் துறை, சட்டத்துறை போன்றவை போதைப் பொருள் குறித்துக் கொண்டுள்ள நிலைப்பாட்டினை புரிந்து கொண்டவாறாகவும் போதைவஸ்து குறித்து இங்கு நோக்குவதே பொருத்த மானதாகும்.

போதைவஸ்து என்பது "எந்தவொரு பொருளானது அதற்குரிய இரசாயன இயல்பினால் உயிரியொன்றின் செயற்பாட்டில் அமைப்பு ஒன்றிலே மாற்றத்தினை ஏற்படுத்துகின்றதோ அதனையே போதைவஸ்து" எனலாம். இது அறிவியலாளர்களுக்கு பொருத்தமான வரைவிலக்கணமாகும். "போதைப்பொருளானது எமது விருப்புகளினது விளைவுகளுக்கு நேர்க்கணிய மானதொரு பாதிப்பை ஏற்படுத்த உதவும்" என்பது பொதுவான போதை வஸ்து பற்றிய வரை விலக்கணமாகும்.

சாதாரணமாக தெருவோர மனிதனுக்கு துன்பத்தையும், நோயையும் தரக்கூடிய போதைவஸ்துக் குறித்து இங்கு நோக்குவதே பிரதானமானதாகும். போதைவஸ்துப் பொருள்கள் பாவித்தல் அல்லது பாவிக்காது விடுதல் என்பது எமது எண்ணங்களிலேயே தங்கி உள்ளது. போதை வஸ்துக் களை எடுப்பதன் மூலம் ஆறுதலை பெறலாம் என்கின்ற கருத்து எமது உடலியல் கூற்றுக்களிலிருந்து வருகின்றதொன்றல்ல. சமூகத்தின் வழியாகவே மனிதனை வந்தடைகின்றது என ஆணித்தரமாக கூறமுடியும்.

போதைவஸ்தினை எடுப்பவர்கள் புகையிலையுடன் சேர்த்து புகைபிடித்தல் வழியாகவும், பொடியாக்கி மூக்கினூடாகவும், ஈரப்படுத்தி வாயுருவாக்கி சுவாசித்தல் வழியாகவும், வாய்மூலமாகவும் நரம்பினுள் ஊசியினால் செலுத்தியும் அல்லது தசைக்குள் ஊசியால் செலுத்தியும் மதுபானத்துடன் கலந்தும் பல உணவுடன் கலந்தும் போதைவஸ்துக்களை எடுத்துக் கொள்கின்றார்கள்.

போதைவஸ்துக்களின் வகைகளும் பெயர்களும் குறியீடுகளும் காலத்துக்கு காலம் அதிகரித்து கொண்டே செல்கின்றன. தொடக்க காலத்தில் சட்டரீதியாகவும் கலாசார ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதைவஸ்துப் பாவனைகள் இன்று சட்டரீதியாக தடைசெய்யப்பட்ட தொன்றாகவும் சகல சமூகச் சீரழிவிற்கும் அத்திவாரமாக அமைவ தாகவும் மாறிவிட்டது. மேலும் பல நாடுகளில் போதைப் பொருள் உபயோகத்திற்கு மரணதண்டனை வழங்கப்படுகின்றது. உலகளாவிய சுகாதார சமூகநலன் பேணும் அமைப்புக்கள் போதைவஸ்துக்கள் தீயவிளைவுகள் குறித்து பிசாரம் செய்து வருகின்றன. ஆயினும் இவற்றின் உபயோகம் குறையவில்லை. நாளாந்தம் போதை வஸ்துக்களை உபயோகிப்போர் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

எனவே உளவியல் ரீதியாகவும் உடற்கூற்று ரீதியாகவும் எத்தகைய தாக்கங்களை இவை ஏற்படுத்துகின்றது என்பதை இங்கு நோக்குதல் வேண்டும். மருத்துவ காரணங்களுக் கென அனுமதிக்கப்படுகின்ற போதைப்பொருட்களே காலப்போக்கில் போதைவஸ்துக்கள் உருவாக வழி செய்கின்றன. மனஅழுத்தம், மனமுறிவுகள், தாழ்வுணர்ச்சி போன்ற உளவியல் காரணங்களால் மருந்துவர் அறிமுகப்படுத்தும் மருந்துகளை ஆலோசனை யின்றி அளவுக்கு அதிகமாக பாவிப்பதனால் காலப்போக்கில் இவர்கள் போதை வஸ்திற்கு அடிமையான வர்களாகவே மாறிவருகிறார்கள்.

பொதுவாக உளவியலில் அதிகபட்ச போதைப்பொருள் பாவனைகள் நடத்தைப்பிறழ்வுகள் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றன என்பதை புலப்படுத்து கின்றன. உளவியல் தாக்கங்களை உண்டாக்குகின்ற போதை வஸ்துக்கள் அதாவது உளவியல் செல்வாக்கு செலுத்துகின்ற போதை வஸ்துக்கள் மத்திய நரம்புத்தொகுதியில் பாதிப்பினை ஏற்படுத்தி ஒருவரின் பௌதீக தொழிற்பாடு உடலியல் தொழிற்பாடு மனவெழுச்சி நிலைகள் போன்றவற்றிலே மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது.

போதைப்பொருட்களின் அடிப்படைத் தாக்கம் மனச்சோர்வு அல்லது கிளர்ச்சி யூட்டலை மூளையில் ஏற்படுத்தும் போதைவஸ்துக்கள் ஏற்படுத்தும் உளத்தாக்கங்களை மிகவும் சரியாக குறிப்பிடமுடியாது. போதைவஸ்து எடுக்கப்படும் அளவும் எடுக்கும் தரங்களும் அவை இரத்தத்தில் கலக்கும் விரைவும் போதைவஸ்துவின் தாக்கத்தை தீர்மானிப்பதில் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன. ஆண், பெண் பால்நிலை வேறுபாடு, வயது வேறுபாடு என்பனவும் தாக்கத்தினை நிர்ணயிப்பதில் செல்வாக்கினை செலுத்துகின்றன.

இன்றைய நிலையில் உலகில் அமைதியையும் சுபீட்ச வாழ்வினையும் கேள்விக்குறியாக்கிவிட்ட போதைப்பொருள் பாவனையை எவ்வாறுதடைசெய்யலாம் அல்லது கட்டுப்படுத்தலாம் என்பது உலகமானிடம் முன்வைக்கப்பட்ட

பொதுவானதொரு பிரச்சினையாகிவிட்டது. உலக நாடுகளின் இணையங்களாக விளங்கும் அணிசேரா நாடுகளின் ஒன்றியம், சார்க்நாடுகளின் கூட்டமைப்பு போன்ற பெரிய நிறுவனங்கள் போதை வஸ்துக்களை தடைசெய்வது குறித்து ஆராய்ந்து பலவழிமுறைகளை கண்டிருக்கின்றன. பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கவும், மறுவாழ்வு வழங்கவும் உலகம் பூராகவும் பல அமைப்புக்களை நிறுவியுள்ளன. முதலாம் அமைப்பு 1958ஆம் ஆண்டு கலிபோர்ணியாவில் அமைக்கப்பட்டது.

போதைவஸ்துக்களினால் ஏற்படும் தீங்குகளை அச்சுறுத்தல் முறையிலோ சவாலாகவோ, இறுக்கமான கட்டளைகள் போன்றோ எடுத்துக்கூறாமல் சகஜமானமுறையில் அவற்றின் கெடுதிகளை எடுத்துக்கூறும் யுக்திகள் நிலையான பலனை தரலாம். மக்களின் மனங்களில் கூடதலான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இரசனைக்குரிய ஊடகங்களான சினிமா படங்கள், நாடகங்கள், கவிதைகள், கதைகள் மூலமாக போதைவஸ்துக்களின் தீங்குகளை எடுத்துக் கூறலாம். போதைவஸ்துக்கு எதிரான கருத்தரங்குகளை நடத்துகின்ற போது வெறும் நியமங்களாக போதை வஸ்துக்கு எதிரான கருத்துக்களை எடுத்துக்கூறாது சாதக பாதக விளைவுகளை சபையோரையும் உள்ளிட்டதொரு கலந்துரையாடல்களாக நடத்து கின்றபோது பொதுக்கருத்துக்களை எட்டுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

**ஆக்கம்:- ச. கஜானா**

*A/L Com (2011)*

## எனது அம்மா

எனது அம்மாவின் பெயர் செல்வகுமாரி
எனது அம்மா என்னை பத்து மாதம் சுமந்தார்.
எனது அம்மா என்னை பாடசாலைக்கு கூட்டிச் செல்வார்.
எனது அம்மா எல்லோரிடமும் அன்பு காட்டுவார்.
எனது அம்மாவின் சொற்படி நடப்பேன்.
எனது அம்மாவின் வேலை வீட்டுப்பணி.
எனது அம்மா மிகவும் அழகானவர்.
எனது அம்மா மிகவும் நல்லவர்.
எனது அம்மாவை நான் நேசிக்கிறேன்.
எனது அம்மா எனக்குச் சோறு சமைத்து தருவார்.

**தே. நிதர்சனா**

**தரம் 3A**

# குழந்தை இலக்கியம்

தமிழ் இலக்கியப் பரப்பிலே குழந்தை இலக்கியம் மிகப் பழங்காலம் தொட்டே நிலவி வந்துள்ளது. குழந்தை இலக்கியம் தோற்றம் பெறுவதற்கு வாய்மொழி மரபே காரணியாய் அமைந்தது. எமது பண்பாட்டில் பாட்டி கதை சொல்லும் மரபு தாய் பாட்டி முதலானவரின் பாடலை மழலை கேட்டுப்பாடும் மரபும் நீண்டகாலமாகவே நிலவி வந்துள்ளது.

பழந்தமிழ் இலக்கியங்களில் குழந்தைகளைப் பற்றிய செய்திகள் கிடைக்கின் றனவே தவிர குழந்தை இலக்கியம் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. தமிழில் குழந்தை இலக்கியம் தொல்காப்பியர் காலத்திலிருந்து விளங்கி வந்துள் ளது.எனக்கருத இடமுண்டு. தொல்காப்பித்தின் பொருளாாரச் செய்யுளிலே 485வது நூற்பாவுக்கு பேராசிரியர் தரும் விளக்கவுரையானது குழந்தை இலக்கியம் பற்றி அறிய உதவுகின்றது.

குழந்தைகளை மையமாகக் கொண்டு எழுந்த இலக்கியங்களை குழந்தை இலக்கியம் எனலாம். குழந்தைகளுக்கான கதைப்பாடல்கள், கதைகள். விடுகதைகள் பத்திரிகைகள். நாவல்கள், சஞ்சிகைகள். சித்திரக்கதைகள் போன்றவற்றைக் குழந்தை இலக்கியமாகக் கொள்ளலாம்.

இக்குழந்தை இலக்கியங்கள் எளிமையானவையாகவும், நகைப்பண்பு வாய்ந்தவை யாகவும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியவையாகவும் புத்திபுகட்டுவதை நோக்கமாகக் கொண்டவையாகவும் விளங்குகின்றன.

தமிழின் ஆரம்பகால குழந்தை இலக்கியமாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்றவைகளைக் கொள்ள முடிகின்றது அறம்செய்யவிரும்பு, ஆறுவதுசினம், இயல்வது கரவேள் என்ற அகர வரிசையினை அறிவிப்பனவாகவும் அறக்கருத்துக் களைப் புகட்டுவனவாகவும் அமைந்துள்ளன.

குழந்தைப்பாடல்களை எழுதியவர்களில் பாரதியார், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, அழ வள்ளியப்பா, சோமசுந்தரப்புலவர், கவிஞர் செல்லையா, வேந்தனார் கனகசெந்திநாதன் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இவர்களில் பாரதியார் எழுதிய

*ஓடி விளையாடு பாப்பா –நீ*
*ஓய்ந்திருக்கலாகாது பாப்பா*
*கூடி விளையாடு பாப்பா –ஒரு*
*குழந்தையை வையாதே பாப்பா*

என்னும் பாடல் குறிப்பிடத்தக்கதாகும். குழந்தைஇலக்கியத்தில் கதைப் பாடல்களும் உள்ளடங்குகின்றன. இவ்வாறான கதைப்பாடல்களில் தாடி அறுத்தவேடன், பவளக்கொடி, கொழுக்கட்டைப்பொன்னன் முதலியன குறிப்பிடத் தக்கது. குழந்தை இலக்கியத்திலே உரைநடையில் அமைந்தவைகளும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் ஆறுமுகநாவலர், சதாசிவம்பிள்ளை போன்றோர் சிறுவர்களுக்கான கதைகளை உரைநடையில் எழுதியுள்ளார்கள். குழந்தை இலக்கியத்தில் பத்திரிகையும் உள்ளடங்கு கின்றது. இவ்வகையில் 1789ஆம் ஆண்டு அமெரிக்கா மிசனெரிமார் பாலியர்நேசன் என்ற பெயரில் சிறுவர்களுக்கான பத்திரிகை ஒன்றினை அமைந்துள்ளார்கள். இதிலே உரைநடையில் அமைந்த கதைகள் நீதிப்போதனைகள் , ஆத்திசூடி முதலானவை இடம்பெற்றன.

குழந்தை இலக்கியங்களில் சஞ்சிகைகளும் உள்ளடங்குகின்றன. இவ்வகையில் அம்புலிமாமா, பாலமித்திரன், இரத்தினபாலா, கோகிலம் போன்றவை உள்ளடங்கு கின்றன. ஈழத்தில் சிறுவர் சஞ்சிகைகள் தோன்றி மறைந்துள்ளன இவ்வகையில் கண்ணன் கரும்பு, கண்மணி போன்ற சஞ்சிகைகளை குறிப்பிட முடியும்.

தமிழ்இலக்கிய உலகிலே சிறுவர்களுக்கான நாவல்களும் எழுந்துள்ளன. இவ்வகையில் ஓடிப்போனவள் என்னும் நாவலைக் குறிப்பிடலாம். சிறுவர்களுக்கான சித்திரக்கதைகளும் எழுந்துள்ளன. ராணிகமிஸ், முத்துக்கமிஸ் போன்ற நிறுவனங்கள் இன்றுவரை சித்திரக்கதைகளை வெளியிட்டு வருகின்றது.

இன்று பத்திரிகைகளிலும், வானொலிகளிலும், தொலைக்காட்சிகளிலும் சிறுவர்களுக்கென பகுதிகளை ஒதுக்கியுள்ளனர்.

குழந்தை இலக்கியம்பற்றி பேராசிரியர் கைலாசபதியின் கூற்று கவனித்தக்கதே குழந்தைகளின் வயது மூளைவளர்ச்சி, மொழித்திறன், ஆற்றல், ஏற்புடமை இவையெல்லாம் கருத்தில் கொண்டு இலக்கியங்களைப் படைப்பவர்களில் தொகை குறைவாகும் எனவே இவை கருத்தில் எடுக்கப்பட்டால் சிறந்த குழந்தை இலக்கியங்கள் உருவாகும்.

**ஶ்ரீ. தர்சிகா**

**A/L 2010**

# பெண்

நால்வேதங்களில் ஒன்றாகி
எட்டுத்திசைகளிலும் கலந்து
பூமியின் வெளிச்சத்துக்கு ஒளியாக
தன்னை உருக்குபவள் - பெண்

எட்டுத்திசைகளிலும் சென்று அற்புதங்கள்
பலவும் செய்து பூமியின் முகவரியாய்
சந்ததியின் கருவாக விளங்குபவளும்
நதியின் போக்கானவளும் - பெண்

உறவுகளை உயர்த்திட வைப்பவள்
ஜடத்தினையும் தன்மதியால் மாற்றுபவள்
சங்கடங்கள் பல ஏற்பவள்
பாரதி சொன்ன புதுமைப்பெண்

வாழ்க்கையெனும் கடலில் நீந்தி
கரைசேர்க்கும் ஓடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் தன்னை
மாற்றுபவளும் - பெண்

இயற்கையின் அழப்பரிய சாதனையின் வடிவமாய்
பூமியின் மடியிலே அவதரித்த
முதலும் முடிவுமான வெற்றியின்
மறுபெயரே - பெண்

நீலத்தால் அலங்கரித்த பாரினில்
வெளிச்சத்திற்கு மூலமானவன் - சூரியன்
அந்த சூரியனையும் சுட்டெரிக்கும்
சுடர்க்கொடியானவள் - பெண்

வார்த்தைக்குள் அடக்கிட முடியாத
வானமானவள் - பெண்
உணர்வின் உருவமாகிய
சிற்பமானவள் - பெண்

அன்பின் உருவமானவள் அறிவின் ஒளியாகி
மென்மையின் அம்சமாகிய
உன்னதமான ஒப்பற்ற
பேசிடும் தெய்வம் - பெண்

**சி. அர்சிகா**
A/L (2010)
**கலை**

# சங்ககால அகத்திணை மரபு

தமிழ்மொழி வரலாற்றினை பொறுத்து முதலாவது காலமாகவும் தொடக்க காலமாகவும் பழமை வாய்ந்த காலமாகவும் விளங்குவது சங்ககாலமாகும். கி.பி 1 - கி.பி 3 நூற்றாண்டு வரையான காலப்பகுதியினை சங்ககாலமென பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் தன்னுடைய தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலிலே வரையறை செய்துள்ளார்.

முதற்சங்கம், கடைச்சங்கம், இடைச்சங்கம் ஆகிய முச்சங்கங்கள் அமைக்கப்பட்டு தமிழ் மொழியானது வளர்க்கப்பட்ட காரணத்தால் இக்காலப்பகுதி சங்ககாலமென அழைக்கப்படுகின்றது. இச்சங்கங்கள் மதுரையிலும் தென்மதுரையிலும் கபாட புரத்திலும் அமைந்திருந்தமையினை அறியமுடிகின்றது.

தமிழகத்தின் எல்லையாக வடக்கே வேங்கடத்தையினையும் தெற்கே தென்குமரியி னையும் எல்லையாகக் கொண்டு விளங்குகின்றது. தமிழகத்தினை முடியுடை வேந்தர்களும் பாரி காரி ஆகிய குறுநில மன்னர்களும் ஆண்டு தமிழை வளர்த்தார்கள்.

சங்க காலத்திற் எழுந்த இலக்கியங்களை எட்டுத்தொகை இலக்கியம், பத்துப்பாட்டு இலக்கியம் என வகைப்படுத்தி நோக்கமுடியும். எட்டுத்தொகை இலக்கியங்களாக அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பனவாகும். பத்துப்பாட்டு இலக்கியங்கள் திருமுருகாற்றுப்படை, பெருநராற்றுப்படை, பெரும்பாணாற் றுப்படை, சிறும்பாணாற்றப்படை, கூத்தராற் றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, முல்லைப் பாட்டு என்பன ஆகும்.

இவ் இலக்கியகளில் பேசப்படும் பொருள் மரபினை இரு வகைப்படுத்தி நோக்க முடியும்.

1. **அகம்சார் பொருள் மரபு**
2. **புறம்சார் பொருள் மரபு**

அகம் என்பது பொதுவாக காதல் என்றே வழங்கப்படுகின்றது. அதாவது உள்ளத்துடன் தொடர்புபட்ட காதலையும் அதனோடு இணைந்த உணர்வுகளையும் அகம் எனலாம்.அகத்திணைக்குள் உள்ளடக்கப்படாத மரபுகளை புறம்சார் மரபுக்குள் நோக்க முடியும்.

ஆகம்சார் பொருள் மரபிற்கு அகநானூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், திருமுரு காற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை ஆகிய இலக்கியங்களை குறிப்பிடலாம்.

இவ்விலக்கியங்களை அகம் சார்பொருள் மரபுகளை மேல் வருமாறு வகைப் படுத்தலாம்.

**1. அன்பின் ஐந்திணை மரபுகள்**
**2. கைக்கிளை மரபுகள்**
**3. பெருந்திணை மரபுகள்**

அன்பின் ஐந்திணை என்பது ஐவ்வகை நிலங்களுக்குமான காதல் ஒழுக்கமாகும். ஐவகை நிலங்களாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியவற்றினைக் குறிப்பிடலாம்.

குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த பிரதேசமும் ஆகும். இவ்நிலத்திலே வாழ்ந்தவர்கள் குறவர்கள் இவர்களின் தொழில் திணைப்புலம் காத்தலும் வேட்டை யாடுதலும் ஆகும். இங்கு வேட்டையாடுதலுக்கு செல்லும் ஆணும் திணைபுல காவலுக்கு செல்லும் பெண்ணும் ஒருவரை ஒருவர் கண்ணால் கண்டு காதல் கொண்டு உறவாடி மகிழ்வர். இதனால் இவ் நிலத்திற்குரிய அகவுரி ஒழுக்கம் புணர்தல் எனப்படும்.

காடும் காடு சார்ந்த பிரதேசமும் முல்லை எனப்படும். இவ்நிலத்திலே வாழ்ந்த மக்கள் ஆயர்கள் ஆவார். இவர்களுடைய தொழில் ஆநிரைகளை மேய்த்தலாகும். இவ்நிலத்திலே எதிரிகள் ஊடுருவார்கள். இவ் ஊடுருவலை தடுக்கும் முகமாக பாசறைகள் அமைக்கப்படும். இப்பாசறைகளுக்கு முல்லை, நிலதலைவர்கள், காவல் கடமைக்கு சென்றவர்கள் இவ் வேளை தலைவி, தலைவனைப் பிரித்து இருப்பாள். எனவே இவ்நிலத்திற்கு அகவுரி ஒழுக்கம் இருத்தல் எனப்படும்.

வயலும் வயல் சார்ந்த பிரதேசமும் மருதம் எனப்படும். இவ்நிலத்திலே வாழ்ந்த மக்கள் உழவர்கள் ஆவார். இவர்களுடைய தொழில் விவசாயம் செய்தலாகும். இவ்நிலமானது சிறிய முயற்சிக்கும் பெரும் பயனளிக்கக்கூடிய நீர் வளம் கொண்ட பிரதேசமாகும். எனவே இவ்நிலத்து ஆடவர்களுக்கு அதிக அதிக ஓய்வு நேரம் கிடைத்தது. எனவே ஆடவர்கள் தமது ஓய்வு நேரங்களினை ஆடல்பாடல்களில் வல்லமகளிர் இல்லங்களிலே கழித்தனர் இதனால் தலைவியர் தம் தலைவனிடம் ஊடல் கொண்டிருப்பதால் இவ்நிலத்திற்குரிய அகவுரி ஒழுக்கம் ஊடல் எனப்படும்.

கடலும் கடல் சாரந்த பிரதேசமும் நெய்தல் எனப்படும். இவ்நிலத்திலே வாழ்ந்த மக்கள் பரதவர்கள் ஆவார். இவர்களுடைய தொழில் மீன் பிடித்தலும் உப்பு விளைத்தலும் ஆகும். இவ்நிலமானது காதல் கொள்வதற்கேற்ற வெண் மணற் குன்றுகளையும் உப்புகளி சோலைகளினை கொண்ட பிரதேசமாகும். திரும்பி வருதல் நிச்சயமற்ற இத்தொழிலே மாலை நேரமாகியும் தலைவன் திரும்பி வராவிடின் தலைவி தலைவனை எண்ணி எண்ணி ஏங்கி இரங்குவாள். எனவே இவ்நிலத்திற்குரிய அபவுரி ஒழுக்கம் இரங்கல் எனப்படும்.

மணலும் மணல் சாரந்த பிரதேசமும் பாலை எனப்படும். இவ்நிலத்திலே வாழ்ந்த மக்கள் மறவர்கள் ஆவார்கள். இவர்களுடைய தொழில் ஆறலைத்தரும் சூறையாடுதலும் ஆகும். இவர்கள் தலைவியை பிரித்து செல்வார்கள் எனவே இவ்நிலத்திற்குரிய அகவுரி ஒழுக்கம் பிரிதல் எனப்படும்.

சங்கால அகத்திணை மரபிலே அருகி காணப்பட்ட அம்சமாக கைக்கிளை விளங்குகின்றது. கைக்கிளை என்பத ஒரு தலைக்காதல். தலைவன் / தலைவியடத்து ஒருவரிடத்தில் மாத்திரம் ஏற்படும் காதல் ஒழுக்கமாகும். சங்ககால கைக்கிளை மரபுகளை நுணுக்கமாக ஆய்வு செய்யும் போது

1. **காட்சி, ஐயம், தெளிவு, தேறல் ஆகிய நான்கு நிலைகளையும் அடைதல்.**
2. **கொல்லேறு தழுவதினால் நிகழும் மணவினைகள்.**
3. **பருவமடையாத பேதைப்பெண்ணினைக் கண்டு அவன் மீது காதல் கொண்டு அவளை அடையப் பெறாத விடத்து அவளைப் பற்றி சொல்லிச் சொல்லிப் புலம்புதல்.**

சங்ககாலத்திலே அருகி காணப்பபட்ட அம்சமாக பெருந்திணை காணப்பட்டது. பெருந்திணை என்பது பொருந்தாமக்காமமாகும். தலைவன் ஒருத்தன் தலைவியின் மீது காமத்தவனாகி அவளை பெறாத விடத்து வரைபாய்தல், மடலேறுதல் மூலம் தமது உயிரினை மாய்த்துக் கொள்ளும் அம்சங்கள் அதிகளவு இடம்பெற்றது.

சங்ககாலத்திலே தலைவன் தலைவிக்கிடையிலே பெயர்சூட்டி அழைக்கும் முறைகள் நிலவவில்லை.

*மக்கள் நுதலிய அகணைந்திணையும்*
*சூட்டியொருவர் பெயர் கொளப்பெறார்*

என்பதற்கமைய பெயர் சூட்டி அழைக்கும் முறைகள் காணப்படவில்லை.

*யாயும் ஞாயும் யாரகியரோ*
*எந்தையும் உந்தையும் எம்முறைக்கேளீர்*
*ஞானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புல பெயநீர் போல்*
*அன்புடை நெஞ்சம் தான் கலந்தனவே*

என்ற பாடலினூடாக அறிய முடிகின்றது. சங்ககால அகத்தினை மரபிலே முதல், கரு, உரி பொருட்களினது செல்வாக்கினை காணப்பட்டது. காதல் ஒழுக்கம் நிகழ்வதற்கு அடிப்படையாய் அமையும். நிலமும் பொழுதும் முதற் பொருட்களாய் கொள்ளப்பட்டது. இக்காலத்தில் காதல் ஒழுக்கம் நிகழுகின்ற சூழலமைவுகள் கருப்பொருட்களாய் மளிர்ந்தது. உரிபொருட்களாக ஐவகை நிலங்களுக்குமான அகப்பொருட்கள் அமைகின்றன.

**ஞா. கஜனி**
A/L (2011)

# உள்ளங்கையில் உலகம்

மனிதராகப் பிறந்த அனைவருக்குமே உலகத்தின் பல பகதிகளுக்கும் சென்று வர ஆவல் இருப்பது நிச்சயம். ஆனால் குடும்பச் சூழலில் சிக்கித் தவிக்கும் பெரும் பாலானோருக்கு இந்த வாய்ப்புக் கிடைக்குமா என்பது சந்தேகமே.

பணம் படைத்தவர்கள் வெளிநாட்டுக்குச் சுற்றுலா சென்று ஆனந்தம் அடையும் வாய்ப்புக்கள் அதிகம். ஏழை மனிதனோ தன் கிராமச் சுற்றுப்புறத்தை விட்டு அதிகதூரம் செல்லாமலே வாழ வேண்டிய நிலையும் உள்ளது. நடுத்தர மக்கள் இரண்டுக்கும் நடுவில் சிக்கித் தவிப்பவர்கள், சம்பாதிக்கும் பணம் அன்றாட வாழ்வின் தேவைகளுக்கே செலவாகிவிடும். இந்நிலையில் இவர்களுக்கு இத்தகைய வாய்ப்புக்கள் கிடைப்பது அரிது. நடுத்தர மக்கள் அதிகம் வாழும் நாடுகளில் இலங்கையும் ஒன்று இந்நடுத்தர மக்களின் அறிவு மற்றும் சுதந்திர தாகத்தைத் தீர்க்க வந்திருப்பதே இணையம் என்று சொன்னால் மிகையாகாது.

உலகம் முழுவதிலும் கணனிகளை ஒரு திரையின் பின்னால் இணைத்து அவற்றுக்குள் கணக்கிட முடியாத அளவுக்கு இடம் வைத்து கோடிக்கணக்கான செய்தித்துளிகளைப் பார்ப்பதற்கு வசதி செய்துள்ள ஒரு கண்ணுக்குத் தெரியாத வலைப்பின்னலே இணையம். இணையம் செய்படுவதைச் சிறிது விளக்கமாகப் பார்ப்போம்.

நீங்கள் ஒரு கணனி முன் உட்காந்திருக்கிறீர்கள் அதில் ஒரு திரை இருக்கிறது உங்கள் கணனியில் இணைக்கப்பட்டிருக்கும் தொலைபேசி மூலம் இணையம் இணைப்பு வழங்குபவரைத் தொடர்பு கொள்கிறீர்கள். தொடர்புக்கு நீங்கள் பணம் கட்டியிருக்க வேண்டியது அவசியம்.

அந்தத் திரைக்குள் அந்தரத்திலே கண்ணுக்கத் தெரியாத நிலையில் கணக்கிடங்கா இடங்கள் இலட்சக்கணக்கான தகவல் பக்கங்கள் மற்றும் கோடான கோடி செய்திக் குறிப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன. குழந்தையிடம் அன்பாக இருப்பது எப்படி என்பதில் ஆரம்பித்து, அணுகுண்டு தயாரிப்பது எப்படி என்பது வரை எழுத்துக்களாகவும், எண்களாகவும், பட்டங்களாகவும், ஒலிப்பேழைகளாகவும், ஒளிச்சுருள்களாகவும் இத்தகவல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சுருங்கச் சொன்னால் வற்றாத தகவல் சுரங்கங்களின் தொகுப்பே இணையம்.

ஆயிரம் ஆயிரம் நூல்களைச் சேர்த்தாலும் இந்த நிழல்வெளி அற்புதமாயா ஜாலகத்துக்கு இணையாகாது. பல இலட்சக்கணக்கான இணைய இரசிகர்கள் தாங்களுக்குத் தெரிந்தவற்றை ஏதாவது ஒரு பிரிவில் அனுதினமும் இணைத்துக் கொண்டே இருக்கிறார்கள் ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான புதிய செய்திகள் இடம்பெற்று வருகின்றன. இவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றித் தெரிய வேண்டுமானால் கணனி மூலமே தொடர்ப கொள்ள முடியும்.

உங்கள் புகைப்படம் , குடும்பப்புகைப்படம் ஆகியவற்றை இணைத்து அனுப்பவும் இயலும் உங்களுக்கு வரும் கடிதநகல்களையும் அவருக்கு அனுப்பலாம்

நீங்கள் விரும்பினால் இவை அனைத்தும் கட்டணம் இல்லாமலேயே இணைய வசதி நம்மிடம்இல்லாவிட்டாலும் நிறைய கடைக்காரர்கள் (Cyber cofes) அதற்கு உதவுவார்கள்.

ஈமெயில் சேவை மூலம் இக்கடிதம் பரிமாற்றம் நிகழ்கிறது. உங்களுக்கென்று ஒரு பெயரும் முகவரியும் இருப்பது போல் இதற்கும் ஒரு முகவரியும் பெயரும் பதிவு செய்து கொள்ள வேண்டும். யாவஹீ (Yahoo) ரொக்கட்மெட் (Rocktmait) ; ஹொட்மெயில (Hotmail), மெயில் சிட்டி (Mail city) பிக்புட் (Bigfoot) என்ற எண்ணற்ற நிறுவனங்கள் இந்த ஈமெயில் சேவையை இலவசமாகத் தருகின்றன.

இந்த ஈமெயில் சேவையால் மாணவர்கள் தங்களுடைய பாடத்தில் வரும் சந்தேகங்களை உலகம் முழுவதிலும் உள்ள அறிஞர்களிடம் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம். சகமாணவர்களிடம் கலந்துரையாடலாம் தங்களின் மேற்படிப்புக்குத் தேவையான விபரங்களையும்ஒப்புதல்களையும் குறிப்பிட்ட பல்கலைக்கழகங்களில் இருந்து தகவல் தேடும் இயந்திரங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம். பல்வேறுநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்கள் வழங்கும் படிப்புக்கள் மற்றும் பாடத்திட்டங்கள் குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

இத்தகவல் தேடும் இயந்திரங்கள் (Seargh Engines) மூலம் உங்கள் கட்டுரைகளுக்குத் தேவையான புகைப்படங்களையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் அல்லது பிரின்ட் எடுத்துக் கொள்ளலாம். உங்கள் கட்டுரைகளுக்குத் தேவையான புகைப்படங்களையும் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். வேலைதேடும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இணையம் ஒரு வரப்பிரசாதமாகும். பல முகவரிகளில் வேலை வாய்ப்புச்செய்திகள் ஆயிரக்கணக்கில் இடம்பெறுகின்றன.

தகவல்களைத் தேடி அறிந்து கொள்ள உதவுபவை தகவல் தேடும் இயந்திரங்கள் நமக்குக் கிரிக்கட் பற்றித் தெரிய வேண்டுமானால் இந்த இயந்திரத்தின் பக்கத்தை எடுத்துத் தேடும் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும், நமக்குத் தகவல் தெரிய வேண்டியதை டைப் அடிக்க வேண்டும் பின்னர் அதற்குத் பக்கத்தில் தேடும் என்ற பட்டனைத் தட்டினால் போடும் கிரிக்கட் என்ற வார்த்தையுடன் இணையத்தில் இருக்கும் அனைத்துப் பக்கங்களின் முகவரியையும் (URL) வரிசை அனைத்துப் பக்கங்களின் முகவரியையும் (URL) வரிசையை காண்பிக்கும் URL என்பது Unifoim Prsouie Locotor

இன்றைய விஞ்ஞானயுகத்தில் உலகம் ஒரு கிராமமாகச்சுருங்கி விட்டது இந்நிலையில் இணையம் மூலம் உலகமக்கள் அனைவருடனும் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக்கிட்டியுள்ளது. இணையத்தின் சாதனை வியப்பதற்கு அரியதே.

அ. சரண்யா
(A/L) - 2011
A. C. C.

# ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம்

நீளமாய்ப் பரந்து நிலமும் வெளியும் நீலக்கடலும் மலையும் மஞ்சுமாய் வியாபித்திருக்கிறது. அகிலம் ஆயினும் ஆற்றல் மிக்க மனித குலத்தினிடத்தே அது கைக்குள் அடங்கியதாய், மனிதனின் காலடியில் காத்திருக்கிறது. அவ்வாறெனின் இந்நிகழ்வு புவியிலில் விளைவிக்கப்பட சடத்துவ மாற்றத்தினால் நிகழ்ந்ததா? இல்லை! அறிவியலில் ஏற்பட்ட அசுர வளர்ச்சியினால் ஏற்பட்ட விளைவு இது! கால் நொடிப்பொழுதில் கணக்கில்லா தூரம் கடந்து தொடர்பு கொள்ளும் வல்லமை விளைந்த அற்புதம் இஃது, இரு மனிதர்களிடையே கருத்துக்களைப் பரிமாறுவதற்காக பரிணமித்த தொடர்பு கொள்ளலானது இன்று எல்லையற்று வியாபித்து நிற்கின்றது. ஆயினும் இத்தொடர்பாடலின் அத்திவாரமாக அடிநாதமாக ஆங்கிமொழியே விளங்குகின்றது.

நம்மூதாதையரின் பரிணாமத்தோடு நூற்றுக்கணக்கான உலகியல் மொழிகள் தோற்றம் பெற்றன. ஆயினும் அவற்றில் சில வழக்கிழந்தன. சில பேச்சுமொழியாக மட்டுமே வழங்கிவந்தன சில மூலம் பிறந்து திரிந்து வளர்ந்தன சிலமொழிகள் மட்டும் எழுத்திலும் பேச்சிலும் இலக்கண வரையறைக்குட்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வாறான என்றும் வாழ்கின்ற மொழிகளில் மணிமுடிசூடி மனிதகுலத்தின் பொதுமொழியாக விளங்குவது ஆங்கில மொழியேயாகும்.

ஆங்கில மொழியானது இன்றைய உலகில் அதிமுக்கியமாக தொடர்பாடல் வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. தொடர்பாடல் என்னும் பதமானது தன்னகத்தே பாரிய பொருளையும் பல்வேறுவிதமான செயற்பாடுகளையும் கொண்டிருக்கின்றது. இச்செயற்பாடுகள் யாவற்றுக்கும் முகங்கொடுக்கின்ற ஆங்கிலமொழியின் முக்கியத்து வத்தைச் சற்றே ஆராய்வோம்.

பூமியானது மனிதரால் எல்லையிடப்பட்டு நாடு எனும் அலகாக வகுக்கப் பட்டுள்ளது நாட்டுக்கு நாடு சில வேளைகளில் ஒருநாட்டின் இருவேறு பிரதேசங்களில் கூட வாழும் மக்கள் பல்வேறு இயல்புகளால் வேறுபடுத்தப் படுகின்றனர் இவ்வேறுபாட்டில் பிரதானமானது பயன்படுத்தப்படும் மொழியில் காணப்படும் பாகுபாடாகும். தன்னை உணரச்செய்து தானும் மற்றோரை உணர்கின்ற திறனையும் வழஙுங்வது மொழியாகும். தனிமையாக்கப்படும் தன்மையை நீக்கி வெவ்வேறு மொழியாளரை இணைக்கின்ற பாலமாய் ஆங்கில மொழி உதவுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பல்வேறு காரணங்களுக்காகத் தேசங்கள் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. எல்லைப்படுத்தப்பட்ட வளங்களும் வெவ்வேறுபட்ட அறிவியல் ஆற்றலும் தங்கி வாழ்தலைத் தீர்மானிக்கின்றன. ஆதலால்

தேசங்களிடையே ஏற்படும் உறவுகளை வளர்க்கின்ற உற்றதுணையாக ஆங்கிலம் விளங்குகின்றது.

ஆதிநாள்களில் நம்முன்னோர் முயன்று பெற்ற அறிவுப் பொக்கிசங்கள் மொழியென்னும் சிறையுள் இட்டுப் பூட்டப்பட்டிருந்தன. அந்த அறிவுச்செல்வத்தை பயன்படுத்தும் ஆற்றலை அம்மொழியின் சிறப்பை உடையவர்கள் மட்டுமே பெற்றிருந்தனர். இவ்விடரினை நீக்கி எல்லோரும் அறிவினைப் பெறுவற்கு ஆங்கில மொழிஉதவியது, உதவுகின்றது. இனியும் உதவும் அறிவியலின் படைப்புக்கள் பெரும்பாலும் ஆங்கிலமொழிமூலமே மக்களிடையே பரவியது ஏனெனில் உலகின் மூலை முடுக்குகளில் ஊடுருவி காணப்படுவது ஆங்கிலமொழியாகும்.

இதற்குச் சான்றாக திருக்குறள் விளங்குகின்றது இது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டதைக் கூறலாம் அறிவியல் நூல்கள் ஆங்கிலத்திலிருந்து வேறுமொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டதைக் கூறலாம். இவ்வாறாக ஆங்கிலம் அன்பை வளர்க்கின்றது அறிவைப் பெருக்கின்றது "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற பண்பை வளர்க்கின்றது மேதை மொழியெனப் பலராலும் போற்றப்படுகின்ற ஆங்கிலம் அளிக்கின்ற சேவைகள் மிகப்பல.

இவ்வாறு பல அருமை பெருமைகளை உடைய ஆங்கிலமொழியைப் பயில்வதற்கு சர்வதேசம் முனைகின்றது. இதன்படியே எங்கள் நாடும் ஆங்கில மொழிப்பாடவிதானம் ஆக்கியுள்ளது. குறித்த தேசத்துக்கு மட்டுமுரிய மொழியானது கிணற்று நீரை ஒத்தது அதாவது தேவையை நிறைப்பது ஆயினும் அதன் உள்ளடக்கம் குறுகியதேயாகும். ஆனால் ஆங்கிலமொழியோ பொங்கிப்பாய்கின்ற நதியொன்றின் உத்வேகத்துடன் நானிலத்தை அளந்து வருகின்றது. நன்மைபல விளைக்கின்றது. ஆதலால் ஆங்கிலக் கல்வியின் அளப்பரிய நன்மையை உணர்ந்து அதனைப் போற்றிக் கற்போமாக!

**சி. அனுதரன்**

# 21ஆம் நூற்றாண்டில் கம்பியூட்டர் யுகம்

இன்று எந்தவொரு வகையான தொழிலை எடுத்தாலும் அத்தோடு கம்பியூட்டரின் தொடர்பு கட்டாயமாக இணைந்து உள்ளது. பல மனிதர்கள் பல மணிநேர முயற்சியின் பின் செய்து முடிக்கின்ற வேலையை குறுகிய நேரத்தில் ஒருவர் மாத்திரம் கம்பியூட்டரை. இயக்குவதன் மூலம் சோம்பல் இல்லாது செய்து முடிக்கக் கூடியதாக உள்ளது. கம்பியூட்டர் யுகமானது 1830ஆம் அண்டு முதலாவது கம்பியூட்டர் கருவியை சார்ள்ஸ் பவேஜ் கண்டுபிடித்ததில் இருந்து ஆரம்பமானதாகும். அன்றிலிருந்து இன்றுவரை கம்பியூட்டரின் வளர்ச்சிக் காலத்தை நான்கு தலைமுறையாக வகுத்துள்ளார்கள்.

இதில் முதலாவது கம்பியூட்டர் தலைமுறையானது 1944ஆம் ஆண்டுக் காலத்தை அடிப்படையாக கொண்டதாகும். இந்த தலைமுறையில் கண்டுபிடிக்கப் பட்ட கம்பியூட்டர் உருவத்தில் பெரியதாகவும் வால்ஸ் முறையினை கொண்டதாகவும் உள்ளது. இக்கம்பியூட்டர் அதிகளவு மின்சாரத்தை செலவாக்கியதொடு நீண்ட நேரத்தின் பின்பே முடிவை அறிய முடியும். அத்தோடு இதனது செல்வம் மிகக் கூடியதாகும். எனவே தான் மேற்கூறிய குறைகளை எல்லாம் களைந்து மனிதனைப் போல சிந்திக்கும் ஆற்றலும் செயல்திறனும் கொண்ட கம்பியூட்டரைக் கண்டு பிடிக்கும் எண்ணத்தோடு அடுத்த கம்பியூட்டரின் இரண்டாவது தலைமுறை ஆரம்பமானது. இத்தரமான முறையிலும் ஒரளவு சிறந்த கம்பியூட்டர் கண்டு பிடிக்கப்பட்டன போதும் மூன்றாம், நான்காம் தலைமுறையில் நவீன செயற்பாடுமிக்க கம்பியூட்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்கம்பியூட்டரின் செயற்பாடுகள் அளப் பரியன.

உதாரணமாக இன்று எந்தவொரு சாதாரண கடையிலும் சிட்டைகள், ஆவணங்கள், காசோலைகள் தயாரிப்பது, ஒரு நோயாளியின் நோயை கண்டுபிடிப்பது, நோயாளி பற்றிய தகவல்கள் சேகரித்து வைப்பது அதாவது ஒருவர் அவதிப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டால் அவருடைய வருத்தம் என்ன எப்படிப்பட்ட மருந்துகள் பாவிக்கப்பட்டன என்பவற்றையெல்லாம் ஒரு நொடிப் பொழுதில் கம்பியூட்டர் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இத்தோடு ஆகாயவிமான பதிவு மேற்கொள்ளல், புள்ளி விபரதகவல்கள் சேகரித்தல், பரீட்சைமுடிவுகளை தயாரித்தல், மிகவிரைவாக கணக்குகள் தயாரித்தல் எனப்பலவகையான செயற்பாடுகளோடு இணைந்துள்ளது கம்பியூட்டராகும்.

இத்தோடு "றோபோ மனிதன்" ஹோட்டல்களில் பணிவிடை செய்தல், தீ விபத்து நடைபெறும் இடங்களில் தீயின் நடுவில் நின்று தீயணைக்கும் பணி ஆகியவற்றையும் மேற்கொள்கின்றது. இத்தகைய முன்னேற்றங்களை கண்டபோதும் கம்பியூட்டர் என்பது சிந்தித்துச் செயலாற்றும் பணியை மேற் கொள்வதே ஐந்தாவது தலை முறையின் நோக்கம் ஆகும். 21ஆம் நூற்றாண்டை கம்பியூட்டர் யுகம் எனலாம். 1985ஆம் ஆண்டு ஜப்பானிய அரசு 5ஆவது தலைமுறை கம்பியூட்டர் எப்படியான செயற்பாடுகளை தன்னக்தே கொண் டிருத்தல் வேண்டும் என கணிப்பதற்கு ஒரு குழுவை தெரிவு செய்துள்ளது. இருந்த போதும் 21ஆம் நூற்றாண்டின் கம்பியூட்டர் சிறந்த செயற்பாடுகளை செய்யும் கருவியாக வெளிவரும் என்பதில் ஐயமில்லை.

முதலாவது தலைமுறையில் பாவிக்கப்பட்ட "தெர்மோனிவேல்ஸ்ஸிம்" இரண்டாவது தலைமுறை "ரான்சிஸ்டரும்" மூன்றாம் தலைமுறை" "சேர்கிட்டியும்" கொண்ட கம்பியூட்டர்கள் இயங்குகின்றன. நான்காம் தலைமுறை மிகநுட்பமான கம்பியூட்டராகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

21ஆம் நூற்றாண்டின் கம்பியூட்டரானது செயற்கையான பகுத்தறிவு கொண்டதாகவும் பேச, பார்க்க, நடக்கக் கூடியதாகவும் அமைய வேண்டும். தற்போது போர்காலங்களில் பாவிக்கப்படும் கம்பியூட்டரானது குறிப்பிட்ட போர் விமானங்கள் தடுக்கப்பட்ட பிரதேசங்களில் விமானம் நுழைந்தால் உடன் சுட்டு வீழுகின்றது. ஆனால் ஐந்தாம் தலைமுறை கம்பியூட்டரானது எந்த நாட்டுவிமானம் என்ன காரணத்தோடு வந்துள்ளது என்பவற்றையேல்லாம் ஆராய்ந்து முடிவு எடுக்கக் கூடியதாக அமைய வேண்டும் என்பதே குறிக்கோளாகும்.

இந்த 21ஆம் நூற்றாண்டின் கம்பியூட்டரின் மொழியானது "புறொலொங்" எனும் மொழியாகும். இம்மொழியை 1970இல் இருந்து யூனிவர்ஸ்டிபீப்மார் ஷல்வ்யம், மெசின் இன்ரெலிசன் புனிட் எடின்பரோ யூலர்சிட்டியம் அறிமுகப் படுத்தியுள்ளன.

இக்கம்பியூட்டரின் வருகை பல நல்ல பலன்களை கொடுத்தபோதும் தானே சிந்திக்கும் செயலாற்றும் தன்மை கொண்டதாக அமைந்தால் அவை மனித னிற்குஎதிராக செயற்படுமானால் அஃது மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தும்.

**இ. லக்ஸகாந்**

**தரம் 11C**

# நினைவுகள்

**– சிறுகதை**

காலை நேர இனிமை வேளையில் சூரியன் குழந்தைப் பருவமாக தவழ்ந்து எட்டிப்பிடித்து மெல்லத் தன் புன்சிரிப்பினை உதிர்க்கின்ற வேளையில் பனித்துளிகள் உருகி இலைத் துளிர்களின் நுனிகளினால் சிந்திக் கொண்டிருக்கும் உன்னதமான வேளையில் கடற்கரை வெண்மணலில் மீனவத் தொழிலாளர்கள் உப்புக்காற்றில் உலரந்து போன உரமேறிய உடம்புக்கட்டுடன் உற்சாகமாக வேலை செய்து கொண்டிருக்கும் காட்சியையும் கடலன்னையினையும் கொஞ்சம் தள்ளி இருந்து ஆடம்பரக்கார் ஒன்றின் அருகிலிருந்தவாறு இருகண்களும் மிகவும் துல்லியமாக படம் பிடித்துக் கொண்டிருந்தன. அன்றைய நாட்கள் பாடசாலை நாட்கள் ஆகையால் வெள்ளை வெளேர் என சின்னஞ்சிறார்கள் பள்ளிக்கு அவ்வழியே துள்ளிக்குதித்து வருவதைகண்ட அவனது மனம் சடாரென முன்னைய நினைவுகளுடன் முட்டி மோதியது. கண்விழித்ததும் கூரையின் ஓட்டை வழியே தெரியும் வானம் வாடைக்காற்றை தாங்க முடியாத போர்வை அடுப்பினை விறாண்டும் செல்லப்பூனை அதற்கும் நடுவிலே படிப்பதற்கு குறைவில்லாத புத்தகங்களும் என பழைய நினைவுகள் பாரம் கூடியனவாக பளிச்சிட்டு மோதியது. அதை நினைத்ததும் அவன் விழிகளில் கண்ணீர் ததும்பி நிற்க அவன் கண்முன் பழைய நினைவுகள் படமாக விரிந்தன.

இயற்கை எழிலும் வல்லிபுரத்தானின் தெய்வீக சக்தியும் இணைந்த பருத்தித்துறையில் உள்ள பின்தங்கிய குடத்தனை என்னும் கிராமத்தில் மிகவும் அமைதியாகவும் ஆனால் வறுமையிலும் ஆனந்தமான வாழ்கையின்னை ஓட்டிக் கொண்டிருந்தது சிவநாதன் சிவபதி தம்பதியினரின் குடும்பம் அவர்களின் ஆனந்தத்தை அங்கீகரிக்கும் வண்ணம் முதலில் அவர்களின் மடியிலே தவழ்ந்தவன் குமார். அவனை அடுத்து இந்துவும் இனிமையான கனியாக அவர்களின் கரங்களில் தவழ்ந்தாள். அவர்கள் இருவரும் இல்லற வாழ்வின் இனிமையை உணர்த்தினார்கள். அந்தக் கிராமமே வியக்கும் வகையில் மிகவும் அறிவும் ஆற்றலும் மிக்கவனாக குமார் வளர்ந்து வந்தான். தனது பெற்றோரின் எதிர்பார்ப்பை இன்னும் அதிகமாக்கினான் அவனின் வாழ்வையே அருமைத் தங்கையும் பின்பற்றி வந்தாள். அவர்களுடைய இவ்வளவு வளர்ச்சிக்கும் அறிவுக்கும் அரும்பாடுபட்டு தம்மைப்போல் தமது பிள்ளைகளும் குலத்தொழிலான மீனவத் தொழிலை பிற்காலத்தில் செய்யாமல் வசதியாய் வாழவேண்டுமென தம்மை வருத்தி படிப்பிற்காக செலவிட்டார். சிவநாதன். உறுதுணையாய் இருந்தாள் சிவபதி. அவர்களுடைய தொழிலில் தம் தந்தை கஷ்டப்படக்கூடாதென குமாரும் தன்தந்தையுடன் சேர்ந்து தொழிலுக்கு செல்வது வழக்கம். தொழிலுக்கு சென்றும் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் மிகவும் கஷ்டப்பட்டு படிப்பிலேயே கவனத்தை செலுத்தினான். இயல்பிலேயே குமார் கெட்டிக்காரன் தான். அத்துடன் அவனின் முயற்சியும் ஆர்வமும் சேர்ந்துகொள்ள படிப்பிலே மிகவும் முன்னிலையில் யாவரும் பார்த்து ஆச்சரியப்படும் வகையில்

முன்னெறினான். கால ஓட்டத்தின் காரணமாக குமார் ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சையை எதிர்கொண்டு மிகவும் சிறந்த பெறுபேற்றை பெற்று. உயர்தரத்தில் கணிதப் பிரிவில் பயின்று, பல்கலைக் கழகத்திற்கு தெரிவானான். அப்போது தாய் தந்தையர் உட்பட கிராமமக்கள் அனைவரும் மிகவும் சந்தோஷப்பட்டனர். கடற் காற்று உப்பு உரமேறிய சிவநாதனின் வாழ்க்கையிலும் கிராம மக்களிடையேயும் அச்சந்தோசம் நீண்டநாள் நிலைக்கவில்லை. ஏனோ கடலன்னைக்கு பொறுக்க வில்லை. அமைதியாய் இருந்த கிராமம் கடலன்னையின் சுனாமிப்பிள்ளையினால் பயங்கரமாக கடித்துக்குதறப்பட்டது. ஏனோ அவ் பயங்கரகோரத்தில் அதிர்ஷ்ட வசமாக உயிர்தம்பினான் குமார். அன்றுகுமார் கண்டகாட்சி அவனது சுமையை அதிகரிக்க செய்து மனதில் எரிமலையாய் வெடித்தது. ஒற்றுமையை உயிராகக் கொண்டு பாசத்தை ஊட்டி வளர்த்தஅக்கிராமம் சுனாமியினால் சிதறுண்டது. பிள்ளையை கையில் பிடித்தபடி மனைவியை தேடிய கணவனும் தாயைத்தேடிய பச்சிளங்குழந்தையும், சாகும் தறுவாயில் மரண ஓலங்களும் யார் யாரை பார்ப்பது என்று தெரியாத நிலை, யாரை யாரும் தேட முடியாதபடி கடல்நீரின் தாக்கம் தொடர்ந்தது. அப்பப்பா.........கடல்நீரின் தாக்கத்தால் அக்கிராமமே அல்லோல கல்லோலப்பட்டது. கண்ட முகங்கள், பாசத்துடன் பரிவூட்டிய முகங்கள், சடலமாய் கிடக்க அதற்கு நடுவிலே ஒருவரையொருவர் கட்டி அணைத்தபடி நிரந்தரமாய் உறங்கிக்கொண்டிருந்த அன்புப்பெற்றோரையும் ஆசைத் தங்கையையும் கண்டவனுக்கு ஆயிரம் எரிமலைகள் ஒன்றாய் சேர்ந்து வெடித்தது போலிருந்தது தன்னுடைய குடும்பத்திற்கு ஈமச்சடங்குகளை செய்து தன் கடமையை நிறை வேற்றினான் குமார். காலங்கள் யாருக்கும் காத்திராமல் தன் கடமையைச் செய்ய தன் முயற்சியினால் வேலை செய்து பல்கலைக்கழகத்தில் சிறப்புப்பட்டம் பெற்று பொறியியலாளராக வெளியேறி இன்று பிரபலம் வாய்ந்த பொறியியலாளராக குடத்தனையின் பெயரை தக்கவைத்துக் கொண்டிருக்கிறான். இன்று அவனின் புகழைக்காண் பெற்றோரும், அன்புத்தங்கையும் இல்லையே அவனின் முயற்சி யினால் கிடைத்த விடியல்தான் இது.

இன்று தன்குடும்பம் நிரந்தர உறக்கம் கொண்ட அதே இடத்தில் அமர்ந்திருந்த குமார் கடலன்னையை வெறித்துப் பார்த்தபடி இருந்தான். குமாரின் எல்லைகடந்த சிந்தனையை அவ்வூர்ப் பெரியவர் குசலம் விசாரித்தவாறு கலைத்தார். கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்து நீளக்காற்சட்டையின் பின்புறமிருந்த வெண்மணலைத் தட்டியவாறு எழுந்து பதிலுக்கு குசலம் விசாரித்து உரையாடி விட்டு தன்னுடைய காரில் புறப்பட்டுச் செல்ல அவனுடைய பழைய வாழ்க்கையினையும் இன்று குமாரால் தம்முடைய ஊரை நாடறிய வைத்த அயராத உழைப்பையும் பெருமிதத்தோடு எண்ணியவாறு அந்த அழகிய கார் சென்று மறையும் வரை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் அந்தப் பெரியவர்.

(யாவும் கற்பனை)

அ. கபிலவேணி,
தரம் 9C.

# நான் ஒரு எழுத்தாளரானால்

மனிதராகப் பிறந்தோர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் குறிக்கோள் உண்டு. அவர் தம் உள்ளத்திலுள்ள உணர்வுகளைப் பல்வேறு வழிகளில் வெளிக்காட்டுபவர். இது அவர்களது தனித்தன்மையைப் பொறுத்தது. என்னைப் பொறுத்தவரையில் நான் ஒரு எழுத்தாளனாக வேண்டும் என்று விரும்புகின்றேன். இதுவே என் குறிக் கோளாகும்.

இன்று சமுதாயத்தில் பொய்மையும் பித்தலாட்டமும் தலைதூக்கியுள்ளது. சமூக விரோதச்செயல்கள் அதிகரித்து விட்டன. இச்செயல்களில் ஈடுபடுவோர் நல்லவர் போல வேடமிட்டு நாட்டை நாசமாக்கிறார்கள். இத்தகைய சமூக விரோதிகள் அடிமட்டத்திலிருந்து உயரமட்டம்வரை ஊடுருவியுள்ளனர். இவர்களது போலிவேடங்கள் அம்பலப்படுத்தவும் சமூகத்தில் புரையோடிப்போயிருக்கும் மூடப்பழக்க வழக்கங்களை அகற்றவும் எனது பேனாவைப் பயன்படுத்த விரும்பு கின்றேன்.

இயல்பாகவே என்னிடத்தில் எழுத்தாற்றலைப் பயன்படுத்தி கதை, கட்டுரை, கவிதைகள் பல படைத்திட விரும்புகின்றேன். இன்றைய சூழ்நிலையில் சமூகத்திற்கும் நாட்டுக்கும் நான் ஆற்றவிருக்கும் பணியாக இதனைக் கருதுகின்றேன்.

துப்பாக்கி முனையிலும் பேனாமுனைவலிமை வாய்ந்தது என்பர் சரித்திர ஏடுகளைப்புரட்டினால் இதற்கு ஆதாரங்கள் பலவற்றைக் காணலாம் எழுத்தாளன் சமூகத்தின் கண்ணாடி போன்றவன். சமூகத்தின் பிரச்சனைகளை உள்ளதை உள்ளபடி வெளிக்கொண்டும் ஆற்றல் படைத்தவன். அவன் சமூகத்தின் வழிகாட்டி எழுத்தாளன் மக்களின் உணர்வுகளைத் தன் படைப்புக்களின் மூலம் எடுத்துக்காட்டுபவன். அவன் ஆட்சிப்பீடத்திற்கோ, அராஜகங்களுக்கோ, அஞ்சுபவனல்லன் உள்ளதை உள்ளபடி எடுத்துக்காட்டும் ஆற்றல் வாய்ந்தவன். பணத்துக்காகவோ, பதவிக்காகவோ விலைபோடு பவனல்லன் அத்தகைய பண்புகள் கொண்டவனே உண்மையான எழுத்தாளன் ஆவான்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்று இனப்பிரச்சினை முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இப்பிரச்சனையின் உண்மைநிலையினை எடுத்துக் காட்டச் சமாதான முறையில் இதனைத் தீர்த்து வைக்கும் பெரும் பொறுப்பு அரசியல் தலைவர்களை மட்டுமன்றி எழுத்தாளர்களையும் பெரிதும் சார்ந்துள்ளது. ஒரு சில எழுத்தாளர்கள் பேரினவாதிகளுக்குச் சார்பாக எரியும் நெருப்பில்எண்ணெய்

வார்க்கும் வகையில் இன பேதங்களைத் தூண்டும் முறையில் தங்கள் பேனாவைப் பயன்படுத்தி வருகின்றனர். இது மிகவும் வேதனைக்குரியது. இந்நிலையில் நாட்டு மக்களுக்கு உண்மைநிலையினை எடுத்துக்கூறும் வகையில் எழுத்தாளன் என்ற முறையில் எனது பங்களிப்பைச் சிறப்புற ஆற்றுவேன். இனி ஒற்றுமையை வளர்க்கும் வகையில் கவிதைகள், கட்டுரைகள், வலியுறத்துவதுடன். இன ஒற்றுமையைக் கெடுப்போரின் இந்தரங்க நோக்கங்களையும் அம்பலப்படுத்துவேன்.

சமூகத்தில் இன்று தலைதூக்கி நிற்கும் சீதனப் பிரச்சனை, சாதிவேறுபாடு, சமயச்சச்சரவுகள், போதைவஸ்துப்பாவனைகள் போன்றவற்றால் விளையும் இன்னல்கள் எனது படைப்புக்கள் மூலம் வெளிக்காட்டுவேன். பத்திரிகைகளில் அவற்றைப்படிப்போர் ஓரளவுக்காவது இவற்றைக் களைத்து சீர்பெற வழிபிறக்குமென நம்புகின்றேன்.

நான் எழுத்தாளனாகப் பிரபலம் பெற்றதும் பிரசுரகர்த்தர்களின் உதவியுடன் எனது படைப்புக்களை நூல்களாக வெளியிடுவேன். அவற்றை வாசிக்கும் மக்கள் மத்தியில் எனது எண்ணக்கருத்துக்கள் ஊடுருவி வழிபிறக்கும். இதன் மூலம் சமூகத்தில் ஒருதாக்கம் உருவாகும். சமூகமறுமலர்ச்சிக்கு அத்தாக்கம் செல்வாக்குச் செலுத்தும் நிலை உருவாகும். கருத்தரங்குகளிலும் கூட்டங்களிலும் எனது படைப்புக்கள் பற்றி விமர்சனங்கள் எழும் பலரும் இதுபற்றிக் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வர். இதன் பயனாக எனது எண்ணக்கருத்துக்கள் சமூகத்தின் எழுச்சிக்கு உதவுமெனக் கருதுகின்றேன்.

அரைத்த மாவையே திருப்பி அரைக்கும் வகையில் இல்லாமல் என் கருத்துக்களைப் புதிய முறையில் வெளியிடுவேன்.

*"சுவைபுதிது பொருள்புதிது! வளம்புதிது"*
*சொற்புதிது, சோதிமிக்க நவ கவிதை*

அந்நாடுஅழியாத மகாகவிதை எனப் பாரதியார் குறிப்பிட்டது. போன்று எனது எழுத்துக்களை எந்நேரமும் அழியாததாகச் சமூகத்துக்கும் பிறந்த மண்ணுக்கும் ஆற்ற விரும்புகின்றேன்.

நான் எழுத்தாளனானால் என் சக்திக்கேற்ற வகையில் நல்ல துறைகளில் என் பேனாவைப் பயன்படுத்துவேன். அதன் வலிமை கொண்டு புதியதோர் சமுதாயம் உருவாக போரிடும் பேரினவாதிகளைப் புறங்கண்டு ஒற்றுமை ஓங்க உழைத் திடுவேன்.

**அ. சாமினி**

**தரம் 10B**

## வண்ண மயில்வாகனன்

வண்ண வண்ண பூக்கள் கொய்து
வடிவான மாலை கட்டி
வள்ளி மணவாளனுக்குச் சாத்திடுவேனே - நான்
வள்ளி மணவாளனுக்கு சாத்திடுவேனே.

(வண்ண வண்ண)

தித்திக்கும் செந்தமிழாய்
தென்னகத்தில் மிளிர்பவனே
வள்ளி தெய்வ யானையரின்
குங்குமத்தில் திகழ்பவனே.

(வண்ண வண்ண)

பழம் ஒன்றால் கோபம் கொண்டு
பழனி மலை வந்தவரே
பார்வதியின் புதல்வனே
பக்தர் குறை தீர்த்திடுவாய்

(வண்ண வண்ண)

தஞ்சம் என்ற அடியவரின்
நெஞ்சமதே உன்கோயில்
வேண்டுதப்பா என்மனசு
வேலவனே உனைக் காண.

(வண்ண வண்ண)

சி. நிரோஜி
தரம் 9C

## பள்ளி போகும் பாலகரே

பாலர் பாட்டு பாடவந்தேன்
பள்ளி போகும் பாலகரே
நாளை உலகம் நம்கையில்
என்று எண்ணி வாழ்ந்திடுவீர்

நல்ல செயல்கள் பல புரிந்து
உலகம் போற்ற வாழ்ந்திடுவீர்
உடலை வீரம் ஆக்கிடினும்
உண்மை பேசப் பழகிடினும்

பாரினில் வாழந்த பெரியோரின்
வாழ்வை அறிந்து பழகிடனும்
ஏழை எளியோர் பலருக்கு
உதவி செய்து மகிழ்ந்திடனும்.

ச. பாமினா
தரம் 9C

# வேடிக்கை மனிதனுக்கு

அன்பு உள்ளவனுக்கு
ஆணவம் வருவதில்லை.
ஆசை கொண்டவனுக்கு
அமைதி இருப்பதில்லை.
தகுதி உள்ளவனுக்கு
தற்பெருமை இருப்பதில்லை.
அறிவு உள்ளவனுக்கு
அனுதாபம் பிடிப்பதில்லை.
அனுபவம் உள்ளவனுக்கு
அச்சம் வருவதில்லை.
சிந்தனை உள்ளவனுக்கு
திடீர் சீற்றம் வருவதில்லை.
சிரிக்க தெரிந்தவனுக்கு
துன்பம் வருவதில்லை.
பெறுமை உள்ளவனுக்கு
பொய் கூற முடிவதில்லை.
பொறாமை உள்ளவனுக்கு
புகழ் பேச முடிவதில்லை.
வேஷம் போடும் மனிதனுக்கு
வீரம் காட்ட முடிவதில்லை.
வேடிக்கை மனிதனுக்கு
எதிலும் விவேகம் காட்ட முடிவதில்லை.

**நா. விதுர்ஷா**
**தரம் 10C**

# மரங்கள் வளர்ப்போம்

மரங்கள் இயற்கை தரும் அருஞ்செல்வங்கள் அவை மக்களுக்குப் பல வகைகளில் உதவுகின்றன. இயற்கை மழையின் மூலம் காட்டில் உள்ள மரங்கள் நீரைப் பெறுகின்றன. மரங்கள் பறவைகளுக்கு உறைவிடம் அளிக்கின்றன. மரங்கள் இனிய பழங்களைத் தருகின்றன. கட்டடங்கள் கட்டவும் தளபாடங்கள் செய்யவும் மரங்கள் பயன்படுகின்றன. மரங்கள் மண்ணரிப்பைத் தடுக்கின்றன. பலன்தரும் மரங்களை அழித்தல் கூடாது. மரங்கள் வளர்ப்பது நமது கடமை ஆகும். மரங்கள் வளர்த்துப் பயன் பல பெறுவோம்.

**ஜெ. வைஷ்ணவி**
**தரம் 3A**

## முதுமையின் முகவரி

பெற்ற கடன் பட்டதற்காய்
பெற்ற பிள்ளை அடக்கியாள
பெற்ற வயிறு துடிதுடிக்க
பரி தவித்து நிற்கின்றோம்.

குத்தும் வார்த்தை நெஞ்சைச் சுட
கெடுபிடிகள் மெய்யைத் தொட
கேட்பதற்கு நாதி அற்றுப்போய்
மன துடைந்து தவிக்கின்றோம்.

உணர்ச்சிகள் உணர்வுகளாச் சேர்த்து
வாய்க்கு ருசி உணவு இன்றி
பாரினில் நாம் பாரமான
நிர்க்கதியில் வீழ்ந்துள்ளோம்.

எம் தேவைகளை மட்டுப்படுத்தி
எம் வாரிசு வாழ வேண்டும் என்று
எந்திரமாக உழைத்த போதும்
கடைசியில் இன்று நாம் அநாதைகளானோம்.

**சி, லவண்சிகா**
**தரம் 6 C**

## கல்வி நமது செல்வம்

கல்வி நமது செல்வம் - என்றும்
கரைந்திடாத செல்வம்
அள்ளி அள்ளிக் கொடுத்தும் - அது
குறைந்திடாத செல்வம்
எல்லோருக்கும் வேண்டும் - அது
எப்போதைக்கும் வேண்டும்
கல்வி கற்க வேண்டும் - வாழ்வில்
கடைப்பிடிக்க வேண்டும்
நல்ல நல்ல நூல்கள் - அவற்றை
நித்தம் படிக்க வேண்டும்
கல்வி கற்ற மக்கள் - உடலில்
கண்கள் பெற்ற மக்கள்

**த. சாகித்தியா**
**தரம் 3A**



நாவன்மைக் கழகம்



ஆங்கில மன்றம்



பாண்ட் அணியினர்



சுகாதாரக் கழகம்

# நான் சென்ற கல்விச்சுற்றுலா

நான் அச்சவேலி மத்திய கல்லூரியில் கல்வி கற்கிறேன். ஒருநாள் பாடசாலை அதிபர் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் சுற்றுலா செல்வதாக அறிவித்தார். நாங்கள் சுற்றுலா செல்லும் நாளை எண்ணிக் கொண்டிருந்தோம். மாணவர்கள் அனைவருக்கும் கொள்கை மகிழ்ச்சி 05.07.2009அன்று சுற்றுலாவிற்குச் சென்றோம்.

எனது அப்பா என்னை ஏழு மணியளவில் பாடசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தார். ஏழு முப்பது மணியளவில் வசு வண்டி புறப்பட்டு பருத்தித்துறை வீதி வழியாக சென்றது. நாம் முதலில் சென்ற இடம் மட்பாண்ட தொழிற்சாலை அங்கு ஆண்களும், பெண்களும் மண்ணினால் மட்பாண்டங்கள் செய்வது பெரும் விந்தையாகவும் வியப்பாகவும் இருந்தது.

அதன்பின் பண்டைய சங்கிலி மன்னின் இராசதானியாக விளங்கிய யமுனா ஏரிக்குச் சென்றோம். அதன் பின் யாழ்ப்பாணத்தின் பெருமையும், பழமையும் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தோம்.அதன்பின் சுப்பிரமணிய பூங்காவிற்குச் சென்றோம். அங்கு வண்ண வண்ணப்பூக்கள் சிரிப்பதை கண்டு மகிழ்ந்தோம். அதன்பின் தமிழர் தம் கல்வி அறிவை மேம்படுத்த உதவும் யாழ்ப்பாண நூலகத்திற்குச் சென்றோம்.

யாழ்ப்பாண அஞ்சல் அலுவலக பிரம்மாண்டம் எம்மை மெய் சிலிர்க்க வைத்தது அதன் பின் அங்கு புகைப்படம் எடுத்தோம். அதன்பின் விவசாயிகள் பயிற்சி நிலையத்திற்கு சென்றோம் அதன்பின் நூதனசாலைக்கு சென்றோம். பொறுப்பாசிரியர் புறப்படுங்கள் என்ற வார்த்தை கேட்டு விருப்பமில்லாமல் வசு வண்டியில் ஏறினோம். இது போல் இன்னுமோர் சுற்றுலா வராதா என்ற ஏக்கம் மேலிட்டபடியே வீட்டிற்குச்சென்றோம்.

**பா. கவியரசன்**

**தரம் $3^A$**

# கல்வியினால் உயர்வோம்

நாம் அடைய வேண்டிய அருஞ்செல்வங்களில் முக்கியமானது கல்வி. கல்வியில்லாதவர் கண்ணிருந்தும் குருடர் என்று வள்ளுவர் கூறுகிறார். அள்ள அள்ளக் குறையாதது கல்வி. கள்வராலும் கொள்ளையிட முடியாதது. நெருப்பிலும் வேகாதது கல்வியே. சென்ற இடமெல்லாம் சிறப்பைத்தருவது கல்வி. கல்வியில் சிறந்தது விளங்கினால் எல்லோரும் நம்மை நாடி வருவர். பழம் நிறைந்த மரத்தை வௌவால் நாடுவது போலக் கற்றவரை எல்லோரும் சூழ்ந்து பயன் பெறுவோம். இத்தகைய மேன்மை நிலைக்க கல்வி கற்று வாழ்வில் உயர்வோமாக.

**பா. சிந்தூரா**

**தரம் $3^A$**

## எமது பாடசாலை

எமது பாடசாலையின் பெயர் யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி. இப் பாடசாலை அச்சுவேலி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. எமது பாடசாலை யின் அதிபரின் பெயர் திரு. வே. பாலசுப்பிரமணியம். இங்கு தரம் 1இல் இருந்து தரம் 13 வரையான வகுப்புக்கள் உள்ளன. இங்கு ஐம்பதிற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றார்கள், ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள், இப்பாடசாலை ஆண்களும் பெண்களும் கல்வி கற்கின்ற ஒரு கலவன் பாடசாலை ஆகும். இங்கு பல மேல்மாடிக் கட்டடங்கள், அழகான சிறுவர் பூங்கா என்பன உண்டு. எமது பிரதேசத்தின் புகழ்மிகுந்த முன்னனிப் பாடசாலைகளில் ஒன்றாக இது விளங்கு கின்றது. எனது பாடசாலையின் "மகுட வாசகம் என்றும் ஒளிரும் தீபம்" என்பது ஆகும். தோற்றப் பொலிவும் ஆற்றல் சிறப்பும் மிக்க எமது பாடசாலையை நான் மிகவும் நேசிக்கிறேன்.

**க. நிதர்சன்,**
**தரம் 3A**

## நான் ஒரு ஆசிரியரானால்

நான் ஒரு ஆசிரியரானால் நான் பல பாடசாலைக்கு சென்று கல்வி கற்பிப்பேன்.
எனது வகுப்பில் கல்வி பயில்வோரை அன்பாக நேசிப்பேன்.
நான் கற்பிக்கும் பாடசாலை அச்சுவேலியில் அமைந்துள்ளது.
செயற்பாட்டின் போது என்னால் இயன்ற வேலைகளைச் செய்து கொடுப்பேன்.
நான் கல்வி கற்பிக்கும் பாடசாலை மிகவும் அழகானது
ஆசிரியரானால் பல பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பேன்.
நான் பல இடங்களுக்கு சென்று புத்தகங்களை எடுத்து
மாணவர்களுக்கு கல்வி கற்பிப்பேன்.

**த. கிருஷிகா**
**தரம் 4B**

## நான் ஒரு பறவையானால்

நான் ஒரு பறவையானால் வானவீதியில் பட்டுச்சிறகுகளை விரித்து வட்டமடிப்பேன்.
வண்ணப்பருந்துடனும் சின்னக்குருவிகளுடனும் உல்லாசமாகப்பறந்து திரிவேன்.
பழந்தோட்டங்களுக்குச் சென்று பல வகையான பழங்களை உண்டு மகிழ்வேன்.
எனது மனதுக்கினிய காட்சிகளைக் கண்டு இரசிப்பேன்.
நான் விமானம் போல் அங்கும், இங்கும் பறந்து வித்தைகள் பல செய்து காட்டுவேன்.
எனது நண்பர்களுடன் சேர்ந்து ஆகாயம் முழுவதும் பறந்த திரிவேன்.
நான் பல மரங்கள் மேல் உட்காந்து இரசிப்பேன்.

**த. சோபிதா**

# அறிந்து கொள்ளுங்கள்

| | |
|---|---|
| பிறந்த அன்றே இறக்கும் பிராணி? | ஈசல் |
| கிரிகெட் பந்தின் நிறை? | 156g |
| பிராணிகள் கூடு கட்டாத மரம்? | இலந்தை |
| நோயைக் குணமாக்கும் நிறம்? | நீலம் |
| இனிப்புச்சுவையை அறியமுடியாத விலங்கு எது? | பூனை |
| பறக்க மட்டும் தெரிந்த பறவை? | ஹிம்மிங்பேர்ட் |
| உப்பு நீரை விரும்பி குடிக்கும் மிருகம்? | ஒட்டகம் |
| கடல்மட்டத்துக்கு கீழ் உள்ள நாடு? | டென்மார்க் |
| உலகின் ஒரே இந்துநாடு? | நேபாளம் |
| ஆங்கிலம் தெரியாத இங்கிலாந்து மன்னன்? | முதலாம் ஜார்ஜ் |

**தி. விதுஜனன்,**
**தரம் 4A**
**யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.**

# மகாத்மா காந்தி

மகாத்மாகாந்தி வட இந்தியாவிலுள்ள குயராத் மாநிலத்தில் போரபந்தர் எனும் ஊரில் பிறந்தார். இவர் ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தொன்பதாம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் மோகதாஸ் காந்தி ஆகும். இவர் இளம் பிராயத்தில் "அரிச்சந்திரன் நாடகம், சிரவணன் நாடகம்" போன்றவற்றைப் பார்த்து நல்ல ஒழுக்க சீலராக விளங்கினார். இவரின் பெற்றோர்கள் அக்கால வழக்கப்படி கஸ்தூரியை இவருக்கு திருமணம் செய்து கொடுத்தனர். இவருக்கு பல அறிவுரைகள் கூறினார்கள் அதற்குள் மது அருந்தாதே, பொய் சொல்லாதே என்பன முக்கியமானவை ஆகும். இவர் மூன்று ஆண்டுகள் முயன்று கற்று பாரீஸ்டர் பட்டம் பெற்றார். இவர் சிலகாலம் வழக்கறிஞர் தொழிலில் ஈடுபட்டார். பின் இவர் நாட்டிற்கு பல சேவைகள் செய்தார்.

**இ. ஸ்ரீராம்,**
**தரம் 5A,**

## அறிந்து கொள்ள சில...

**குடிநீர்:-**

எழுபது வயது வரை வாழும் ஓர் மனிதன் எழுபத்து ஐந்து ஆயிரம் லீட்டர் நீர் அருந்துதல் வேண்டும்.

**இரத்தச் சிவப்பு:-**

இரத்தச்சிவப்பு நிறத்தில் ஓடும் ஆறு ஸ்பெயின் நாட்டில் உள்ளது.

**சீனப்பெருஞ்சுவர்:-**

சீனப்பெருஞ்சுவரின் உயரம் மூவாயிரத்து நானூற்று அறுபது ஆகும்.

**தபால்தலை:-**

முதன்முதுலில் தபால் தலை அறிமுகப்படுத்தியது இங்கிலாந்து ஆகும்.

**கொசுத்தொல்லை:-**

உலகிலேய கொசுத்தொல்லை இல்லாத நாடு பிரான்ஸ் ஆகும்.

**தி. யதுசன்,**
**தரம் 5A.**

## பொது அறிவுத் துணுக்குகள்

மிகப்பெரிய நதி - நைல்நதி
மிகப்பெரிய கண்டம் - ஆசியாக்கண்டம்
மிகச் சிறிய கண்டம் - அவுஸ்திரேலியா
மிகப்பெரிய பாலைவனம் - சகாரப்பாலைவனம்
உலகிலே மிகச் சிறிய நாடு - வத்திக்கான்
மிகப் பெரிய தீவு - கிறீன்லாந்து
அதிகளவு சனத்தொகை கொண்ட நாடு - சீனா
அதிகளவு பெற்றோலிய வளம் கொண்ட நாடு - சவுதியரேபியா
மிக நீளமான நதி - எவரெஸ் நதி
இலங்கையில் அதிகளவு சனத்தொகை கொண்ட மாவட்டம் - கொழும்பு
இலங்கையில் இயற்கைத் துறைமுகம் கொண்ட நகரம் - திருகோணமலை

**க. தேவிசூரியா**
**தரம் – 5A,**

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)
திரு.சி.சந்திரலிங்கம், திருமதி.யோ.சந்திரகுமார் (பிரதி அதிபர்), திரு.வே.பாலசுப்பிரமணியம் (அதிபர்), திரு.பொ.வரதகுலசிங்கம், திரு.அ.குணபாலசிங்கம்

நிற்போர் (இடமிருந்து வலம்)
திருமதி.சி.மங்களேஸ்வரி, திரு.இ.விஜயமோகனராஜா, திருமதி.ற.குணபாலன், திருமதி.ந.இரத்தினேஸ்வரி, திருமதி.சு.செல்வரத்தினம், திருமதி.த.சிவபாலலிங்கம், திரு.பொ.சகலகலாநிதி, திரு.செ.முரளீதரன், திரு.சி.சுரேசன்ட்

# சுத்தம் சுகம் தரும்

சுத்தமான சூழல் ஆரோக்கியமான வாழ்வின் அடித்தளமாகும்.
தூய்மை சுற்றாடலிற்கு அழகை அளிக்கின்றது.
சுத்தமான இடம் நோய்விளைவிக்கும் அங்கிகளின் வாழ்விற்கு உகந்தது அல்ல.
நோய்காவிகள் அசுத்தமான இடங்களில் பெருகுகின்றன.
இதை ஒழிக்க மனிதர்களாகிய நாம் திடசங்கற்பம் பூணுவோம்.
அதற்காக நாம் சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
தூய்மையான ஆலயங்கள் மனதிற்கு சுத்தத்தையும் அமைதியையும் தருகின்றது.
தூய்மை துயர்கள் பலவற்றையும் போக்கும் தன்மை உடையது.
சிறுவயது முதல் நாம் தற்சுத்தத்தையும், பொதுச்சுத்தத்தையும்
பேணப் பழகிக் கொள்ள வேண்டும்.
சுத்தம் இன்றேல் இங்கு சுகமும் இல்லை.

**சுத்தம் சுகம் தரும், நலன் தரும், பலன் தரும்.**

**தி. யதுசன்,**
**தரம் – 5**

# Water

Water covers nearly 75 percent of the earth's surface . All the water on planet earth is just one body. Waterfalls also form a part of this body.

All living things need water to live Water is the life blood of our earth. Water is every Where. Water is a life giver Man cannot live without it.

Water is also a destroyer. Heavy rains cause floods. Floods can destroy both life and property.

We need to save water for life to go We also need to save man from its many dangers.

*Arabi Y*
*Grade 10[C]*

# The subject I like most

My favourite subject is English. I like to read English books. My parents help me to develop my English knowledge. My father brings English magazines for me.

My English teacher is an excellent lady. I listen to her when she teaches English. English is an interesting language. All of us try to speak in English in the class.

*S. Praveenan*
*Grade - 4[A]*

# My Sister

I have a little sister. Her name is Mathu. She is seven years old. She is studying at J/Atchuvely st. Theresa's Girls School. She is very clever. She likes to play chess. She likes chocolates. I like my sister very much.

*V. Kethajini*
*Grade 4[B]*

# My best friend

Jansika is my best friend. She is very sweet. She is fair and has nice hair. We both are in the same class.

Jansi is a calm and quiet girl. All the students like her. She is very good in mathematics. She helps me a lot.

My friend is very hard working. Her ambition is to become an engineer one day. I'm very proud to say that Jansika is my best friend. Our friendship will last forever.

*Miss. S. Suvasthika*
*Grade 4[B]*

# Gardening

Gardening is my hobby. It gives me a great pleasure. I grow flowers fruits vegetables and other plants. I spend my extra time in the garden.

Gardening involves a number of exercises. It is good for all parts of the body. Gardening reduces blood pressure and cholesterol levels. It improves both mental and physical health .

My garden is a place of beauty and happiness.

*Mas. S. Ponmaran*
*Grade - 8ᶜ*

# Mother

She lives in me
And she lives for me
I see in her
A blessing in disguise

You ought to know
Who she is
You owe her filial love
For what she has been for you.

We see god in her
We see friend in her
She is none other than
My beloved mother

*Miss. S. Arabi*
*Gr 4ᴬ*

# Myself

My name is Sulakshan. I am nine years old. I have two sisters and no brothers. My father is a Management Assistant at the Divisional Secretariat Kopay.

I'm in grade 4. My favourite subject is Maths. I work hard for my grade 5 scholarship exam in 2010. I like my parents and teachers very much. They too are very fond of me.

*S. Sulakshan*
*Grade- $4^B$*

# My village

My village is Atchuvely. It is situated ten miles from Jaffna town. Most people are farmers in my village .The main crop is onion.

My village is very beautiful. There are temples, big schools, hospital and a post office.

All the people in my village are very understanding.So we live peacefully. I love my village.

*T. Kirusika*
*Grade - $4^B$*

# The uses of trees

Trees are very important to human existence in the world. Man gets many benefits from the trees. They provide food for man. Medicinal plants are very useful in curing diseases.

Trees give shade. They help to maintain a regular rainfall. They also stand as a buffer against floods, droughts and erosion.

But the trees are cut down to build house or for agricultural purposes. If it continues, the mankind has to face many bad effects in the future.

So it is our duty to make much effort to save the trees.

*T. Vithujanan*
*Grade - $4^A$*

# Mother Teresa

Mother Teresa was internationally respected for her work to relieve the suffering of the poor, the sick and the dying. She began her work of helping the desperately, poor of India by bringing the dying persons from the street to the 'pure Heart Home where they could die in peace and dignity. She also established an orphanage through her untiring efforts. She succeeded in forming a congregation of sisters whose work has now spread to five continents.

Mother Teresa was born in skipje, Albania on 27th of August 1910 and was named (Agnes Gonxha Bejoxhini) She left home at the age of 18 to join the Institute of the Blessed Virgin Mary in Dublin. She arrived calcutta in 1947 asking slum dwellers whether there were children she could teach.

While travelling on a train, she heard the cries of some sick and helpless people. she described it as a call within a call Mother Teresa donned a blue trimmed white saree which became the uniform of her missionaries of charity. She was awarded the Nobel peace prize in 1979. Her book 'A simple path' was published in 1995 she died on september 5th 1997.

*S. Niroji*
*Grade - 9C*

# Boy Scouts Association

There are many clubs and associations to serve the mankind throughout the world. But only some of them are very famous and Scout association is one of them. Most young boys have membership in Scout Association world wide.

Robert Stephenson Smith Baden Powell is the founder of the Scout Association. He formed this association in 1907 at Brownsi Island of England with 20 young boys. Baden powell published the boolk 'Youth Scouting" in 1908. In 1909 the first girl Guide Miss. Agness, Sister of Baded powell joined this association.

The Girls Guide Association was formed by Agnes 1910. The sea scout was also formed in this year. In 1941 the Air scout was formed.

Boy scouts are devided into three categories. Cub scouts belong to 07 - 10 age group. scouts belong to 11-18 age group and Rover scouts belong to 18 - 21 age group. The scout masters are trained after 18 years old. In Srilanka, there are two divisions in scouts category. Junior scouts (under - 15) senior scouts (over - 15 boys) are them. The cub scout was started in 1916. In 1918 the Rover scout was started.

The Gill well park was started in 1919. First Scout Jumbore was held in 1920 and in 1957 the Golden Jubilee of Scout Association was held in England, From 1920 to 1958 the world head office was functioning in England, from 1958 to 1968 in Canada and since 1968 it has been in switzerland.

The Scout association zones have five regions World wide. They are African Region, Arabic Region, Asian pacific region, European Region and central American region. One hundred and forty seven countries have membership in the world Scout Association.

In 1912 Srilankan Scout Association was formed in Matale christ church College by F.G. Stephen. B.P. who was the founder of Scout Association came to Srilanka twice. One was in 1921 with Lady Baden Powell and other was in 1934. The first wood badge training was held on 1922 in Nuwaraeliya. The first National Jumboree was held on 1948 near the BMICH.

Srilankan Scout Association has 33 scout administrative districts. Jaffna district has four scout districts. Killinochchi & Kodikamam, Jaffna, Kankesanthurai and Point pedro. Our school belongs to point pedro district. Our present District Commissioner is Mr. M. Ravindran.

A Srilankan Scout Can receive six main awards

1. Member ship badge
2. Scout award / Substitute Scout Award
3. District Commissioner's Cord
4. Efficency Decoration
5. Chief Commissioner's Award
6. President Award.

Every Scout must try to get the highest award. The President Award is the dream of every good Gcavt Scouts, pay a certain amount as subscription to the National Head Quarters every Year. Scouts gain many special abilitles through the Scput Association. A scout is trustworthy, loyal, helpful. friendly, courteous, kind, obedient, clean, cheerful, thrifty, brave and reverent. A Scout can be a good citizen in future.

"A Scout can change inability to ability"

*R. Kasthuriraajan,*
*Grade - 10C*



சாரணர்



19 வயதின்கீழ் ஆண்கள் சதுரங்க அணியினர்



குருளைச் சாரணர்



சேவைக் கழகம்

# அச்சுவேலி மத்திய கல்லூரியின் விளையாட்டுத்துறை பற்றிய தகவல்களும் வளர்ச்சிப் படிகளும்.

த. ஸ்ரீமுருகதாஸ்காந்தன்,
(உடற்கல்வி ஆசிரியர்)

இந்தக்கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியர் என்ற வகையில் இந்தத் துறை சார்ந்த ஆக்கம் ஒன்றினை வழங்குவதற்கு வயதிலும் அனுபவத்திலும் சிறியவனாக இருந்தும் ஆர்வத்தினால் தூண்டப்பெற்று இம் முயற்சியில் துணிந்து கால் பதிக்கின்றேன். சந்தர்ப்பவசத்தினால் சில தகவல்கள் தவிர்க்கப்பட்டோ மாற்றப் பட்டோ இருப்பின் அவற்றை சுட்டிக்காட்டினால் பணிவுடன் ஏற்றுக் கொள்வேன்.

"உடற்கல்வித்துறை கல்வி முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கும்" என்ற மனப்பாங்கு கிராமப்புறங்களில் இடையிடையே தலைதூக்கினாலும்அதன் பிரபலம் உலகளாவிய ரீதியில் பெருகிக் கொண்டே போகிறது. விளையாட்டுத்துறையில் பிரபலம் பெற்ற ஒருவருக்கு உலகளாவிய ரீதியில் இருக்கும் கூட்டம் போல் வேறு எந்தத் துறையினருக்கும் இருப்பதில்லை மொழி, இனம், மதம், நாடு என்பன கடந்து சர்வதேச ரீதியில் மக்களை ஒன்றிணைப்பது விளையாட்டுத்துறை என்பதில் இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை. சிறியேனின் இந்தக் கருத்தினைத் தொடர்ந்து விடயத்திற்கு வருவோம்.

எங்கள் கல்லூரியின் உடற்கல்வித்துறை வரலாற்றினை மூன்று கட்டங்களாக வகுத்து தகவல்களைத் தருதல் பொருத்தமெனக் கருதுகின்றேன்.

தகவல்கள் மூத்தோர் வாய்மொழி மூலம் அறிந்தவை சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற பல நல்லறிஞர்களை உருவாக்கிய இந்தக் கல்லூரி நூற்றாண்டைக் கடந்து இரண்டாவது தசாப்த காலத்தை அண்மித்துக் கொண்டிருக்கின்றது. கல்வி முயற்சியில் காட்டி வந்த அதே அக்கறை விளையாட்டுத் துறையிலும் காட்டி வளர்ந்து வந்துள்ளது. ஆரம்ப காலங்களில் வடமராட்சியில் பிரதேச அங்கங்களாக உடுப்பிட்டி, வல்வெட்டிதுறை. தொண்டமனாறு ஆகிய இடங்களில் இருந்து இக்கல்லூரிக்கு மாணவர் வருகை தந்ததாக தகவல்கள் உண்டு. இம் மாணவர்கள் விளையாட்டுத் துறையில் திறமை காட்டி கல்லூரிக்கும் பெருமை சேர்த்தனர். இந்தியாவிலுள்ள மலையாளப் பகுதியிலிருந்து திருவாளர் ஜோன் என்பவர் இந்தத்துறை ஆசானாகப் பணியாற்றினார். எமக்கு மூத்தோர் கூறிய தகவல் இது

"கரப்பந்தாட்டம் என்றால் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரி" எனப் பேசப்பட்ட காலம் இந்தக் காலகட்டத்தில் அதிபராக இருந்த திருவாளர் கி. சிங்கரட்ணம் அவர்களால் 1955ஆம் ஆண்டில் மைதானத்திற்கு என காணி கொள்வனவு செய்யப்பட்டி ருந்தது. அதன் ஒரு பகுதி மட்டும் செப்பனிடப்பட்டு உடற்கல்வி முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

எனது பார்வையில் இக்கல்லூரியில் எனது மாணவப்பருவ காலத்தில் இக்கல்லூரி. உடற்கல்வித் துறையில் ஒளி வீசியது. இந்தியாவிலுள்ள Y. M. C. A உடற்கல்விக் கல்லூரியில் பட்டம் பெற்ற ஒரு சில ஆசிரியர்களில்புகழ்பூத்து விளங்கிய திரு. க. இரத்தினம் அவர்கள் கடமையுணர்வும் கடின உழைப்பும் கொண்டு இந்தத்துறையை வளர்த்து வந்தார். கரப்பந்து, உடற்பயிற்சிப் போட்டிகளிலும், இந்தக்கல்லூரிக்கும் பெரும் புகழ் இருந்து வந்தது. 1980களில் எனது மாணவப் பருவத்தில் கரப்பந்து உடற்பயிற்சிப் போட்டிகளிலும், எறிதல் நிகழ்ச்சிகளிலும், மாவட்ட நிலை வரை சென்று இக்கல்லூரிக்கு பெருமை சேர்ந்தவன். இந்தப் பேராசானைத் தொடர்ந்து திருவாளர்கள் க. தம்பித்துரை, நா. சண்முகரட்ணம், திருமதி. இ. குமரகுருபரன், செல்விகள் ரதனி, தேவகுமாரி, வ. மயில்வாகனம் ஆகியோரின் இந்த அக்கறையினால் வலைபந்து, கரப்பந்து, உடற்பயிற்சி ஆகியவற்றில் மாவட்டமட்டம் வரை சென்று போட்டியிட்டு கல்லூரியைப் பிரபல்யப் படுத்தினர். திரு. சி. செல்லையா அவர்களின் நெறிப்படுத்தல் இந்த நிலைக்கு மூலகாரணமாய் அமைந்திருந்தது. 1995இல் 17வயதுப் பெண்கள் அணியினர். உடற்பயிற்சிப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 3ஆம் இடத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர். இவ்வாண்டிலிருந்து சுமார் 05 வருடங்கள் அசாதாரண சூழ்நிலையில் நாட்டின் சகல துறைகளும் மந்தகதியிலேயே இயங்கி வந்தன. விளையாட்டுத் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல.

இக்கல்லூரியில் எனது பணி தொடங்கிய காலம் 2001ஆம் ஆண்டு உடற்கல்வி ஆசிரியராக நான் கடைமையாற்றிய காலம் அதிபராக திருமதி. சகுந்தலாதேவி, கனகராசா அவர்கள் பணியாற்றினார். பெண்மணியாக இருந்தாலும் அவர் இந்தத்துறையில் காட்டிய ஆர்வத்தினை அளவிட முடியாது. அவரது காலத்திலேயே உடற்பயிற்சி அணி கோட்டமட்டம், வலயமட்டங்களில் 1ஆம், 2ஆம் இடத்தைப் பெற்றது. இவர் உடற்கல்வித்துறையை ஒளிரச் செய்தார். தடகளப்போட்டிகளும், மாகாணமட்டம் வரை இட்டு செல்லும் அளவுக்கு வளர்ச்சி பெற்றது. இந்தக்கால கட்டத்தை சிறிது பிரித்துக் கூற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. எனது பணிக்கால கட்டம் என்ற காரணத்தினால் அல்ல என்னால் நிதர்சனமாய்க் கண்ட விடயங்கள் அடங்கியுள்ளதால் இந்த பிரிவு நிலை.



சி. சுரேன்

இந்தக் காலத்தில் 19 வயது ஆண்கள் பிரிவு உடற்பயிற்சி நிகழ்வில் மாவட்டம் வரை சென்றது குறிப்பிடத்தக்கது. மாவட்ட மட்டத்தில் திறமையான செயற்பாடுகளை காட்டியபோதிலும் மாகாண மட்டத்தெரிவுக்கு ஒரு சில புள்ளிகளால் வாய்ப்பினை இழந்துள்ளோம்.

இதே ஆண்டு 15 வயது ஆண்கள் பிரிவில் தட்டெறிதல் போட்டியில் சி. சுரேன் என்னும் மாணவன் மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தைப் பெற்று பாடசாலை வரலாற்றில் 30 வருடங்களின் பின் மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது. மாகாணமட்டப் போட்டிக்கு செல்லும் செலவினை ஆசிரியர்கழகம் ஏற்றுக்கொண்டது.

இதே கால கட்டத்தில் 19வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணி வலயமட்டத்தில் 3ஆம் இடத்தைப் பெற்றது. இவ்வாறு பல வெற்றிகளை ஈட்டியிருந்த போதிலும் விரிவு கருதி எழுதமுடியாமல் இருக்கிறது.

அதிபர் திருமதி. சகுந்தலாதேவி அம்மையாரின் விடாமுயற்சியினால் ஈர்க்கப்பட்ட புலம்பெயர்ந்து வாழும் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் திரட்டிய நிதியில் விளையாட்டு மைதானத்தை குறிக்கோளாகக் கொண்டு காணியொன்று கொள்வனவு செய்யப்பட்டது. எனினும் இந்தக் காணிக்கு செல்வதற்கு பொருத்தமான பாதை இல்லாதபடியால் அதன் பயனைப் பாடசாலைச்சமூகம்அனுபவிக்க முடியாமல் இருக்கிறது. இதற்குக் காரணம் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையில் நெருங்கிய தொடர்பின்மையே ஆகும். இது துரதிஷ்ட வசமான சம்பவமேயாகும்.

திருமதி. சகுந்தலாதேவி அம்மையார் 2004ல் ஓய்வுபெற்றுச் செல்ல புதிய அதிபராக திரு. வே. பாலசுப்பிரமணியம் அவர்கள் எங்கள் கல்லூரியின் அதிபர் பணியினை ஏற்றுக்கொண்டார். தாம் கடமை ஏற்கும் இடங்களெல்லாம் பெருமதிப்பை பெற்றார்.

இவர் எமது பாடசாலையின் அதிபராகியமை அச்வேலி மக்களிற்கு ஓர் வரப்பிரசாதமே. இவர் காலத்தில் விளையாட்டுத்துறை மேலும் மெருகேற்றிக் கொண்டிருக்கிறது. பெரு விளையாட்டுக்களும் தடகள விளையாட்டுக்களும் குறிப்பாக கரப்பந்து, வலைப்பந்து, துடுப்பாட்டம் போன்றவற்றிற்கு விசேட பயிற்சியாளர்கள் அமர்த்தப்பட்டமையும் விளையாட்டுத்திடல் முழுமையாக செப்பனிடப்பட்டு நிழல் தரும் மரங்கள் நாட்டியமையும் இவ் அதிபரின் சேவைக் காலத்திலேயாகும்.

இக்கல்லூரியில் சதுரங்கக்கழகம் 2004ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது இக்கழகத் தினூடாக 13, 15, 17, 19 வயது ஆண், பெண் பிரிவுகளாகவும் தனியாகவும் மாணவர்களிற்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

ஆரம்பப்பிரிவிற்கு திருமதி. கமலராணி ராஜறஞ்சன் அவர்களும் மேற்பிரிவிற்கு திரு.து. ராஜறஞ்சன் அவர்களும் பயிற்சியை வங்குகிறார்கள். இவர்களின் பயிற்சியின் ஊடாக இக்கல்லூரியின் சதுரங்க அணியினர் கோட்டமட்டம், வலயமட்டத்தில் வெற்றிபெற்று மாவட்டத்திற்கு தெரிவாகி போட்டிகள் நடைபெற்ற போது மாகாண மட்டத்திற்கு செல்லும் வாய்பினை இழந்துள்ளனர்.

எமது கல்லூரி அதிபரின் ஊக்கத்தினால் விளையாட்டிற்கு மேலும் தேசிய மட்டத்தில் வெற்றி கொண்ட வளவாளரினைக் கொண்டு மாணவர்களிற்கு பயிற்சிகள் வழங்கப் படுகின்றன. தனியார் நிறவனங்கள் நடாத்தும் போட்டிகளிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. இக்கழகத்தின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் அதிபரின் வழிகாட்டலிலும் பொறுப்பாசிரியரின் தலைமையிலும் நடைபெறுவது பாராட்டிற்குரியதாகும். சதுரங்கக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை எல்லா போட்டிகளிலும் கல்லூரிக்கழக மாணவர்கள் தமது திறமைகளை தேசிய பாடசாலைகளுடன் சவாலாக வெளிக்காட்டி வருகின்றனர். இவ் விளையாட்டினூடாக மாணவர்களின் செயலாக்கம் விருத்தி செய்யப்படும் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை.

2006ஆம் ஆண்டு எமது கல்லூரி கரப்பந்து, வலைப்பந்து ஆண், பெண் அணிகளும் துடுப்பாட்ட அணியும் பலபோட்டிகளில் வெற்றி பெற்று சாதனை புரிந்தன. 15வயது பெண்கள் அணி கரப்பந்தாட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றது. 3ஆம் இடத்தையும் பெற்றது. இதே ஆண்டு 17வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணி வலயமட்டத்தில் 1ஆம் இடத்தைப் பெற்றது. மாவட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றது. மாகாண மட்டத்திற்கு தெரிவான 1ஆவது அணி இதுவாகும்.



15வயது பெண்கள் அணி கரப்பந்தாட்ட அணி

அதே போன்று 2007ஆம் ஆண்டு 17வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணி மாவட்ட நிலையில் 2ஆம் இடம் பெற்றது. மாகாணநிலை போட்டிக்கு தெரிவாகி இருந்தும் அசாதாரண நாட்டு நிலைமையினால் பங்கு கொள்ள முடியாமை துரதிஷ்டமே. எனினும் வீரர்களின் பயிற்சி தொடர்ந்தது. இக்கல்லூரியின் பழைய மாணவன் திரு. த. சஜீவன் (சோ அண்ணன்) தனது பாடசாலை என்ற உணர்வுடன் பயிற்றுநராகப் பணிபுரிந்தார். எந்த விதஎதிர்பார்ப்பும் இன்றியே இந்தப் பணியைச் செய்தார்.


17வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணி

இவ் ஆண்டு எமது கல்லூரியின் விளையாட்டுத்துறை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. மாகாண மட்டம் வரை சென்று 2ஆம் இடத்தைப் பெற்ற 19வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணியினர் என்றும் புகழிற்கும், போற்றுதற்கும் உரியவர்கள் தேசிய மட்டத்திற்கு தெரிவாகிய இவ் அணியினர் வெற்றி பெறா விட்டாலும் வெற்றி பெற்ற அணியினரிற்கு பெரும் சவாலாக விளையாடினார்கள். பயிற்றுவிப்பாளர் கி. சிவசொருபன், ச. சுகந்தன், பொறுப்பாசிரியர்கள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரின் ஒன்றிணைந்த கூட:டுப்பொறுப்பு இவ்விடயத்தில் போற்றத்தக்கது. இவ் அணியினரின் திறமையை எமது பாடசாலை ஆசிரியர் கழகம் பாராட்டிக் கௌரவித்தமை போற்றத்தக்கது.

19 வயது பெண்கள் கரப்பந்தாட்ட அணியினரும் மாவட்டம் வரை சென்று தமது வளர்ச்சியை நிருபித்தனர். திரு. சி. சிவாகரன், ந. ஜகிம்சன் ஆகியோரின் சிறந்த பயிற்சி மெச்சத்தக்கது. இவர்கள் எமது பாடசாலை பழைய மாணவர்கள் அல்லாத போதும் பாடசாலை மீது கொண்ட அபிமானத்தினால் கைமாறு கருதாமல் இந்தப் பணியைச் செய்தனர்.



தேசிய மட்டத்திற்கு தெரிவான அணி

இவ் ஆண்டு 19வயது ஆண்கள் துடுப்பாட்ட அணி கோட்டமட்டத்தில் வெற்றி பெற்று வலய மட்டத்தில் துடுப்பாட்டத்தில் பிரபல்யமான பாடசாலையுடன் போட்டியிட்டு தோல்வியை தழுவியதால் 3ஆம் இடத்திற்கான போட்டியில் தேசிய பாடசாலையுடன் மோதும் வாய்ப்பை பெற்றது. எமது துடுப்பாட்ட அணிக்கு பயிற்றுவிப்பாளராக திரு. இ. லவசியாமளன் அவர்கள் பயிற்சிகளை வழங்கி வருகின்றார். எமது கல்லூரியின் அயலிலுள்ள சிறிய பாடசாலைகளில் கூட பாடசாலையுடன் இணைந்து விளையாட்டு மைதானங்கள் உண்டு. அது இப்பாடசாலையை சூழவுள்ள சமூகத்தினரின் ஒத்துழைப்பேயாகும். ஆனால் எமது பாடசாலையில் இவ்வாறான ஒரு நிலை ஏற்படாதது கவலைக்குரிய விடயமாகும்.

இக்கல்லூரியின் விளையாட்டை மேம்படுத்துவதற்கு பெரும்பாலான மாணவர் களிற்கும், பெற்றோர்களிற்கும் அக்கறை இன்மை, மாணவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச்செல்லுதல், விளையாட்டில் ஈடுபடுபடுவதால் தமது கல்வி பாதிக்கப்படும் என எண்ணுதல் போன்ற காரணங்களால் பெரும்பாலான மாணவர்கள் விளையாட்டு செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடாமை. இக்கல்லூரியின் விளையாட்டு வளர்ச்சிக்கு மேலும் ஒரு தடையாகும்.

இந்தத் துறையில் இன்றும் வளர்ச்சி வேண்டி நிற்கும் பாடசாலை இடையூறு களையும் சந்தித்திருக்கின்றது. ஆரம்பத்தில் காட்டியது போன்று துறையில் அக்கறை யின்மையும் தனியார் கல்வி நிலையங்கள் நேரத்தை விழுங்கியதும் சகல விளையாட்டு நிகழ்ச்சிகளையும் நடத்தக்கூடிய விசாலமான மைதானம் (200m ஒடுபாதை அளவுக்கேற்ப, உதைபந்தாட்ட அமைப்பு) இல்லாமை போன்ற விடயங்கள் இந்தத்துறையில் சோர்வினை உண்டாக்குகின்றன. எனினும் பெற்றோரும், நலன்விரும்பிகளும் இவ் விடயங்களை தங்கள் மேலான கவனத்திற் கொண்டால் ஓங்கி உயரும் விளையாட்டுத் துறை என்ற கருத்தினை முன் வைத்து நிறைவு செய்கின்றேன்.

நன்றி.



தகவல் தொழிநுட்பக் கழகம்



17 வயதின் கீழ் ஆண்கள் கரப்பந்து அணியினர்



சதுரங்கக் கழகம் ஆண்கள்



19 வயது ஆண்கள் கரப்பந்தாட்ட அணி

# ஆணிவேர் (நாடகம்)

**திரு. வே. பாலசுப்பிரமணியம்**
**(அதிபர், யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி)**

**காட்சி :– 01**

( முருகேசு பணக்காரத் தோற்றம். பார்வதியின் தோற்றத்திலும் வசதி தெரிகிறது.)
(பொருள்களை அடுக்கியபடி இருக்கிறாள்)

முருகேசு:- பார்வதி, ………… பார்வதி …………
(சால்வையை மாறி மாறி தோளில் போட்டவாறு)

பார்வதி:- என்னப்பா, …… ஒரு மதிரி வாறியள் ஏதும் பிரச்சினையே?
காசைக் கீசைத் தொலைச்சுப் போட்டியளே. முகத்தில ஏதோ வித்தியாசம் தெரியுது.

முருகேசு:- ம் ………….. காசைத் தொலைத்தே இவ்வளவு சொத்தையும் சேர்த்து வைச்சிருக்கிறன். உவன் ரவி…. உவன் மகன் ரவியைப்பற்றித்தான். ஊர் சுற்றித் திரியிறானாம். கணேசன் சொன்னான். ரவி ரியூசனால் வந்திட்டானே இண்டைக்கு வரட்டும்.

பார்வதி:- ஏனப்பா கொதிக்கிறியள். ஆரும் சொன்னதைக் கேட்டுப் போட்டு வந்து ஏதோ எல்லாம் முடிஞ்ச மாதிரிக் கத்திறியள். கொஞ்சம் பொறுங்கோவன். இந்தக் காலத்துப் பொடியளோட கொஞ்சம் கவனமாகக் கதைக்கவேணுமப்பா.

முருகேசு:- இஞ்சை பார் பார்வதி கதைக்கிறதுக்கு நீ படிப்பிக்கப் போறாய் போல. எனக்கு என்ர விசயம் தெரியும் நீ வாய் மூடிக்கொண்டு இரு.

(ரவி புத்தகத்தை வைத்துவிட்டு வருகிறான்.)

முருகேசு:- (செருமலுடன்) ரவி, இஞ்சை ஒருக்கால் வா.

(தாய் உள்ளே போகிறாள்)

ரவி:- என்னப்பா (குழைந்தபடி)

முருகேசு:- இல்லை ….. உன்னைப் பற்றி சில கதைகள் கேள்விப்பட்டன். நீ இப்போது ஊர் சுத்திறியாம். எல்லாம் உண்மையோ? உவன் கணேசன் சொன்னான்.

ரவி:- அதப்பா …….. நான் ……….

முருகேசு:- அதுவும் இதுவும். கேட்டதற்கு விளக்கத்தைச் சொல்லு. வேறு கதை எனக்கு வேண்டாம்.

ரவி:- இல்லையப்பா: நாங்கள் ரியூசனுக்குப் போய் குட்டித்தம்பி சேரிட்டை Personal Tution க்குப் போறனாங்கள் அதுகளைக் கண்டிட்டுத்தான் உப்பிடிச் சொல்லியிருக்கிறார் போல.

பார்வதி:- ( தேநீருடன் உள்ளே வருகிறாள் )
நான் நினைச்சன். எங்கட பிள்ளையைப் பற்றி எனக்குத் தெரியாதே. உந்த ஊர்ச்சனத்துக்கப்பா எங்களிலை சரியான பொறாமை. அதை இதைச் சொல்லி குழப்பப்பாக்கிறாங்கள். உந்தக் கதையள கேட்டு நீங்களும் குழம்பிப்

போனியள். இந்தாருங்கோ. தேத்தண்ணியைக் குடியுங்கோ. ரவி, கால் முகத்தைக் கழுவிக் கொண்டு வா தேத்தண்ணி ஊத்துறன்.

முருகேசு:- தம்பி ரவி ………….. (மகளும் உள்ளே வருகிறாள்)
இஞ்சை பிள்ளையும் ரியூசனால வந்திட்டாள். இரண்டு பேருக்கும் ஒரு கதை சொல்லப் போறன். ஏழு தலைமுறைக்கும் தேவையான சொத்துக்கள் சேத்து வைச்சிருக்கிறன். கல்வியைத்தான் சேர்க்க என்னால முடியமால் போட்டுது. அதை நீங்கள் செய்ய வேண்டும். அதுக்கப்புறம் என்ர பெயர் கொடி கட்டிப் பறக்கும்.

பார்வதி:- பிள்ளையள் இராப்பகலாக ஒரே படிப்பு படிப்புத்தானேயப்பா. படிச்சுப் படிச்சுப் கண்ணே வீங்கிப் போச்சுது பாருங்கோ. அதுகள் நிச்சயமாக உங்கட கனவை நனவாக்குங்கள் பயப்படாதையுங்கோ.

முருகேசு:- இல்லைப் பார்வதி அதாலைதான் இந்தப் பிள்ளையள் கேக்கிற ஒன்றுக்கும் நான் மறுப்புச் சொல்லுறதில்லை. பாஸ்பேப்பர், புத்தகம், பயிற்சிப் புத்தகம் இலங்கையிலை ஆர் எழுதின புத்தகம் என்றாலும் வாங்கி குவித்து வைச்சிருக்கிறன். இதுகளேதும் குறுக்காலை இழுத்துதுகளோ வெளியிலை தலைக்கறுப்புக் காட்டேலாது. இந்த முருகேசின்ர மானம் கப்பலேறிவிடும் கண்டியோ ம்……. ம்.

நளாயினி:- அ…ப்….பா (ஒரு சிறு லிஸ்ரை கொடுக்கின்றாள்)
இந்தப் புத்தகங்கள் நாளைக்கு எனக்கு வேணுமப்பா. ரியூசன் மாஸ்ரர் வாங்கச் சொன்னவர்.

முருகேசு:- கொண்டு வா……… கொண்டு வா ………….இதண்டால் பத்து முறையும் வாங்கித் தருவன். ( தாய் பறித்து லிஸ்ரை பார்க்கிறாள்)

பார்வதி:- எடி மோனை இவ்வளவு புத்தகமும் வேணுமே. உவ்வளவும் உனக்கு படிக்க நேரங்கிடக்கே.

நளாயினி:- அம்மா உங்களுக்கு உது விளங்காது. எல்லாம் வேணும்.

முருகேசு:- பிள்ளை நீ சரியாய் சொன்னாய். கொம்மவுக்குகெங்க விளங்கப் போகுது. படிப்பைப் பற்றி. அடுப்பூதுற வேலை மாதிரி நினைச்சுப் போட்டாபோல கிடக்கு (லிஸ்ரை வாங்கி பொக்கற்றுக்க வைக்கிறார்)

பார்வதி:- விசர்க்கதையை விட்டிட்டு மற்ற அலுவல்களைப் பாருங்கோ. பின்னேரம் ஏதோ கூட்டம் என்றெல்லே சொன்னனீங்கள்.

முருகேசு:- ஓமோம், ஓமோம். மறந்தெல்லே போனன்.
( சொன்னபடி உள்ளே செல்கிறார் பார்வதியும் எதிர்புறமாக செல்கிறாள் )

**(திரை முடிகிறது)**

## காட்சி :- 02

அதிபர் அலுவலகம்:- அதிபர் மும்முரமாக ஏதோ வேலையில் ஈடுபட்டிருக்கிறார். முருகேசு தனது மகன் ரவியையும் இழுத்துக் கொண்டு உள்ளே வருகிறார்.

முருகேசு:- வணக்கம் சேர்.

அதிபர்:- வணக்கம், வணக்கம்

முருகேசு:- என்ர மகன் ரவியை ஏதோ பைப் உடைத்ததாக குற்றம் கூறி அவனைத் தண்டித்தும் அனுப்பினீங்களாம்.

அதிபர்:- நல்ல விசயம் ........ இப்படி இருங்கோ. ஆத்திரமும் அவசரமும் உண்மையை மறைச்சுப் போடும். உங்கட பிள்ளையில எங்களுக்கு எதும் கோபமிருக்கோ.

முருகேசு:- இல்லை ...............

அதிபர்:- அப்ப ஏன் நாங்கள் சும்மா தண்டிக்கப் போறம். விசாரிச்சுக் குற்றம் செய்தால் கண்டிப்போம்.

முருகேசு:- அந்த கிளாஸ் ரீச்சருக்கு எங்கட குடும்பத்தில ஒரு எரிச்சல் அதுதான் எனர மகனில் குற்றம் சுமத்தி அவமானப்படுத்த முயற்சிக்கின்றார்

நான் கேட்டுப் பார்த்தனான். ராகவன் தான் பைப்பை உடைச்சதாம் ரவியும் வேறு சிலரும் கண்டிருக்கிறார்கள்.

ரவி:- ஓம் சேர் ஓம் சேர்

முருகேசு:- எங்கட குடும்பம் கௌரவமான குடும்பம் ஐயா, எங்கட பரம்பரையிலையே தவறு செய்தது கிடையாது. ராகவன் குடும்பம் பிச்சைக்காரக் குடும்பம். அவன் செய்திருப்பான். நீங்கள் சரியாய் விசாரிக்கேல்லை.

அதிபர்:- ஐயா, இது பாடசாலை. இங்கு வசதிபடைத்தவன், வசதிகள் அற்ற ஏழைகள் என்ற பேதம் கிடையாது. நல்ல பிரஜைகளை உருவாக்கவது. கல்வியின் நோக்கம். அதற்காகச் சில மாணவரைக் கண்டிப்போம், ஏன் பாராட்டவும் செய்வோம்.

உங்கள் மகன் தவறு செய்தால் கண்டிப்போம் அவனை நல்வழிப்படுத்தவே அப்படிச் செய்தோம்.

முருகேசு:- என்ர செல்வாக்கென்ன அந்தஸ்தென்ன மற்றவையின்ர பிள்ளையள் மாதிரி என்ர பிள்ளையை நடத்தேலாது.
( ஆசிரியை மாலா ஒரு சிறிய மாணவனோடு உள்ளே வருகின்றார்)

மாலா:- வணக்கம் சேர் .........

அதிபர்:- வாரும் பிள்ளை மாலா, வாரும் ........ வாரும் ஏதாவது தேவையோ?

சிறுமி:- இந்த அண்ண தான் பைப் முறிச்சவர். இன்னொருத்தர் பக்கத்திலை நிண்டவர்.

அதிபர்:- தங்கச்சி இங்கை வாருங்கோ இந்த அண்ணா பைப் முறிச்சதை நீங்கள் கண்டனீங்களோ.

சிறுமி:- ஓம் நான் ......... கண்டனான். ஒருத்தருக்கும் சொல்லவேண்டாம் என்று, ரொபி வாங்கித் தந்தவர்.

அதிபர்:- (அர்த்தத்தோடு முருகேசரையும் ரவியையும் ஒருமுறை ஆழமாகப் பார்கிறார்.

மாலா:- சேர் ......... இன்று பாடம் தொடங்கும் முன் நற்பழக்கங்கள் பற்றி சொல்லும் போது பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தக் கூடாது என்று சொல்லி இங்கு யாரோ கூடாத பிள்ளைகள் பைப்பை உடைச்சுப் போட்டினம் என்று அதிபர் சொன்னவர் என்று சொன்னேன். இவள் எழும்பி உடைத்தவரைத் தெரியும் என்று சொன்னாள். அதுதான் உங்களிடம் கூட்டி வந்தனான்.

அதிபர்:- அதுவும் நல்லாய்ப் போச்சு எதிர்பாரமால் ஒரு அடையாள அணிவகுப்பு. இவள் சின்னவள் என்றாலும் கெட்டிக்காரி, நல்லவள் உண்மை பேசினதுக்கு ஒரு பரிசு ..................
(ஒரு கவர் பென்சில் பெட்டி)

சிறுமி:- தாங்யூ சேர் .......... (வாங்கிக் கொள்கிறாள்)

அதிபர்:- ஐயா, இப்ப உங்களுக்கு உண்மை விளங்கியிருக்கும் என்று நினைக்கிறன். விளக்கம் போதுமோ ................ இல்லை. (முருகேசு எழும்புகிறார்.)

அதிபர்:- என்ன ஒன்றும் பேசமால் போறியள்.

முருகேசு:- எல்லாம் விளங்குது. பைப் திருத்திய செலவை நான் தாறன். (வெளியேறுகிறார்.)

## காட்சி :- 03

ரவி:- இண்டைக்கு ரியூசனைக் கட்பண்ணுவம்.

கோபி:- ஓம் ரவி, படிப்பு படிப்பு என்று உயிரை வாங்கிறாங்கள். என்ன படிப்பு ....... என்ன படிப்பு.

ரவி:- ராகவனாலதான் எங்களுக்கு பெருந் தொல்லை.
அவன் சொல்லுறதெல்லாத்தையும் ரீச்சர் நம்புறா. நாங்கள் என்ன சொன்னாலும் நம்ப மறுக்கிறா.

கோபி:- அவனைப் பழிவாங்க எத்தனை திட்டங்கள் செயற்படுத்தினம். ஆப்பிழுத்த குரங்கு மாதிரி நாங்கள் தான் மாட்டுப்பட்டம்.

ரவி:- ஓம் கோபி பைப் உடைத்த கதையும் அம்பலத்துக்கு வந்திட்டுது எங்கட திட்டம் எல்லாம் புஸ்வாணமாய் போச்சு.

கோபி:- கெடுவான் கேடு நினைப்பான். சும்மாவே சொன்னவை.

ரவி:- ஓமோம் நீ அறப்படிச்சனி இப்பத்தான் நியாயம் சொல்லுறாய்.

கோபி:- இல்லை ரவி

ரவி:- ராகவனை நான் பழிவாங்காட்டில் நான் ரவியில்லை முருகேசுவுக்கு மகனுமில்லை.

கோபி:- 'உனக்கு மட்டுமல்ல எனக்கும் தான் அவனைக் கண்ணில காட்டேலாது. கொஞ்சம் கெட்டிக்காரன் என்ற தலைக்கனம் ரீச்சரும்

அவனைத் தான் தூக்கி தலையிலை வைச்சிருக்கிறா. உவனை எப்படியாவது மாட்டி விட்டால் தான் எங்களுக்கு நிம்மதி.

(வீதியில் ரவியும் கோபியும் ரியூசனுக்கு போகும் உடையில் நிற்கினம்)

ரவி:- அங்கை பார் வாறார். வரட்டும் இண்டைக்கு வேடிக்கை இருக்கு.

கோபி:- நல்ல சந்தர்ப்பத்தில தான் வாறார் வரட்டும் ....... வரட்டும்.

ராகவன்: கிட்டவாறான் வணக்கம் ரவி...... வணக்கம் கோபி என்ன இங்க நிக்கிறியள்.

கோபி ரவி:- அது சரி நீயேதோ இந்தப்பக்கம் அவசரமாய் போறாய் போல இருக்கு.

ராகவன்:- அம்மாவுக்கு சுகமில்லை மருந்து வாங்கப் போறன். நான் போட்டு வாறன்.

கோபி:- கொஞ்சம் நில்லன் கதைப்பம்.

ரவி:- ஏன் அவசரப்பட்டு ஒடுகிறாய்.

கோபி:- ராகவன் நீயேன் ரியூசனுக்கு வாறேல்லை எங்களைப் பார்த்தியா என்ன ஹாயாத் திரியிறம்.

ராகவன்:- எனக்கு பாடசாலையில ரீச்சர் சொல்லித்தந்தது விளங்குகிறது. அதாலை ரியூசனுக்குப் போவதில்லை.

ரவி:- ஓகோ .......... இவர் ஒரு சூராதி சூரர். சொன்னதெல்லாம் அப்படியே விளங்குது. டேய் ரியூசனுக்கு பணங் கொடுக்க வக்கில்லை என்று சொல்லன்.

கோபி:- சரியாய் சொன்னாய் ரவி. ராகவன் ஒரு மாதம் ரியூசன் காசு கொடுக்க உன்ர அம்மா அப்பாவால் முடியுமோ.

ராகவன்:- எங்களிடம் பணம் இருந்ததோ இல்லையோ. உங்கட மூளைக்க ஏற மறுத்தால் ரியூசன்லை காசைக் கொட்டுங்கோ எனக்கு அது தேவையில்லை.

வாழைத்தண்டிலை நெருப்புப்பற்றாது நல்லாய் தெரிய வேணும்.

ரவி:- என்னடா ! நாங்கள் வாழைத்தண்டோ (அடிக்க பாய்கிறான்) (கோபி தடுக்கிறான் )

கோபி:- சும்மா இரு ரவி. சண்டை பிடிக்கக் கூடாது. (ராகவன் விலகி செல்கிறான்).

ரவி:- இல்லை இண்டைக்கு உவனை சும்மா விடமாட்டன்.

கோபி:- சரி சரி அமைதியாய் இரு.
(ஒரு ஐடியா வந்தவனாய்)

ரவி:- நான் ஒரு வேலை செய்யப் போறன்.

கோபி:- என்ன வேலை?

ரவி:- நான் வெளிநாடு போகப் போறன் இஞ்சை நிண்டு இலங்கை சோதனை எடுத்து எல்லாப் பாடங்களிலும் குண்டடித்து குண்டு ரவி என்ற பட்டமும் வாங்க வேண்டி வரும். ராகவன்ர றிசல்ற்றோட தான் எங்களையும் ஒப்பிடுவார்கள். மானம் கப்பல் ஏறும். அதுக்கு முந்தி நாங்கள் பிளேன் ஏறினால் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இடமில்லாமல் போயிடும்.

பணத்தை உழைச்சு வந்து ராகவனுக்கு காட்டவேண்டும். அவனைத் தலைகுனிய வைக்கவேண்டும்.
நீயும் அப்படியே செய்.

கோபி:- நானும் அப்படித்தான் செய்யப் போறன். வெளிநாடு அனுப்பாவிட்டால் உண்ணாவிரதம் இருப்பன் என்று வெருட்டப் போறன்.

கோபி ரவி:- நல்ல ஐடியா நடைமுறைப்படுத்தலாம். இருவரும் போகிறார்கள்.
பின்னணியில் ...... பாடல் போகிறது.

தாயோடு அறுசுவைப்போம்
தந்தையோடு கல்வி போம்
சேயோடு தான் பெற்ற செல்வம் போம்.

## காட்சி :- 04

(முருகேசர், பார்வதி, நளாயினி )

முருகேசர் நோய்வாய்ப்பட்டவராக இருக்கிறார்.(கதிரையில்)

முருகேசு:- (இருமிக்கொண்டு) பிள்ளை .........நளா .......... பிள்ளை.... நளா .......

நளா:- ஏனப்பா? ஏதும் தேவையே
(ஆதரவோடு தலையைத் தடவுகிறாள்)

முருகேசு:- உந்த ...... மருந்துப் ......... போத்திலை ........ எடுபிள்ளை இருமல் கூடவாய் கிடக்கு.

நளா:- இந்தாங்கே அப்பா ........ குடியுங்கோ (மருந்தைக் குடித்தபின் நெஞ்சைத் தடவிக் கொள்கிறார். இருமல் சற்றுக் குறைகிறது. ஆயினும் இடைக்கிடை இருமுகின்றார்.)

முருகேசு:- பிள்ளை நளா ..... உனக்குத் துரோகம் செய்து போட்டன் ... பிள்ளை.

நளா:- அப்பா, ஏனப்பா அப்பிடி நினைக்கிறியள். எனக்கொரு குறையுமில்லை. நீங்கள் கவலைப்படுகிறதுதான் எனக்கு ஒரே குறையாக இருக்கு. நீங்கள் கவலைப் படாதையுங்கோ.

முருகேசு:- பார்வதி ......... பார்வதி ....................

பார்வதி:- என்ன கூப்பிட்டனிங்களே.

முருகேசு:- ஓம்......... ஓம் ......... மனங் கொதிக்குதப்பா ..... மனச்சுமை நீங்கக் கதைக்க வேணும் போல கிடக்குது.

பார்வதி:- அது சரியப்பா மனதைத் தளரவிட்டால் எல்லாம் முடிஞ்சுபோடும். தைரியமாக இருங்கோ இரண்டு சீவன் இருக்குதுகள் என்பதை மறந்து போகதையுங்கோ.

முருகேசு:- இல்லைப் பார்வதி ..... ஒரு 100 ரூபாவைப் பார்க்க வக்கில்லாத பிள்ளையள் சிலது வெளி நாட்டுக்குப் போய் உழைச்சு அனுப்பின காசிலை இங்கை பங்களாவும் கட்டி காசுக்கு மேலை புரளுதுகள்.

பார்வதி:- அதுகளுக்கென்ன ஆரும் புரளட்டுங் கண்டியளோ எங்களுக்கேன் அந்த விசயமெல்லாம்.

முருகேசு:- ஏன்ர ஏகபுத்திரன் போறதுக்கு 10 லட்சத்தை தாரைவார்த்துத்தான். போனபின்பு அவனுக்கு காசு அனுப்பவேண்டி வந்தது.

பார்வதி:- அது எங்களுக்கு மட்டுமோ உதைப்போல கனபேர் இருக்கினம்.

முருகேசு:- இல்லைப் பார்வதி சதம் சதமாய் சேர்த்த பணம் லட்சம் லட்சமாய் போட்டுது. இந்த வீட்டையும் ஈடுவைச்சுத்தான் காசு அனுப்பினாங்கள் தவணை முடிஞ்சுது காசைக் கட்டட்டாம் அல்லது வீட்டை விடட்டாம்.
(மகள் உள்ளே வந்து)

நளாயினி:- அப்பா நாங்கள் கொட்டில் கட்டிக் கொண்டு இருப்பம் கவலைப்படாதையுங்கோ.

முருகேசு:- பிள்ளை கொண்ணை இப்ப போதை வஸ்த்துக்கு அடிமையாயப் போய்விட்டானாம். எல்லோரும் கதைக்கிறாங்கள் தலை நிமிர்ந்து நடக்கமுடியல்லை.

நளாயினி:- அப்பா அது பொய்யாயிருக்கும்.

முருகேசு:- இரண்டு மூன்று தடவை பொலிசிலும் பிடித்து அடைச்சவங்களாம்.

நாளயினி:- ஏனப்பா நீங்கள் அதிகமாகக் கவலைப் படுகிறியள்.

முருகேசு:- கவலைப்படாமல் என்ன பிள்ளை செய்யிறது. நாங்கள் இருந்த இரைக்கு நடுத்தெருவில நிக்கப்போறம் என்று நினைத்தால் கவலை வராதே பிள்ளை.

பார்வதி:- இந்தருங்கோ அப்பா இந்தத் தேத்தண்ணியைக் குடியுங்கோ
(சிறிது சிறிதாகக் குடிக்கிறாா் குடித்துவிட்டு கோப்பையை வைக்கிறார்)

குரல்:- (மேடைக்குப் பின்னால் இருந்து ஒரு குரல்)
பிள்ளை நளா இந்தா பிள்ளை பேப்பர் இதிலை போட்டுக் கிடக்கு.

முருகேசு:- அந்தப் பேப்பரை ஒருக்க எடுபிள்ளை (பார்த்துவிட்டு ஒரு குறிப்பிட்ட பகுதியை)

போதைவஸ்து பாவனையால் உடல் இயங்க மறுத்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்டார்.

போதைப் பொருள் பாவித்ததால் நரம்புகள் பாதிக்கப்பட்டு உடல் இயங்க முடியாத இலங்கையர் ஒருவர் ஐரோப்பிய நாட்டிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். நேற்று பிற்பகல் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த இவர் போதைப் பொருள் வர்த்தகத்திலும் ஈடுபட்டார் என அந்நாட்டு வெளியுறவு அமைச்சின் செயலாளர் அறிவித்தார்.

மேற்குறிப்பிட்ட நபர் பேரூரைச் சேர்ந்த ரவி என்பவராவார்.

முருகேசு:- ம்.......... ஆ..........(ஏக்கத்தோடு அவர் உயிர் பிரிகிறது)

நள்ாயினி:- அப்பா ............... அப்பா...............

பார்வதி:- தெய்வமே எங்களைவிட்டுட்டு போய்விட்டியளே (அழுகிறார்கள்)

மெல்லிய சோக இசை பின்னணி (திரைமூடப்படுகிறது.)

## காட்சி :- 05
### (ஒரு சிறு காட்சி)

பார்வதி, ரவி, நளாயினி, அயல்வீட்டுக்காரி

ரவி பொம்மைபோல மெதுவாக நடப்பான். தாய் அவனைக் தாங்கலாக பிடித்து வந்து கதிரையில் உட்காரவைக்கிறாள். விறைத்த பார்வையுடன் அவன் மெல்ல மெல்ல நடக்கின்றான்.

பார்வதி:- பிள்ளை........ பிள்ளை சாப்பாட்டைக் கொண்டுவாரும்.

நளாயினி:- (சாப்பட்டுத் தட்டுடன் வந்து தாயிடம் கொடுத்து விட்டு தமயனைப் பார்த்த வண்ணம் நிற்கின்றாள்.)
இந்தாருங்கோ அம்மா ....................

பார்வதி:- (சாப்பாட்டைத் தீத்திக் கொண்டு அழுகையுடன்) உனக்கு மூன்று வயதில சாப்பாடு தீத்தேக்கை எவ்வளவு சந்தோசப்பட்டனான்.இப்ப 35 வயதிலும் சாப்பாடு தீத்த வேண்டி வந்திட்டுதே.

(தீத்தி முடித்துக் கோப்பையை வைக்கிறாள்.)

கோமளம்:- பார்வதி ............. பார்வதி ............
(கூப்பிட்டபடி உள்ளே வருகிறாள்)

பார்வதி:- ஓம் .............. வா ....... வா................

கோமளம்:- என்ன உங்கட வீடும் ஏலம் விட நோட்டீஸ் ஒட்டியாச்சாம் கேள்விப்பட்டன்.

பார்வதி:- (விக்கி விக்கி அழுகிறாள்)
எங்களை அந்தச் சந்நதி முருகன் தான் காப்பாற்ற வேண்டும்.

கோமளம்:- எல்லாம் நல்லாய் நடக்கும் கவலைப்படதை நான் ஒரு விசயம் சொல்லத்தான் வந்தனான்.

பார்வதி:- எ......... ன்.......... ன?

கோமளம்:- உவர் கிட்டினற்ற மகன் ராகவனைத் தெரியுந் தானே உவன் ரவின்ரை வயது தான்.

பார்வதி:- ஓம் ..........ஓம்

கோமளம்:- அவன் டாக்குத்தருக்குப் படிச்சு ஸ்கொலசிப்பில வெளிநாடுகளிளை போய்ப் படிச்சவனாம் நரம்பு வைபித்தியத்திலை மகா சூரனாம் உவன் ரவியைக் கொண்டு போய்க் காட்டன்.

பார்வதி:- (கைகளைச் சந்நிதிப்பக்கம் நீட்டியபடி)
சந்நிதி முருகா ஏதும் நல்ல வழியைக் காட்டு.

**காட்சி :- 06**

Dr.ராகவன், நேஸ், பார்வதி, ரவி, நளா

வையித்தியசாலை Dr.ராகவன் மேசையில் கம்பீரமாக உட்கார்ந்திருந்து மேசை மணியை அழுத்துகின்றார். நேஸ் ரவியையும் தாயையும் சகோதரியையும் உள்ளே அழைத்துக் கொண்டு வருகின்றாள்.

(ரவி பதுமை மாதிரி நடக்க வேண்டும் )

ராகவன்:- (அதிர்ச்சியுடன்) ரவி ……….. அம்மா ……… நீங்களா …… என்ன நடந்தது.

பார்வதி:- (விக்கி விக்கி சிறிது அழுதுவிட்டு) பணம் கூடியதால் வந்த பிரச்சினை ஐயா! வெளிநாடுகளுக்கு உழைக்கப் போனான் நோயை உழைச்சுக் கொண்டு வந்து நிற்கிறான்.

Dr.ராகவன்:- கவலைப்படாதையுங்கோ. (நேசுக்கு கையால் கட்டளையிடுகிறான் படுக்கையில் ரவியை படுக்க வைக்குமாறு)

நேசும் பார்வதியும் சேர்ந்து படுக்கவைகிறார்கள். Dr.ராகவன் பரிசோதித்துப் பார்க்கிறார்.

பார்வதி ஆர்வத்துடன் Dr ஐ பார்க்கிறார்.

Dr.ராகவன்:- உடனடியாக ஒன்றும் செய்யயேலாது ஒரு மாதமவாது செல்லும் சிலவேளை இது மாறலாம்.

பார்வதி:- சந்நிதி முருகா என்ர பிள்ளையை காப்பற்று ……. உனக்கு கற்பூரச் சட்டி எடுப்பன்.

Dr.ராகவன்:- அம்மா நீங்கள் போய் ஒவ்வொரு நாளும் வரவேணும் எண்டில்லை நாங்கள் எல்லாம் பார்ப்பம். இடைக்கிடை வந்து பார்த்துக் கொண்டு போங்கள்.

நோயாளி படுத்திருக்கின்றான் எல்லோரும் போகின்றனர்(நேஸ் நிற்கின்றார்) (நாட்கள் நகர்வதைக் காட்ட Dr பயிற்சி மருந்து கொடுப்பதாக ஒரு பாவனை. 2 அல்லது 3 தடவை பாவனை முடிந்த பின் ரவி தன் கையை மெதுவாக அசைக்கின்றான். கால்களையும் அசைக்கின்றான்.

தாயும் சகோதரியும் இடையில் ஒரு முறை வந்து போவதாகக் காட்டவேண்டும்)

Dr.ராகவன்:- (மேசையில் உட்கார்ந்திருக்கின்றார்) ரவி இங்கை நடந்து வாரும் பார்ப்பம். (மெதுவாக இறங்கி சிறிய தளம்பலோடு Dr. நோக்கி வருகின்றான். மீண்டும் கட்டிலுக்கு நடக்கின்றான். சற்று நிதனமாக நடக்கத் தொடங்குகின்றான். பார்வதி நளாயினியும் உள்ளே வருகின்றனர்.

பார்வதி:- (Dr ஐப் பார்த்து வணங்கியபடி) நீங்கள் கண் கண்ட தெய்வம் ஐயா.

Dr.ராகவன்:- (அதனைப் பாவனையால் மறுக்கிறார்)

ரவி:- (திடீரென Dr.ராகவனின் காலடியில் விழுகின்றான்)
ஐயா ........................

Dr.ராகவன்:-(விலகி நின்று கொண்டு)
இது தேவையற்ற விடயம் நான் என்னுடைய கடமையைச் செய்தேன்.
ரவி என்னை ஐயா என்று சொல்ல வேண்டாம்.

ரவி:- Dr.ராகவன் நான் படிக்கும் போது உனக்கு எதிராய் எத்தனை திட்டங்கள் தீட்டினேன். உனக்கு அடிவாங்கித்தர முயற்சித்தேன். எனது பொறாமை பெரும் சுவலையாய் விட்டெரிந்தது.

Dr.ராகவன்:-அது சிறுவயதில் நடந்தது.

ரவி:- இல்லை ராகவன் இல்லை படிப்பு ஏற மறுத்தது. வெளிநாட்டுக்குப் போக அப்பாவுடன் அடம்பிடித்தேன். ஏஜென்சிக்கே எமது சொத்தினை பாதி கொடுக்க வேண்டி வந்திட்டுது.

Dr.ராகவன்:- நடந்ததை எண்ணி கவலைப்பட்டு என்ன செய்யிறது.

ரவி:- இங்கை கோழியும் குஞ்சுகள் மாதிரி அப்பா அம்மா சகோதரிகள் உறவினர்கள் அயலவர் என்று கூட்டுறவுவோடு வாழ்ந்த எமக்கு ஐரோப்பாவில் சுதந்திர வாழ்க்கை வாழ முடியும்.

குடும்ப இறுக்கம் இல்லை சுதந்திர மாகச் செயற்பட்டோம. போதைக்கு அடிமையானோம். மனம் போன போக்கில் போனோம்.
வாழ்வின் அந்தத்திற்கே போய் விட்டோம்.

Dr.ராகவன்:-இப்போது மீண்டு வந்துவிட்டாய் தானே.

ரவி:- மீண்டு விட்டேன் ஆம் மீண்டு விட்டேன்.
ஒரு ஒரு விசயத்தை நன்றாக உணர்ந்து கொண்டேன்.

கல்வியும் எங்கடை தமிழ் கலாச்சாரமும் எமது வாழ்க்கையின் உயிர் நாடி. அதவாது ஆணிவேர். இவை இரண்டையும் தவறவிடுவோமாயின் ஆணிவேர் அற்ற மரம் போலப் பாறிவிழ வேண்டும்.

என்னுடைய கதையும் அதுதான் நான் கல்வியையும் தேடவில்லை
கலாச்சாரத்தையும் மறந்தேன். முடிவு...
தந்தையைப் பறிகொடுத்தேன்.
வாழ்க்கையை இழந்தேன்.

Dr.ராகவன்:-ரவி பள்ளிக் கூடத்திலதான் நீ படிக்கவில்லை ஆனால் கல்வியும், தமிழ்காலச்சாரமும் தான் எமது வாழ்க்கையின் ஆணிவேர் என்றாயே அதை உணர்வதற்கு நிறையக் கற்க வேண்டும்.
ஆகவே நீ படிச்சிட்டாய்.

ரவி:- நான் விட்ட தவறுக்கொல்லாம் பிராயச்சித்தம் தேடப் போறன்.

**சுபம்.**

கல்லூரி அன்னையின்
மலர் சிறப்புற
உதவிய
அன்புள்ளங்கள்,
அச்சு மத்திய தீபத்திற்கு
மெருகூட்டிய
நல்லிதயங்கள்,
நேயமிகு வாசகர்கள்
அனைவருக்கும்

# நன்றிகள்





அச்சு மத்தியதீபம் சஞ்சிகை சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

# சிதம்பரப்பிள்ளை
# பொத்தகசோலை

உங்களுக்குத் தேவையான புத்தகங்கள்,
அப்பியாசக்கொப்பிகள், காகிதாதிகள்
அனைத்தையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் விசேட விலைக்கழிவுடன்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

T. P.: 021 2263223


அச்சு மத்திய தீபம் சிறப்பாக அமைய வாழ்த்தும்

# செல்வாஸ் காட்வெயர்

கட்டிடநிர்மானப்பொருட்களையும், துவிச்சக்கரவண்டி,
மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களை தரமானதாகவும்
குறைந்தவிலையிலும் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்



## செல்வாஸ்
## காட்வெயர்



பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால்.

பா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் "அச்சு மத்திய தீபம்" சஞ்சிகை சிறப்புற வெளிவர உளமார வாழ்த்துகின்றோம்

# செலிங்கோ ஆயுள் காப்புறுதி

செலிங்கோ லைஃப் காப்புறுதி நிறுவனமானது 179 கிளைகளுடன் நாடளாவிய ரீதியில் முதன்மை வகிக்கின்றது.
இவ் நிறுவனத்தின் முன்னோடி செயற்திட்டங்களில் ஒன்றாக "பிரணாம புலமைப்பரிசில்" வருடாந்தம் வழங்கப்படுகின்றது

நாளைய தலைவர்களுக்கு! செலிங்கோ "பிரணாம புலமைப்பரிசில்"

| கல்வித் தரங்கள் | புலமைப்பரிசில் எண்ணிக்கை | பணப் பரிசில்கள் |
|---|---|---|
| ஆண்டு 5 | 25 | 90,000/= |
| G.C.E. O/L | 25 | 72,000/= |
| G.C.E. A/L | 25 | 120,000/= |
| G.C.E. A/L 2nd,3rd,4th | 75 | 10,000/= |
| G.C.E. A/L Islmd | 04 | 25,000/= |
| Merit | 10 | 35,000/= |



மேற்படி கல்விக்கான கொடுப்பனவாக ரூபா 300,000. மாவட்டங்கள் தோறும் இலவசமாக வழங்குவது செலிங்கோலைஃப் மட்டுமே. அத்துடன் இந்நிறுவனத்தின் சமூகரீதியான பொறுப்புக்களாக குழாக்கிணறுகள், பாடசாலைக் கட்டடங்கள், இலவச வைத்திய முகாம்கள், பொது மலசல கூடங்கள் போன்றனவாகும். இதனால் ஆசியாவிலேயே "சமூகப் பொறுப்பு வாய்ந்த முதன்மை நிறுவனம்" என்ற பெயரையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறது.

மேற்படி சகலவிதமான விளக்கங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்

சமூகப்பொறுப்புக்கான விருதுகள்



## செலிங்கோ லைஃப்
## அச்சுவேலிக் கிளை
## 021 3737911, 077 2247738






" அச்சு மத்திய தீபம் " சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

# சாதன் இயந்திர மர அரிவு, மரவேலைத் தொழிற்சாலை

உங்களுக்குத் தேவையான அளவுகளில் மரங்களை
அரிந்து பெற்றுக்கொள்ளவும், உங்கள் இல்லங்களுக்கு அழகு
சேர்க்கும் கூரைவேலை, மட்டசீர்வேலை மற்றும்
சமையலறை அலுமாரிகள், தளபாடங்களை அழகுறச்
செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே இடம்

சந்நிதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.

காளிகோவிலடி,
பத்தமேனி, அச்சுவேலி.

உரிமையாளர்:
இ. தங்கவேல் (சொக்கண்ணை)

"அச்சு மத்திய தீபம்" சிறப்புற வெளிவர வாழ்த்தும்.

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை

பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள்,
அப்பியாச புத்தகங்கள், நாவல்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் விசேட
கழிவுடன் நியாயவிலையிற் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

*234, கே. கே. எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T. P. 021 2222573

அச்சு மத்திய தீபம் சிறப்பாக வெளிவர வாழ்த்தும்



# விஜிதா அரிசி ஆலை

## வல்லை வீதி,
## அச்சுவேலி.

அச்சு மத்திய தீபம் சஞ்சிகை
மேலும் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# பிறவுண்ஸ் அன் கம்பனியின்

TAFE உழவு இயந்திரம், EXIDE பற்றரி வகைகள், போட்டோக்கொப்பி இயந்திரங்கள், ரோனர் வகைகள் என்பவற்றையும் அக்ரோ ரெக் நிறவனத்தின் இரு சக்கர உழவு இயந்திரங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மேலும் CIC தயாரிப்புக்களான உரவகைகள், கிருமிநாசினி வகைகள், தண்ணீர்த்தாங்கிகள், கால்நடைத் தீவனங்கள், பெயின்ற் வகைகள் என்பவற்றையும்

ஏனைய கெல்லீங், பாம்கெமி, மக்ரட்ஸ் கம்பனிகளின் கிருமிநாசினி வகைகள், உரவகைகள், கால்நடை மருந்துகள் என்பவறந்றையும் வீட்டுப்பாவனைக்குத் தேவையான மளிகைப் பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் ஒரே கூரையின் கீழ் நியாயவிலையில் பெற்றிட தலைசிறந்த நிறுனம்





# பவானி களஞ்சியம்

இராச வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

**கஜமுகா றேட்சென்றர்**
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ மகாவிஷ்ணு**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

அச்சு மத்திய தீபம் சஞ்சிகை
மேலும் மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# ASEER VANIGA NILAIYAM

பாடசாலை உபகரணங்கள், வாழ்த்து மடல்கள், காகிதாதிகள்,
அலுவலக உபகரணங்கள் என்பனவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் நியாய விலையில் தரமான பொருட்களை
நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

## ஆசீர் வணிக நிலையம்

202A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 2225485
தொலைநகல்: 021 2222842

"அச்சு மத்திய தீபம்" மலர் சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.



# ஸ்ரீ முத்துப்பிள்ளையார் பல்பொருள் வாணிபம்

பலசரக்குப் பொருட்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் குறைந்தவிலையில்
இலகுவாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்

## ஸ்ரீ முத்துப்பிள்ளையார் பல்பொருள் வாணிபம்

பிரதான வீதி,
அச்சுவேலி.

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் "அச்சு மத்திய தீபம்" சஞ்சிகை சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

**மாணவர்களுக்குத் தேவையான பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், அனைத்தையும் ஒரே கூரையின் கீழ்ப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்**

# ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

# ALL CEYLON DISTRIBUTORS

**No.212, 214, K.K.S. Road,**
**Jaffna**

"அச்சு மத்திய தீபம்" சஞ்சிகை மேன்மேலும் மலர வாழ்த்துகிறோம்.

# ஷாம்பவி பதிப்பகம்

சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளைச் சிறந்தமுறையில் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துத் தருபவர்கள்.

# *Shampavi Printers*

## Neervely & Jaffna.

276, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 2224143

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
077 6184425

யா/ அச்சுவேலி மத்திய கல்லூரியின் "அச்சு மத்திய தீபம்" சஞ்சிகை
சிறப்புற மலர வாழ்த்துகின்றோம்.

NSB

# தேசிய சேமிப்பு வங்கி
# யாழ்ப்பாணம்

தேசிய சேமிப்பு வங்கியின் RUN SAHANA தங்க ஆபரண அடகுச்சேவை மூலம் தங்கள் உடனடி பணத்தேவையை பூர்த்தி செய்யமுடியும். குறைந்த வட்டியுடன் கூடிய கடன் தொகையை துரித கதியில் பெற்றிடலாம்.

## வட்டி வீதம் - 15% மட்டுமே

## வாழ்க்கை முழுவதற்குமான வரப்பிரசாதங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்.



சின்னஞ்சிறார்களுக்கான ஹப்பன் புஞ்சிஹப்பன் கணக்குகள்

வைப்புகளுக்கு மிகக் கூடிய வட்டி

ரூபா 1,000,000/- பெறுமதியான ஆயுள் காப்புறுதி

சுய தேவைக் கடன்கள் மற்றும் வைப்புகளுக்கெதிரான கடன் வசதிகள்

இலவசமான A T M அட்டைகள்

குறைந்தபட்ச வைப்பாக ரூபா 1,000/ 00 த்துடன் கணக்கை ஆரம்பிக்கவும்

உங்கள் வைப்புகளுக்கும் வட்டிக்கும் முழுமையான அரசாங்க உத்தரவாதம்

NSB

தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம் கிளை

"அச்சு மத்திய தீபம்" சிறப்புற வெளிவர வாழ்த்தும்.

BOC

## இளம் சந்ததியினரின் கனவுகளைநனவாக்கும்

# இலங்கை வங்கி 18 + இளைஞர் சேமிப்பு கணக்கு

**இலங்கையின் இளம் சந்ததியினருக்குத் திடமான எதிர்காலத்தை உருவாக்க இலங்கை வங்கி அன்பளிப்புச் செய்யும் விசேட கணக்கு.**

### 18+ இளைஞர் சேமிப்புக் கணக்கு

வயது 18 தொடக்கம் 25 வரையான சகல இலங்கையர்களும் இக்கணக்கை ஆரம்பிக்கலாம். அத்துடன் அதன் விஷேட அனுகூலங்களும், சலுகைகளும் 35 வயது வரை கிடைக்கும்.

*தேவையான ஆகக்குறைந்த வைப்புத்தொகை ரூ 200/- ஆகும்.*
*சாதாரண சேமிப்புக் கணக்குகளை விட வட்டி அதிகம்.*
*விசேட அநுகூலங்களும் சலுகைகளும் உண்டு.*
*உயர் கல்விக்கான புலமைப்பரிசில்*

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டில் ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலத்தினுள் பேணப்படும் ஆகக்குறைந்த நிலுவை ரூபா 5,000/-க்கு ரூபா 30,000/- பெறுமதியான புலமைப்பரிசில் வழங்கப்படும்.

**இலவச வீசா இலக்ரோன் மற்றும் BOC - ATM அட்டைகள்**

இலங்கையில் போன்றே வெளிநாட்டிலும் இவ் அட்டைகளை உபயோகிக்கலாம். இவ் இரண்டுவகை அட்டைகளை கொண்டு எந்நேரத்திலும் பணம் மீளப்பெற முடியும். அத்துடன் வீசா இலக்ரோன் அட்டைகள் மூலம் வர்த்தக நிலையங்களில் பண்டங்கலளயும் சேவைகளையும் கொள்வனவு செய்யலாம்.

**BOC கடன் அட்டை**

உங்களது நிரந்தர வருமானத்துக்கேற்ப கடன் அட்டைகளை பெற முடியும்.
திருமணப்பரிசாக பொற்காசொன்று
திருமணத்தினத்துக்கு முன்பு 1 வருட காலமாக கணக்கில் ரூ 50,000/- ஐ பேணியிருப்பின் திருமணப்பரிசாக 24 கெரட் பொற்காசு வழங்கப்படும்.

**முதற் குழந்தைக்கு பரிசுகள்**

குழந்தை பிறப்பதற்கு முன்பு கணக்கில் 1வருட காலம் ஆகக் குறைந்த நிலுவை ரூபா 10, 000/- ஐ பேணியிருப்பின் முதலாவது குழந்தைக்கு வங்கிரூபா 500/- ஐவைப்புச் செய்து "ரன் கெகுளு" கணக்கொன்றை பரிசாக ஆரம்பித்து வழங்கும்.

**கடன் வசதிகள்**

இலங்கை வங்கியின் பல்வேறு கடன் திட்டங்களிலிருந்து 18+ கணக்கு வைத்திரப்பவர்களுக்கு கடன்


வசதிகளும், கடன் வழங்குகையில் அவர்களுக்கு முன்னுரிமையும் அளிக்கப்படும்.

**இலவச காப்புறுதி**

*10 பாரிய நோய்கள்உட்பட விபத்து காரணமாக 2 தினங்களுக்கு மேல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றால் வைத்தியசாலை செலவுகள் வழங்கப்படும். தனியார் வைத்தியசாலையாயின் அகக்கூடியது ரூபா 100,000/- ஆகும். அரச வைத்தியசாலையாயின் ரூபா 600/- ப்படி 30 தினங்களுக்கு ஆக்கூடியது ரூ 18,000/- ஆகும்.*

*பகுதி இயலாமையின் பொது கணக்கின் நிலுவையை போல் 10 மடங்கு (அகக்கூடியது ரூபா 500, 000/ க்கமைய இழப்பின் சதவீதம்.*

*முழு நிரந்தர இயலாமை நிலைக்குள்ளானால் அல்லது கணக்கை வைத்திருப்பவர் மரணித்தால் கணக்கிலுள்ள குறைந்த நிலுவையை போல் 10 மடங்கு (ஆகக்கூடியது ரூபா 500, 00/-) (சம்பவம் நிகழ்ந்த திகதிக்கு முன்பு 6 மாத காலத்தில் கணக்கின் அகக் குறைந்த நிலுவையாக ரூபா 10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகை பேணப்பட்டிருக்க வேண்டும்.*




எமது பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக்கும் நோக்கில் "சிசு உதான" சேமிப்புக் கணக்கை எமது பிள்ளைகளுக்கு மக்கள் வங்கி வழங்குகின்றது.

5-18 வரை வயதுள்ள பிள்ளைகளுக்கு ரூ.100/= இனை வைப்புச் செய்து "சிசு உதான" கணக்கைக் ஆரம்பிக்கலாம்.

பாடசாலைகளில் மக்கள் வங்கியின் "சிசு உதான" வங்கிப் பிரிவில் அல்லது வேண்டியதொரு மக்கள் வங்கிக் கிளையில் "சிசு உதான" கணக்கை ஆரம்பிக்கலாம்.

சேமிப்புத் தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகள்.

உழைக்கும் போதே எதிர்காலத்திற்காக சேமியுங்கள்.




வளமுடன் வாழ வழி அமைத்திடும் YES கணக்கின் பயன்பாடுகளும் அனுகூலங்களும்

01. ஆரம்ப வைப்புத்தொகை – ரூபா 2000/- வட்டி வீதம் 6.5% ATM Card வசதி

02. ரூபா 25000/= இற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு மேலதிக 1% போனஸ் வட்டி.

03. ரூபா 15000/= இற்கு மேற்பட்ட வைப்புகளுக்கு தாகுகளற்ற நிலையான கட்டளை ஏற்பாடுகள்.

04. சலுகை வட்டியுடனான கடனட்டை வசதிகள்.

05. சலுகை வட்டியில் குத்தகைக்கடன்.

06. வெளிநாட்டுப் பயணத்திற்கான இலகுவழிக் கடன்கள்.

மேலதிக விபரங்களுக்கு –
அருகிலுள்ள மக்கள் வங்கிக் கிளையில்
தொடர்பு கொள்ளுங்கள்.

மக்கள் மனமறிந்த வங்கி

# மக்கள் வங்கி

அச்சுவேலி மத்திய கல்லூரியின் "அச்சு மத்திய தீபம்" சஞ்சிகை சிறப்புற
வெளிவர உளமார வாழ்த்துகின்றோம்

# அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் [ம-து]

பதிவு இல J/1574 19.02.1972

## சங்கத்தின் சேவையில்

### கூட்டுறவு புத்தக நிலையம்
### Co-op Book centre

ஊடாக மலிவு விலையில்
அப்பியாசக் கொப்பி மற்றும் பாடசாலை
உபகரணங்கள் வழங்குதல்,
அங்கத்தவர்கள் உள்ளீடுகள் மலிவு
விலையில் பெற்றுக் கொடுத்தல்

### கல்விச் சேவை

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான
கொடுப்பனவு வழங்குதல்
ஆசிரியர், மாணவர்களுக்கான
சீருடை வழங்குதல்
புலமைப்பரிசில் வழங்குதல்
மேற்படிப்பிற்கான உதவுதொகை வழங்குதல்
பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்

### பணப்பரிமாற்ற சேவை

### Western Union Money Transfer

அச்சுவேலியில் முதல் முறையாக உலகம்
முழுவதிலிருந்தும் பணப்பரிமாற்றம்

WESTERN UNION
மணி டிரான்ஸ்பர்

MMBL Money Master

### கிராமிய வங்கி சேவை

நிலையான வைப்பு கடன் சேவை
ஓய்வூதிய சேவை
பரிசில் திட்டம்

### மகளிர் சேவை

தையல், மனைப்பொருளியல்
பயிற்சி வழங்குதல்,
சுயதொழில் ஊக்குவிப்பு வழங்குதல்
கைத்தொழில் உற்பத்தியை ஊக்குவித்தல்

### போட்டோப் பிரதி
(Photo Copy Digital)

### கவரிடுதல்
(laminating)

### அங்கத்தவர் நலத்திட்டம்

ஓய்வூதியம் வழங்குதல்
விபத்து மரணக் கொடை வழங்குதல்
ஓய்வுபெற்ற அங்கத்தவர் கௌரவிப்பு
விழா நடத்தல், சிறந்த அங்கத்தவர்
கௌரவிப்பு, கல்வி பயிற்சி வழங்குதல்


ஷாம்பவி பதிப்பகம், 276, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம், T.P.:- 021 2224143, 077 6184425. e-mail:- shampavi2009@gmail.com